பேராசிரியர், டாக்டர்

அ. சிதம்பரநாதச் செட்டியார் மணிவிழா மலர்

7-9-1967



WITH
THE
BEST
COMPLIMENTS
FROM

MADURA
SOUTH
INDIA
CORPORATION
PRIVATE
LTD

51, EAST AVANI MOOLA STREET, MADURAI - 1

உ
சிவமயம்

தமிழ்ப்பேராசிரியரும்
மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வரும்
சென்னைச் சட்டமன்றத்து மேலவையுறுப்பினரும்
செந்தமிழ்க்காவலருமான

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் M. A., Ph. D.

o

மணிவிழா மலர்

o

வெளியிடுபவர் :

தமிழகத்துக் கல்வி-தொழில் அமைச்சர்

நாவலர் மேதகு. இரா. நெடுஞ்செழியன், M.A., அவர்கள்

நாள் : 7—9—1967

நிகழ்ச்சி நிரல்

7—9—67 வியாழக்கிழமை

மாலை 6-15 மணிக்கு மங்கல இசை

திரு. N. P. R. ஐயாச்சாமி குழுவினர்

இரவு

7-00 இறைவணக்கம் : **S. பங்கஜம், இசை ஆசிரியை**

7-05 வரவேற்புரை : **டாக்டர் லலிதா காமேசுவரன் M.B.B.S., Ph.D. (Lond) அவர்கள்**

7-15 தலைமையுரை : **ராஜா. சர். மு. அ. முத்தையாச் செட்டியாரவர்கள் Kt.B.A., D.Litt., M.L.C.,**

7-25 டாக்டர் அ. சி. செட்டியாரவர்களுக்குப் பொன்னுடை வழங்கல் : **கலைத்தந்தை கருமுத்து. தியாகராசச்செட்டியார் அவர்கள்**

7-35 திருமதி. அ. சி. பெரியநாயகியம்மையார்க்குப் பட்டாடை வழங்கல் : **கலையன்னை கருமுத்து. இராதா தியாகராசன் அவர்கள் B.Sc.,**

7-45 செட்டியார்க்குச் சிவநெறித் திருமடங்களின் அன்பளிப்பு :

7-55 மலர் வெளியீடு : **நாவலர் இரா. நெடுஞ்செழியனவர்கள், M.A.,** தமிழகக் கல்வி-தொழிலமைச்சர்

8-05 கேடயம் வழங்கல் : **மேதகு K. A. மதியழகனவர்கள் B.A.,** தமிழக உணவமைச்சர்

8-15 தியாகராசர் கலைக்கல்லூரி மாணவர் அன்பளிப்பு.

பாராட்டுதல்

8-20 **சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானமவர்கள், M.L.A.,**

8-30 **திரு. க. அன்பழகனவர்கள், M.A.,** பாராளுமன்றவுறுப்பினர்

8-40 **முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதமவர்கள்**

8-50 **தமிழவேள் பி. டி. இராசனவர்கள்**

9-00 டாக்டர் செட்டியாரவர்கள் மறுமொழி

9-10 நன்றி நவிலல் : **ஆவி. க. தியாகராசச் செட்டியார் அவர்கள்**



பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		
வாழ்த்துரைகள்		
வரவேற்புரை		
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் வாழ்க்கை வரலாறு	...	1
Role of Educational Agencies in Promoting National Integration Prof. Thiru S. Armuga Mudaliar, M.A., B.O.L., L.T.	...	4
உழைப்பால் உயர்ந்தவர் — பேராசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரம், M.A.	...	9
வழிபாட்டுக்கு உகந்த மொழி — திரு. கீ. இராமலிங்கனார்	...	10
தொல்காப்பியர் — பவணந்தியர் எடுத்துவைப்பு முறை — தமிழ்ப் பெரும் புலவர் "ஆபிரகாம்" அருளப்பன், B.A.	...	14
செந்தமிழ்ச் செம்மல் — பேராசிரியர் Dr. தா. ஏ. ஞானமூர்த்தி, M.A., Ph.D.	...	18
இதோ சேரன் செங்குட்டுவன் ! — பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம்.ஏ.,	...	20
செயற்கரிய செய்வார் — டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., Ph.D.	...	22
தமிழ் பண்பாளர் — கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ்.	...	25
செயல் வீரர் செட்டியார் — பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், M.A., M.LITT.	...	28
தூதுக்கு 'ஏ. சி.' — "சோமலெ"	...	30
தமிழ் பரப்பிய சான்றோர் — வித்துவான் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார்	...	32
தலையாயத் தமிழ்த் தூதர் — பேராசிரியர் வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்.	...	34
செட்டியார் சிறப்பியல்பு — T. R. பஞ்சநதம் பிள்ளை	...	35
சித்திரனும் சிதம்பரநாரும் — பாலபண்டிதம் வித்துவான் பாப்பு இராமநாதன்	...	36
தமிழ்த்தாயின் தவப் புதல்வர் — வித்துவான் நா. இராமையா பிள்ளை, M.A.	...	39
செந்தமிழ்க் காவலர் — பேராசிரியர் நா. சஞ்சீவி, M.A., M.LITT.	...	42

வையை மணலிலும் பல்லாண்டு வாழ்க
— கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் ... 44
நிமிர் ஆசிரியர் — பண்டித இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M.A., M.E.S. ... 46
தலை மாணாக்கர் — R. இராசரத்தினம் அம்மையார், M.A., L.T. ... 50
நேர்மையான ஆட்சியாளர் — டாக்டர் மெ. சுந்தரம், M.A., M.LITT, Ph.D. ... 52
நெருனர் — டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., M.O.L., Ph.D. ... 58
மணிவிழா வாழ்த்து — நா. பாலுசாமி, M.A., M.LITT. ... 61
நல்லாசிரியர் — மு. எழுமலை, எம்.ஏ., பி.ஓ.எல்.,எல்.எல்.பி. ... 63
வையை மணலிலும் பல்லாண்டு வாழ்க
— கருமுத்து தி. சுந்தரம் செட்டியார், B.Com. ... 64
வரவேற்பு — பண்டித மீ. கந்தசாமிப் புலவர் ... 65
ஆன்ற புகழ் வாழி — பேராசிரியர் டாக்டா மு. வரதராசனார், M.A.,Ph D. ... 68
வாழ்த்துக்கள் — தொகுப்பு
— பண்டித வித்துவான் லெ. ப. கரு இராமநாதன் செட்டியார் ... 69
— பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A.,B.L.,M O.L. ... 70
— மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை ... 71
— வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையவர்கள் ... 72
— பைந்தமிழ்ப் பாவலர் அ. கி. பரந்தாமனார், M.A. ... 74
— பெரும்புலவர் க. வெள்ளைவாரணனார் ... 75
— பேராசிரியர் டாக்டர் மொ. அ. துரையரங்கசாமி, M.A.,Ph.D. ... 76
— வித்துவான் தவத்திரு இராமசாமி அடிகளார் ... 77
மணிவிழாக் காணும் மன்னர் — அ. ஜெகதீசன், எம். ஏ. ... 78
நெருப்பென்ன நின்ற நெடுமால்! — வல்லை. பாலசுப்பிரமணியம், B.A. ... 80
பெரிய நாயகியோடு வாழ்க! — வ. பா. தாமரைக்கண்ணி ... 81
வாழ்த்துக்கள் — தொகுப்பு
— திருமுறைக் கலைஞர் வித்துவான் தீ. பட்டுச்சாமி ஓதுவார் ... 82
— பி. ஜி. கருத்திருமன், B.SC., M.L.A. ... 83
— பேராசிரியர் C. யோகசுந்தரம், M.A.,L.T. ... 84
மூதறிவின் செல்வர் — திருவாட்டி தே. தியாகராசன், M.A. ... 86
வாழ்த்து — வித்துவான் பூசை ஆ. நமச்சிவாய முதலியார் ... 87
காவலனே! – மொழிப் பாவலனே! — கவிஞர் அரு. சோமசுந்தரன், M.A.B.T. ... 88
வாழ்த்துக்கள் — தொகுப்பு
— வித்துவான் கோ. வே பெருமாள், M.A.B.T. } ... 89
— பெ. கணகதாணு அம்மா }
— திரு. தி. பொ. நாராயணசாமி பாரதி ... 90
— சித்த மருத்துவர் புலவர் அ. அண்ணாமலை ... 91
— வித்துவான் வீ. ப. கா. சுந்தரம், எம். ஏ. ... 92
உடன் பிறந்தார் — கி. ஆ. பெ. விசுவநாதம்
நாடு புகழ் நாவலர் — கருமுத்து தி. மாணிக்கவாசகம், பி.ஏ.
செம்மனச் செம்மல் —'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன், M.A.
நன்றியுரை

உ

சிவமயம்

இறைவணக்கம்

மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்

வருகைப்பருவம்

பன்னிரண்டுசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமைய
விமையப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க

முடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவு ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரும்
வாழ்வே வருக வருகவே.

— குமரகுருபரர்

மணிவிழா வரவேற்புக் குழு

அமைப்பாளர் :

கருமுத்து தி. சுந்தரம் செட்டியார், B.COM.
இயக்குநர், மீனாட்சி ஆலைக்குழு

தலைவர்கள் :

ஆவி. க. தியாகராாசன் செட்டியார்
நகரத்தார் சங்கச் செயலர், மதுரை

டாக்டர் திருமதி லலிதா காமேசுவரன், M.B.B.S., Ph.D.(Lond)

உறுப்பினர்கள் :

திரு. L. அழகுசுந்தரம் செட்டியார்
நிருவாக இயக்குநர், மகாலெட்சுமி நூற்பு ஆலை

,, O. RM. M. SP. SV. AN. அண்ணாமலை செட்டியார், B.COM.,
தேவகோட்டை

,, SM. AR. N. அருணாசலம் செட்டியார்
மோட்டூர் கெமிக்கல் ஏஜன்ஸிஸ், மதுரை

,, O. A. PR. M. அருணாசலம் செட்டியார்
பள்ளத்தூர்

,, வ. அழகப்பன், B.A.B.L.,
President, M. D. C. C. Bank

Dr. C. G. அன்புநாதன், M. B. B. S.

Dr. A. அருணாசலம், B. A., M. B. B. S.

M/s. ஆவி. க. பாங்கர்ஸ், திருச்சி.

,, ஆவி. க. பாங்கர்ஸ், மதுரை.

திரு. P. C. M. பாலகிருஷ்ணன்
Vice-President, Madurai-Ramnad Chamber of Commerce

,, V. A. பாலசுப்பிரமணியம்
Secretary, Madurai-Ramnad Chamber of Commerce

,, N. பாலுசாமி, M. A., M. LITT.,
தியாகராசர் கல்லூரி, மதுரை

,, சாரி & ராம் C. M. V. கிருஷ்ணமாச்சாரி

,, செ. செல்லப்பன்
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை

M/s. செல்லையா சன்

Dr. R. சந்திரவதனா, M.B.B.S., F.R.C.S.(E.) M.R.C.O.G.,

திரு. தர்மராஜ் சந்தோஷம், M. L. C.

திரு. T. K. துரைஅரசு, B. A.
Secretary, Madurai-Ramnad Chamber of Commerce

,, M. தனசேகரபாண்டியன்

,, ஜட்டாலால் D. சோலன்கி
Treasurer, Madurai-Ramnad Chamber of Commerce

,, P. ஜெகதீசன்

,, R. ஜெகதீசன், B. A., (HONS)
Principal, Victory Tutorial College

,, T. ஜெயராமன், M. A.
தியாகராசர் கல்லூரி

,, N. M. R. கிருஷ்ணமூர்த்தி

Dr. S. காமேசுவரன், M.S., F.R.C.S.(E), F.R.C.S.(GLAS.)

திரு. V. KN. கண்ணப்பச் செட்டியார்

,, N. கண்ணாயிரம், B. A.

திரு. K. SP. S. KT. காளையப்பச் செட்டியார்

,, S. கண்ணப்பன், B. E., M. S.
தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை

Dr. S. கண்ணன், M.A., M. SC., Ph. D.
தியாகராசர் கல்லூரி

திரு. M. S. கிருஷ்ணமூர்த்தி, M. A., M. SC.
தியாகராசர் கல்லூரி

திருமதி P. K. R. லட்சுமிகாந்தம்

திரு. T. மாணிக்கவாசகம் செட்டியார், B. A.
இயக்குநர், மீனாட்சி ஆலைக் குழு, மதுரை

,, V. V. C. R. முருகேச முதலியார்

,, A. RM. A. L. A. முத்துவீரப்பச் செட்டியார்,
தேவகோட்டை

Dr. A. மரியகுழந்தை
Principal, Agricultural College

திரு. S. V. K. மாணிக்கவாசக நாடார்

,, PL. மெய்யப்பன், B. E., M. S.
முதல்வர், தியாகராசர் பொறியியற் கல்லூரி

M/s. மதுரை சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (P) லிட்.,

திரு. L. நாராயணன் செட்டியார், B. SC.
நிருவாக இயக்குநர், விசாலாட்சி நூற்பாலை

,, A. நாகப்பச் செட்டியார்,
நிருவாக இயக்குநர், இந்தியா லெதர் கார்ப்பரேஷன்(P)லிட்., சென்னை

,, W. P. A. R. நாகராஜன்
பட்டிவிரன்பட்டி

,, T. K. நடராஜ நாடார்,
President, Madurai-Ramanathapuram District
Financiers' Association

Dr. G. A. நாயுடு, M.B.B.S., F.D.S., (Lond)

,, K. நாகப்பன், Ph.D.
தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை

,, S. நடராஜ பிள்ளை

திரு. M. S. நெல்லையப்பன்
Cycle Customeries

,, A. நாராயண ரெட்டியார்
முதல்வர், தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

,, இராம. பெரியகருப்பன்,
செயலர். இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி

,, N. P. பழனியப்பன், M. SC., M. SC., TECH. (Manch)

,, பழனிவேல் ராஜன், B.COM., B.L., M.L.A.

M/s. பழனியப்பா டிரான்ஸ்போர்ட்ஸ்

திருமதி S. பத்மாவதி

திரு. K. S. இராமகிருஷ்ணன்
நகர் மன்றத் தலைவர், மதுரை

திருமதி. 'கலையன்னை' இராதா தியாகராஜன், B. SC.,

திரு. P. ரெங்கசாமி நாயுடு, B A.B.L.,

,, SK. AR. SM. இராமநாதன் செட்டியார்
Chairman, Sivagangai Panchayat Union

,, RM. A. RM. இராமநாதன் செட்டியார்

,, RM. M. இராமநாதன் செட்டியார்

,, RM. ரெங்கநாதன் செட்டியார், மிட்லண்ட்
General Manager, South India Corporation (P) Ltd., Coimbatore

,, B. V. இராமச்சந்திர நாயுடு
President, Lions Club

,, MR. ரத்தினவேலு
ஐஸ் லாண்ட்

Dr. VR. இராமநாதன் செட்டியார்,
M. SC., PH. D., A. I. M., F R. A. S.
தியாகராசர் பொறியியற் கல்லூரி

திரு. R. இராமநாதன் செட்டியார், Jeweller.

,, P. R. P. ரெங்கன்,
Assistant Station Director, All India Radio, Trichy

,, K. இராமச்சந்திரன், B.com.,

,, G. இராமசாமி, B. A., B. T.,
தலைமையாசிரியர், தியாகராசர் நன்முறை உயர்நிலைப்பள்ளி

,, S. இராமையா, B. SC., B. E., M. SC., (Eng.)
தியாகராசர் பொறியியற் கல்லூரி

,, S. இராமச்சந்திர ஐயர்,
லலிதா பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட், மதுரை

,, RM. AR. சுப்பிரமணியன் செட்டியார்

Dr. S. சண்முகம் செட்டியார், M. B. B. S., F. R. C. S., (E.)

,, V. சீனிவாசன், M. B. B S., M. R. C. P., D.T.M. & H. (E)

,, A. A. சத்தார்

திரு. S. M. M. சுப்பிரமணியன் செட்டியார்,
நகர் மன்றத் தலைவர், தேவகோட்டை

,, A. G. சுப்பராமன்

,, T. M. சதாசிவம்

திரு. A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார்
,, N. சண்முகம், M. A., B. L.
,, W. C. சுந்தரேசன்
R. S. Pathy & Co.
,, N. SP. K. சுப்பிரமணியன் செட்டியார், B.SC.,
,, E. M. G. சௌந்தரராஜன்
,, T. சக்திவேலு, M. A.
முதல்வர், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
திரு. T. சிவசங்கரன், M. A.
முதல்வர், சரசுவதி நாராயணன் கல்லூரி
,, A. சங்கரநாராயணன், M. A.,
Principal, Students Tutorial College
,, S. சுந்தரமூர்த்தி, B.A.,B.L.,
,, V. சுந்தரம் பிள்ளை
,, N. S. சோமசுந்தரம் பிள்ளை
Dr. மெ. சுந்தரம் M.A., M. Litt., Ph.D.,
மதுரைப் பல்கலைக் கழகம்
திரு. B. சத்தார்சிங்
Proprietor, P. S. S. Transports
குமாரி N. சகுந்தலா, M. A.,
முதல்வர், பாத்திமா கல்லூரி
திருமதி. சக்திப் பெருமாள், M. A.,
பாத்திமா கல்லூரி
,, சரசுவதி வேணுகோபால், M. A.,
பாத்திமா கல்லூரி
,, மா. செண்பகம், M. A.,
பாத்திமா கல்லூரி
M/s. சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸீஸ்) (பி) லிட்.,
திரு. N. திருஞானசம்பந்தம், B. SC., B. E.,
Deputy Chief Engineer, P. W. D. (General) Madras
Dr. M. A. தங்கராஜ், M.A., Ph.D.,
முதல்வர், அமெரிக்கன் கல்லூரி
திரு. N. திருஞானசம்பந்தம், B. E.,
முதல்வர், தமிழ்நாடு பாலிடெக்னிக், மதுரை
Dr. T. திருஞானம் M.B. B. S.,
திரு. N. திருநாவுக்கரசு, B. SC., (HONS) M.SC.,
திருமதி. தே. தியாகராசன், M. A.,
Dr. P. வடமலையான், M. B., B. S.,
,, T. V. வெங்கடேசன், M. B. B. S., F. R. C. S.,
,, G. வெங்கடசாமி, B. A., M. B. B. S.,
,, R. வெங்கடசாமி, M. S.,
திரு. S. V. வைத்தியநாத், M. A.,
,, K. M. S. L. யதீந்திரன்
Vice-President, Madurai-Ramnad Chamber of Commerce

ஆண்டு விழாக்கள் நிகழ்ந்தாலும், பாராட்டு விழாக்கள் நிகழ்ந்தாலும் 'மலர்' வெளியிடுவது மரபு. வருகை புரிந்து கருத்துத் தெரிவிப்பதற்கு வாய்ப்பில்லாத அறிஞர் சான்றோர்களின் கருத்து வெளி வருவதற்குத் துணை செய்வன மலர்கள். இவைகள் நிகழ்காலத்துச் சேய்மையில் இருத்தலால் கலந்துகொள்ள வாய்ப்பில்லாதார்க்கும் எதிர் காலத்தார்க்கும் பலகாலும் படித்துப் புரிந்து கோடற்குப் பயன்படுகின்றன. இன்று மலர் வெளிவராத விழாக்களே இல்லை. ஆனால் வெளி வருகிற மலர்களிலுள்ள கட்டுரைகள் அனைத்தையுங் கற்பவர் ஒரு சிலரேயாயினும் தத்தங் கட்டுரைகளைக்கற்பவர் பலராக இருப்பர்.

முன்னுரை

மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வரான செந்தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் M. A., Ph. D., M. L. C. மணிவிழா உருவான முறையை யெமது வரவேற்புரைக்கண் விரித்துள்ளோம். அமைப்புக் கூட்டத்தில் மலரொன்று வெளியிடுவதென முடிவு செய்தோம். முடிவுக்கேற்பச் செய்தித்தாள்கள் வழியாகவும், முடங்கல்கள் வழியாகவும் வாழ்த்துரைகளும், கட்டுரைகளும் வழங்கியுதவுமாறு வேண்டுகோள்கள் விடுத்தோம். அதற்குச் செவிசாய்த்த சிவநெறித் திருமடத்துத் தலைவர்களும், குடியரசுத் தலைவரவர்கள், நம் மாகாண அமைச்சர்களிற் பலரும், மாபெரும் செல்வர்களும் வாழ்த்துரைகள் வழங்கியுதவினர்.

செந்தமிழ்ப் பேராசிரியர்களிற் சிலர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் நல்கினர். சிலர் டாக்டர் செட்டியாரவர்களின் பண்புநலங்கனிந்த பாராட்டுரைகள் தந்தனர். சிலர் அ. சி. அவர்கள் "நமக்கென வரைந்த வாண்டுகளெல்லாம் மனக்கினிதாக வாழிய மகிழ்ந்தே" என்னுங் கருத்தமைந்து ஒளிரும் பாடல்கள் இயற்றி வழங்கினர். இம் மணிவிழா மலர் சிவநெறிச் செம்மல்

களின் பொன்னுரையாகிய நறுமணமும், குடியரசுத் தலைவர் அமைச்சர், செல்வராகியவர்களின் வாழ்த்துரையாகிய வண்ணமும், அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையாகிய மகரந்தமும், டாக்டர் அ. சி. அவர்களைப்பற்றிய பாராட்டுரையாகிய பொகுட்டும், வாழ்த்துப் பாடல்களாகிய இதழ்களுங் கொண்டு மலர்ந்துள்ளது.

இம்மலர் இதன் அகவழகுக் கேற்ப புறவழகுங்கொண்டு பொலிய வேண்டுமென எண்ணினேம். எங்கள் எண்ணப்படியே மதுரை 'லலிதா பிரிண்டர்ஸ்' உரிமையாளர் திரு. **S.** இராமச்சந்திரய்யர் அவர்கள் இதனை உரிய காலத்தில் உருவாக்கிக் கொடுத்தார்கள். மிகப்பெரிய விழாக்களுக்கு அரிய முறையிலே உரிய காலத்திலே மலர்களை உருவாக்கிக் கொடுத்த தேர்ச்சியால் இம் மலரை மினுக்கமுறச் செய்துள்ளனர். மதுரைத் தூய மரியன்னை உயர்பள்ளித் தமிழாசிரியரும், மதுரைத் திருவள்ளுவர் கழகத்துச் செயலாளருமான பண்டித திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கள் கைப்படிகளையும் அச்சுப்படிகளையும் ஒப்பு நோக்கிப் பிழை திருத்திக் கொடுத்துதவினர்.

விழாவில் இம்மலரை வெளியிட இசைந்துள்ளவர் தமிழகத்துக் கல்வித் துறை-தொழில்துறை அமைச்சரான மேதகு. இரா. நெடுஞ்செழியன், M. A., அவர்களாவர். நாவலரென நாடு புகழும் நல்லவர்கள் இவர்கள். ஆங்கில மொழியிலும் செந்தமிழிலும் ஓங்கிய புலமை யிவர்கள்பாலமைந்துள்ளது. மேலும் எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் சிறந்து விளங்குபவர்களுங்கூட இவர்கள். கைவளம் படைத்த இவர்களைக்கொண்டே நாங்கள் இம்மலரை வெளியிடக் காத்திருந்தோம். கல்வித்துறை யமைச்சர் மலரை வெளியிடல் சாலுமெனக் கருதினேம். எமது கருத்தறிந்த அமைச்சரவர்கள் இசைவு தந்து வருகை புரிந்து இம்மலரை வெளியிட்டுள்ளார்கள். அவர்களை வாழ்த்துகிறேம் வாயார.

இம்மணிவிழாவை அழகு செய்பவைகளில் தலையாயது இம்மலர். இது என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும், நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையது. இதற்கு வாழ்த்துரைகளும், கட்டுரைகளும், இயன்மொழிப் பாடல்களும் மேலே கூறிய பெருமக்கள் கொடுத்துதவினர். இன்று இவ் விழாவில் தொடர்பு கொண்டுள்ள பெரியவர்கள் உருப்பதிவைச் (**Blocks**) சில நிறுவனங்கள் வழங்கித் துணைசெய்தன. இவர்கள் யாவர்க்கும் அகமும் முகமு மலர நன்றி நவில்கிறேம். அச்சகத்தார்க்கும் பிழை திருத்துதவிய புலவர்க்கும் எமது அன்பான நல்வாழ்த்தினை அளிக்கிறேம். எம்மையும் மீறிச் சில பிழைகள் காணப்படுமேல் அவற்றைத் தங்கள் தண்ணியவுள்ளம் பொறுக்குமாக.

இங்ஙனம் தங்களன்புள்ள,

மதுரை
7-9-67.

ஆவி. க. தியாகராசச் செட்டியார்
டாக்டர் லலிதா காமேசுவரன்
வரவேற்புக் குழுத் தலைவர்கள்.

SHORT SKETCHES OF DR. A. C. CHETTIAR

CHIDAMBARANATHA CHETTIAR, A. Dr. (Madras University, Madras): Tamil Scholar and author. Born in April, 1907 at Kumbakonam; education at the Madras and Annamalai Universities; M. A., Ph., D., Chief Editor, English Tamil Dictionary, Madras University; Principal, Thiagarajar College, Madurai; has published several books; 'Advanced Studies in Tamil Prosody' (in English), 'Booker Washington's Life' (in Tamil), 'Dr. Albert Schweitzer's Life' (in Tamil), 'Munpani Kalam' (Tamil Literary essays), 'Tamil Osai' (Linguistic essays); 'Tamil Kattum Ulagu' (Literary essays), 'Veettu Thirumagal' (Linguistic and Literary essays), (Translator of) Shakespeare's Othello in Tamil for Sahitya Akademi; Professor and Head of the Department of Tamil, Annamalai University till 9th July 1958, acted as Vice-Chancellor for the Annamalai University July — December, 1948; Member of the Senate, the Syndicate and the Academic Council, Annamalai University till December, 1958; Dean of the Faculty of Oriental studies till 1955; served as Chief Warden, University Hostels and as Editor in chief, University Magazine; Member, Board of Studies in Tamil of Madras and Kerala Universities; Member, State Education Advisory Committee; Member, Bharathi Braille Code (Tamil) Committee; Member, Council of the National Akademi of Letters (Sahitya Akademi); Hony. Editor, 'Senthamil-Chelvi' and 'Tamil Culture'; Member, Consultative Panel of University Broadcasts of the All-India Radio; Vice-President, United Nations Association, Madras; Vice-President, Indo-Soviet Cultural Society, Madras; Secretary, Madras State Tagore Centenary Celebrations Committee; Member, Legal Terminology Committee; Technical Terms Revision Committee; Member, Madras State Tamil Development and Research Council; Consultant, National Book Trust, New Delhi; visited the Universities in the United Kingdom on invitation from the British Council; toured Singapore, Malaya and Ceylon on cultural mission; visited Italy, France, Switzerland and Egypt; Official Delegate on the Indian Delegation to the Twenty-fifth International Orientalists' Congress at Moscow in August, 1960; participated in the International Literary Seminar in November, 1961; Member, Madras Legislative Council, since April, 1959 (Teachers' Constituency). Member, Syndicate of the Madurai University.

மணிவிழாக்காணும் மணமக்கள்



டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் – பெரியநாயகியம்மையார்

வாழ்த்துரைகள்

உ

குருபாதம்

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே'

செந்தமிழ்க் காவலர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தமிழ்கூறு நல் உலகத்திற்கு எழில்மிகு பணிகள் பல புரிந்து, தமிழ்ப் பெருமக்கள் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து திரு. செட்டியார் அவர்கள் புரிந்த தமிழ்ப் பணிகளை உலகம் அறியும். இங்கிலாந்து சென்று அங்கும் தமிழ்ப்பணி புரிந்தவர். சிவநெறிப் பற்றுடைய செந்தமிழ்ப் பேராசிரியர்.

தில்லைப் பொன்னம்பலத்தினைச் சார்ந்து தமிழ்த்தொண்டு புரிந்த இப்பெருந்தகையார், மதுரை வெள்ளியம்பலத்திற்கும் சென்று, தியாகராசர் கல்லூரி முதல்வராக இருந்து பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது.

அவ்வப்போது இனியபல நூல்களைத் தமிழகத்திற்கு வழங்கி வரும் திரு. செட்டியாரவர்கள் தெய்வ பக்தி உடையவர். திரு முறைகளினிடத்து ஈடுபாடு கொண்டவர். ஆங்கிலத் தமிழ் அகராதியைச் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் ஆய்ந்து வெளியிட்ட பணிமுதலிய பல தமிழகம் பெற்ற பெருஞ் சிறப்புக்கள்.

செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் 1955-ல் திரு. செட்டியார் அவர்களைச் "செந்தமிழ்க்காவலர்" என்ற சிறப்புப் பட்டத்திற்கு உரியவர் ஆக்கிற்று.

திரு. செட்டியார் அவர்கட்கு எடுக்கும் மணிவிழா தமிழ் உலகிற்கே பெருமை தருவது. "நயனொடு நன்றி புரிந்த பய னுடையார், பண்பு பாராட்டும் உலகு" என்ற திருவள்ளுவர் திருவாக்கின்படி அன்பர்களின் பாராட்டு முயற்சி பாராட்டுக் குறியது. மணிவிழாப் பெறும் செந்தமிழ்க் காவலர் நூற்றாண்டு விழா முதலிய எல்லா விழாக்களும் பெற்று, தமிழ் உலகிற்குப் பெரும்பணிகள் புரிந்து நல்லன எல்லாம் பெற்று நீடு வாழ்க என்று செந்தமிழ்ச் சொக்கர் சேவடி சிந்திக்கின்றோம்.

உ

குரு அருள்

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி
இராமநாதபுரம் மாவட்டம்

அன்பிற்சிறந்த நமது ஆவி. க. தியாகராசன் செட்டியார் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

21—8—67 கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. டாக்டர் செட்டியார் அவர்களுக்கு மிகவும் சிறப்பாக மணிவிழா எடுப்பது குறித்து மகிழ்ச்சி. தங்கள் விருப்பப்படி நமது நிறுவனம் தனது பங்கை – கடமையினைச் செய்யும் என்பதை அறிவித்துக்கொள் கின்றோம். மற்றவை தங்கள் கடிதம் கண்டு.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

(ஒப்பம்) *தெய்வசிகாமணி*

உ

HIS HOLINESS THIRUVARUL THAVAYOGA

Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika Paramachariya Swamigal

MADURAI AADHEENAM

70, South Avani Moola Street,
MADURAI, 27—8—67

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

தங்களுடைய 21ம் தேதி கடிதம் கிடைத்து நமது ஆதீன "காப்பிய வித்தகர்" உயர்திரு. டாக்டர் செட்டியார் அவர்களது மணிவிழா 7-9-67ம் தேதி வியாழக்கிழமையன்று, மதுரையில் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்திருபபதை அறிந்து மகிழ்கின்றோம். அன்று நாம் விருதுநகருக்கு ஒரு நிகழ்ச்சிக்கு ஒத்துக்கொண்டிருப்பதால், நேரில் வந்து சிறப்பிக்கத் திருவருள் கூடாதிருக்கிறது. என்றாலும் அவர்களுக்கு அன்று ஆதீனம் சார்பில் பொன்னாடை போர்த்து திருநீற்றுப் பிரசாதம் அருளி ஆசீர்வதிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

அன்னாருக்கு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெஞ்ஞானமும், சிறந்த மனோரத சித்தியும், அரோக திடகாத்திரமும், தீர்க்காயுளும், அஷ்ட ஐஸ்வர்ய ஆதிக்கமும், நித்திய மங்கள குரு கடாக்ஷமும், மென்மேலும் பெருக உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம்வல்ல எம் அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதித்த விபூதிப் பிரசாதமும், குங்குமப் பிரசாதமும் இத்துடன் எழுந்தருளச் செய்திருக்கிறோம். எல்லோரும் திருவருட்கவசமாக அணிந்து மேன்மையுறுவீர்களாக.

ஸ்ரீஞானசம்பந்த தேசிகர்

தவத்திரு
சாந்தலிங்க இராமசாமியடிகள்

பேரூராதீனம்,
பேரூர், கோவை.

மலர்ந்த முகத்துடனும், இனிய சொல்லுடனும் பழகும் தமிழ்ப் பண்பாளர் செந்தமிழ்க்காவலர், சைவத்திரு. டாக்டர். அ. சிதம்பரநாதஞ்செட்டியார் அவர்கள் மணி விழாக்கொள்வதறிந்து மகிழ்வெய்துகின்றோம். இவர் பெறும் சிறப்பு நம் தமிழ்த்தாய் பெறும் சிறப்பாகும்; சைவ நன்னெறி பெறும் சிறப்பாகும் என்றே கருதுகின்றோம்.

தமிழாசிரியர் உள்ளங்களில் திரு. செட்டியார் அவர்கள் தனி மதிப்புப்பெற்றிருக்கின்றார். தமிழாசிரியர்களின் உயர்வு குறித்துத் திரு. செட்டியாரவர்கள் ஆற்றிய பணிகள் மிகப்பல. இங்ஙனமே தமிழ்க்கல்லூரிகளின் நிலை உயர்வதற்குரிய முயற்சியினையும் இவர் மேற்கொண்டால் தமிழ் உலகம் நல்ல பயன் எய்தும்.

சென்னைப்பல்கலைக்கழகத்தார் நம் தமிழ்த் தாய்க்கு ஆங்கிலம், தமிழ் அகர வரிசை என்னும் விலை மதித்தற்கரிய அணிகலனை ஆக்கி அணிவித்த பெருமையில் நம் செட்டியார் அவர்களுக்குத் தலையான பங்குண்டு. சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணம் தமிழ் நெறியின் மறு மலர்ச்சியையும் இறைவழிபாட்டில் எல்லாம் தமிழ் என்பதையும் விளக்க எழுந்தது என்பதைப் புதிய நோக்கில் ஆராய்ந்து கூறி வருவது பெரிதும் பாராட்டுதற்குரியது. இவருடைய செந்தமிழ்ப் புலமையும் சிவநெறி ஒழுக்கமும் கண்டு தருமையாதீனத்தார் செந்தமிழ்க்காவலர் எனும்பட்டம் அளித்துச் சிறப்பித்தமை தமிழுலகம் நன்கறியும்.

இப்பெருமைகளுக்கெல்லாம் நிலைக்களமாய் இலங்கும் திரு. செட்டியார் அவர்கள் செந்தமிழ் நெறி பேணிப் பல்லாண்டு வாழ்க என்றும் தமிழ் பயில்வோரின் நிலை உயர்வது குறித்து முயன்று பெருமை எய்துக என்றும் சைவ நன்னெறி தழைத் தோங்குவதற்குரிய வகையில் நிலைத்த பணி பல செய்து சிறப்பெய்துக என்றும் எமது ஆதி குரு முதல்வராகிய அருண்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருவருள் நினைந்து வாழ்த்துகின்றோம்.

வித்துவான் சுந்தரசுவாமிகள்,
மடாதிபதி,
ஸ்ரீ கௌமார மடாலயம்

சின்னவாடம்பட்டி
கோயமுத்தூர்

வெண்பாக்கள்

சோழ வளநாட்டில் தோன்றிச் சிதம்பரத்தில்
வாழவமை அண்ணு மலைக்கழகத்—தாழமுறச்
செய்ய தமிழ்த்துறையில் சீரார் பணி செய்தார்
அய்யன் சிதம்பரநா தன். (1)

கற்ருர்சென் னைப்பல் கலைக்கழகத் தார்வேண்ட
உற்ருெளிரும் ஆங்கிலத்தில் ஒண்தமிழில்—சொற்றகரஞ்
சேரச்செய் தீந்த சிதம்பரனுர் செந்தமிழின்
வார மிகுபுலமை மாண்பு. (2)

செந்தமிழிற் சைவத் திருநெறியில் நற்புலமை
வந்தவிர்சி தம்பரனுர் மாமதுரைச்—சந்தமிகும்
சீலத் தியாகரா சச்செம்மல் கல்லூரிக்
கேலும் முதன்மையுற்ரு ரே. (3)

திருவாளர் டாக்டர் சிதம்பரநா தப்பேர்
வருசெட்டி யாரவர்கள் மன்னும்—பெரும் புலவர்க்
கின்றறுப தாண்டுநிறை வெய்துதலால் அன்புள்ளோர்
நன்றுவிழாக் கொண்டாடி ஞர். (4)

செம்மைச் சிவம்பெருக்கும் செல்வச் சிதம்பரனுர்
மும்மைத் தமிழ்க்கூடல் மூதூரில்—இம்மைநல
மார்மணிவி ழாக்கொண்டார் ஆண்டுபல நூறுலகிற்
சீர்பெற் றுயர்க சிறந்து. (5)

V. J. MOORE,
Deputy Secretary to the President.

President's Secretariat,
Rashtrapathi Bhavan,
New Delhi-4.

May 4, 1967.

Dear Shri Chettiar,

Please refer to your letter of the 18th April, 1967. The President congratulates Dr. A. Chidambaranathan Chettiar on the occasion of his 60th birthday and sends him his best wishes for many more years of health and happiness.

Yours sincerely
(Sd.) V. J. MOORE
Deputy Secretary to the President.

UJJAL SINGH
Governor of Madras

Raj Bhavan
Madras Governor's Camp P.O.

29th April, 1967

I send my greetings and best wishes to Dr. A. Chidambaranathan Chettiar on the occasion of the celebration of his 60th birthday.

(Sd.) UJJAL SINGH

சி. என். அண்ணதுரை
முதலமைச்சர்

கோட்டை
சென்னை - 9

31—8—67

அன்புடையீர்,

வணக்கம். தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் மணிவிழா நிகழ்ச்சி சிறப்பாகக் கொண்டாடப்படுவது கண்டு மகிழ்கிறேன்.

டாக்டர் சிதம்பரநாதன் அவர்களின் தமிழ்த் தொண்டும், கல்விப் பணியும், அறிவாற்றலும் அனைவராலும் பாராட்டப்படுவன. அவரைப் பல ஆண்டுகளாக அறிந்துள்ள நிலையில் அவரது நற்றொண்டும், ஆற்றலும் நாட்டுக்குத் தொடர்ந்து பயன்பட விரும்புகிறேன்.

அவருக்கு எனது உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

அன்பன்

(ஒப்பம்) அண்ணதுரை

இரா. நெடுஞ்செழியன்
கல்வி-தொழில் அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9

ஜூன் 20, 1967

டாக்டர் சிதம்பரநாதனர் அவர்கள் அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்று மணிவிழாக் கொண்டாடும் மகிழ்ச்சியுறு நிலையை எய்தியிருப்பது பேருவகையை அளிப்பதாகும்.

டாக்டர் சிதம்பரநாதனர் அவர்கள் என்னுடைய தமிழ்ப் பேராசிரியர் என்று சொல்லிக்கொள்வதிலே பெருமை அடைகிறேன்.

டாக்டர் சிதம்பரநாதனர் அவர்கள் சிறந்த தமிழ்ப் பேராசிரியர்; நல்ல சொற்பொழிவாளர்; சீரிய எழுத்தாளர்; இனிய பண்பாளர்; அரிய நண்பர்; நல்ல முயற்சியாளர்; வினை முடிக்கும் திறனாளர்; என்று பாராட்டுவதற்குரிய சிறப்புகள் பலவும் பெற்றவராவர். தமிழ் வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிவரும் தொண்டு போற்றுவதற்குரியனவாகும்.

அவரது நுண்மாண்நுழைபுலத்தை அவர் எழுதிய பல்வேறு நூல்களிலிருந்தும், அவர் தலைமையில் உருவாக்கப்பட்ட ஆங்கிலம்-தமிழ் அகராதியிலிருந்தும் அறியலாம்.

டாக்டர் அ. சிதம்பரநாதனர் அவர்கள் வளம் பல பெற்று, நலம்பல எய்தி நீடூழிக்காலம் இனிது வாழ்வார்களாக.

(ஒப்பம்) இரா. நெடுஞ்செழியன்

ஏ. கோவிந்தசாமி

விவசாய அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை

சென்னை – 9

10—7—1967

பேராசிரியர் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்களின் மணிவிழாக் குழுவினரால் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மதுரையில் நடத்த இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

அன்னாரின் தொண்டு பொதுமக்களுக்கு மேலும் பயன்படவும், விழாச் சிறப்புற நடைபெறவும், அவர்கள் பல்லாண்டு பல நலமுடன் இனிது வாழ எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துகள்.

(ஒப்பம்) அ. கோவிந்தசாமி

மு. கருணாநிதி
பொதுப்பணி அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9

9—5—1967

தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றிவரும் தமிழ்ப் பேராசிரியர்களில் ஒருவரான டாக்டர் சிதம்பரநாதனார் அவர்களின் மணிவிழாவை நண்பர்கள் கொண்டாட இருப்பது பெருமைப்படத் தக்க செய்தியாகும். காலமெல்லாம் குறிப்பிட்ட இலட்சியத்திற்காக உழைக்கும் சான்றோர்க்கு நன்றி உணர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் விழாக்கள் எடுப்பது மரபு. அந்த வகையில் டாக்டர் சிதம்பரநாதனாரின் மணிவிழாவை, அவரது மொழித்தொண்டினைப் போற்றும் தமிழன்பர்கள் நடத்தும் 'நன்றி அறிவிப்பு விழா' என்றே குறிப்பிடலாம்.

மொழிப் பகைவர்களைப் புறங்கண்டு, பகைவரும் போற்றும் வகையில் மொழி நலத்தை விரித்துரைத்துத் தமிழகத்தில் மட்டுமல்லாமல், அயல் நாடுகளிலும் தமிழ் நெறியைப் பரப்பியவர் டாக்டர் சிதம்பரநாதனார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பெருமை பெற்ற பெருந்தகை பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாமல், தமிழக மேல் சட்டமன்றத்திலும் மொழித் தொண்டாற்றும் பேறு பெற்றவர். ஆட்சித் துறைதோறும் தமிழ்மொழி இடம் பெற வேண்டும், தமிழ்மொழி வளர்ச்சியில் இந்தி ஆதிபத்தியம் குறுக்கிடக்கூடாது என்ற கருத்துக்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு பாடுபட்டு வருகிறார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை போன்ற தமிழறிஞர்களின் துணையோடு இவர் உருவாக்கிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி இவரது மொழித் தொண்டின் ஏற்றமுள்ள சின்னமாக என்றும் திகழும். பல்துறைச் சான்றோர்களும் அவரது பெரும்பணியைப் போற்றிப் புகழாரம் சூட்டியுள்ளனர். இன்றையதினம் புகழ்மிக்க கல்லூரி ஒன்றின் முதல்வராகப் பணியாற்றுவது மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்ற பெரும் பேறாகும்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்ல தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் சிதம்பரநாதனார் மேலும் பல்லாண்டு ஓங்குபுகழுடன், வாழ்ந்து, தமிழின் திறம் போற்றித் தமிழர் உயர்வு காண்பதைக் காணவேண்டும் என்று மனமார விரும்புகிறேன். வாழ்க தமிழ்.

அன்புள்ள,

(ஒப்பம்) மு. கருணாநிதி

S. MADHAVAN
Minister for Law and Co-operation

Fort St. George
Madras-9

3—5—1967

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகத்தில் சிறந்த அறிஞர்களில் ஒருவர். தமது புலமையாலும் பண்பாலும் மாணவர்கள், இதர மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். சிறந்த பேராசிரியராகவும கல்லூரித்தலைவராகவும் விளங்கும் இப்பெருமகனர், அறிவு வளர்ச்சிக்கு ஆற்றியிருக்கும் பணிகள் பல. அப் பணிகளில் மங்காத ஒளி வீசி நிற்பது சென்னைப் பல்கலைக் கழக வெளியீடான ஆங்கிலம்–தமிழ் சொற்களஞ்சியம் ஆகும்.

மணிவிழாக் காணும் பேராசிரியர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமது பணியின் மூலம், மேலும் மேலும் பேரும் புகழும் பெற என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(ஒப்பம்) செ. மாதவன்

M. MUTHUSWAMY
Minister for Local Administration

Fort St. George
Madras-9

8—5—1967

செந்தமிழ் காவலர் பேராசிரியர் டாக்டர் சிதம்பரநாதனார் அவர்களது மணிவிழா மதுரையில் நடைபெற இருப்பது தமிழர்கள் பெருமிதம் அடையக்கூடிய செய்தியாகும். தமிழ் ஏற்றம்பெறத் தமிழினம் மொழிப் பகைவர்களைப் புறங்கண்டு புது வாழ்வு பெற, டாக்டர் சிதம்பரநாதனார் ஆற்றிவரும் மொழித் தொண்டைப் போற்றாத தமிழ் உள்ளம் அனைத்துலகிலும் இல்லை. தமிழ் மொழிக்காகத் தமிழ் இளைஞர்களின் நல்வாழ்வுக்காக, அந்தப் பெருமகனார் நீடுவாழ வேண்டும் என்று நெஞ்சார விரும்புகிறேன். விழாக் குழுவினருக்கு என் நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள

(ஒப்பம்) ம. முத்துசாமி

S. J. SADIQ PASHA
Minister for Public Health

Fort St. George
Madras

24—5—1967

செந்தமிழ்த் தொண்டில் தலைசிறந்த டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் இன்று தமிழகத்தில் மட்டுமல்லாது, வட இந்தியாவிலும், கடல் கடந்த நாடுகளிலும் புகழ் பெற்றுள்ளார். தமிழ் மொழியிலும், தமிழ் பண்பாட்டிலும், தமிழ் நாகரிகத்திலும் அவர் கொண்டுள்ள ஈடுபாடும், இணையற்ற ஆர்வமும், எண்ணற்ற இளைஞர்களின் உள்ளங்களில் அவருக்குச் சிறப்பிடத்தைத் தேடித்தந்துள்ளன. அவரிடத்தில் கல்வி பயின்ற மாணவர்கள் அவர்பால் கொண்டிருக்கும் அன்பும் மதிப்பும் அளவு கடந்தன. அவருக்கு மணிவிழா நடைபெறுவது செந்தமிழர்க்கு இனிய செய்தியாகும். அவர் தொண்டு மேலும் சிறந்து, செந்தமிழ் மேன்மையுறுமாக !

(ஒப்பம்) *எஸ். ஜே. சாதிக்பாட்சா*

UNIVERSITY OF MADRAS

SIR. A. L. MUDALIAR
M.D.,LL.D.D.Sc.,D.G.L. (Oxon) F.R.C.O.G.,F.A.C.S.
Vice-Chancellor

University Buildings,
Triplicane, Madras-5

3rd May. 1967

I am glad to know that the sixtieth birthday of Dr. A. Chidambaranathan Chettiar is to be celebrated in Madurai. Dr. Chidambaranathan Chettiar has been a very distinguished Professor and a good administrator. He has taken a great deal of pains to make Tamil studies more popular. His work in regard to the preparation of the English-Tamil Dictionary was of a high order and he completed the work in record time, for which the Madras University paid its tribute.

I wish the function every success. May Dr. Chidambaranathan Chettiar continue to serve this country for many years.

(Sd.) Sir A. L. MUDALIAR

ANNAMALAI UNIVERSITY

P. CHANDRA REDDY
Vice-Chancellor

Annamalai Nagar P. O.
(South India)

May 1, 1967

I am glad to learn that the 60th birthday of Dr. Chidambaranatha Chettiar, a well known Tamil Scholar, is to be celebrated.

As a Teacher and as the Editor of the Tamil Lexicon, Dr. Chettiar has made a rich contribution to Tamil scholarship. As a member of the Committee for the introduction of Tamil as the Official Language of the State and a M. L. C. his services have also been valuable. It is but fitting that he should be honoured on the occasion of his 60th birthday.

May God bless him with a long and healthy life, so that he may continue to serve the cause of Tamil as before. I wish the Celebration all success.

P. CHANDRA REDDY,
Vice-Chancellor.

Dr. RAJA SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD

Chettinad House. Adyar,
Rajah Annamalaipuram P.O.
Madras-28
செட்டிநாடு ஹவுஸ், குன்னூர்,

7—5—1967

பிரியமுள்ள ஐயா,

தங்கள் அன்பான கடிதம் கிடைக்கப் பெற்றேன். பேராசிரியர் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் அறுபதாண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு மணிவிழாக் குழுவினர் ஒரு மலர் வெளியிடுவது மிகப் பொருத்தமும், மகிழ்ச்சிக்குரியதும் ஆகும்.

டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் நல்ல தமிழ் அறிஞர். சிறந்த தமிழ், ஆங்கிலப் பேச்சாளர். பல நல்ல தமிழ் நூல்களின் ஆசிரியர். ஏற்கும் பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றிவரும் நல்ல நிர்வாகி.

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் தமிழ்த் துறைத் தலைவராகவும், ஒரு முறை இடைக்காலத் துணை வேந்தராகவும் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் பாராட்டத்தக்கப் பணிபுரிந்ததை நாடு நன்கறியும். சென்னை மேல்சபையின் உறுப்பினரான அவர்களின் கீர்த்திமிக்க தொண்டினைப் பொதுமக்கள், சிறப்பாகத் தமிழாசிரியர்கள் நன்கறிவார்கள்.

இத்தகையச் சிறப்புமிக்க மணிவிழாக்காணும் தமிழ்ப் பெரியாருக்கு என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு மணிவிழா சிறப்புடன் இனிது நிறைவேற இறைவனை வேண்டுகின்றேன்.

தங்கள்

(ஒப்பம்) மு. அ. முத்தய்யா செட்டியார்

இரா. சம்பந்தம்
சென்னை மாநகராட்சித் தலைவர்

ரிப்பன் கட்டடம்
சென்னை-3

8—5—1967

அன்புடையீர்!

பேராசிரியர் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களுக்கு மணிவிழாக் கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

முடியுடை மூவேந்தர்கள் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் சிறப்பிக்கப்பட்டார்கள். முடியாட்சி இல்லாத இக்காலத்தும் தமிழ்ப் புலவர்களைக் குடிமக்களே சிறப்பிக்க முன் வந்துள்ளது பெருமைக்குரியது; பாராட்டுதற்குரியது.

டாக்டர் சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. அவரது ஆராய்ச்சித் திறனால் வெளிவந்த நூல்கள் யாவும் தமிழ் இனத்திற்குப் பேருதவியாக உள்ளன.

அவர்கள் தமிழ்த் தொண்டு சிறக்கட்டும். அவர்கள் நீடூழி வாழ்க.

அன்புள்ள

(ஒப்பம்) *இரா. சம்பந்தம்*

கலையன்னை

திருமதி இராதா தியாகராசன் B.Sc.,

அறுபது ஆண்டுகள் அறம்புரி சுற்றமொடு திறம்பட வாழ்ந்த செல்வச் செம்மல்களின் சிறப்பும் செம்மையும் நினைந்து பரவும் செவ்வி சான்றது அவர் பொருட்டு எடுக்கும் மணிவிழா.

இருபதில் அரும்பி, மனைவாழ்வில் போதாகி, அறுபதில் மலர்ந்து அறிவு மணம் கமழ்வது வையகம் போற்றும் மக்கள் வாழ்வு

அத்தகையதொரு நல்வாழ்வின் நன்மலர்ச்சியின் நினைவாக உருக்கொள்வது நமது டாக்டர் அ. சிதம்பரநாதனார்க்கு எடுக்கும் மணிவிழா.

இது அம் மணிவிழாவின் அணிமலர்.

இன்று மணிவிழாக்கொண்டு மாண்புறும் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள், அறத்தொடு வாழ்ந்து, அறிவு வழங்கும் ஆசிரியப் பணிபுரிந்து, ஆயிரக்கணக்கான நன்மாணவர்களைப் பயந்த நல்லோர்.

இவரது நுண்மாண் நுழைபுலப் பண்மாண் பெருநலம், தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும், சென்னை அரசியல் மன்றத்துக்கும் மன்னிய பயன் அளித்துள்ளது. தவப்பெரும் தமிழ்ச்செல்வரானதற் கேற்ப, இவர்பால் பயின்ற தமிழ் மாணவர்கள், இன்று தமிழக அரசின் தலைமையேற்றுத் திகழ்கின்றனர்.

நீர் பெருக ஊறும் ஊருணியாய், நல்லார் நட்புறவும், நாடா நல்லிசையும் நனி சிறக்கப் பெற்று, நல்வாழ்வு வாழும் டாக்டர் திரு. சிதம்பரநாதனாரும், துணைவியார் பெரியநாயகி அம்மையும், பன்னாள் வாழ்க!

இவர்கள் இருவரும், எண்பதும் நூறுமாகிய ஆண்டு விழாக்கள் பல கண்டு, பெருவாழ்வு பெற்று இன்புறுதற்கு, இம் மணிவிழாத்தொடக்கவிழாவாகுக என அன்னை கயற்கண்ணியின் அருட்சேவடி பரவி வாழ்த்துகின்றேன்.

(ஒப்பம்) *இராதா தியாகராசன்*

தமிழவேள் திரு பி. டி. இராசன், B.A., Bar-at-Law.,
தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

பேராசிரியர் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றவர். அவர் தமிழ்ப் பற்றுடன் தெய்வப் பற்றும் உடையவர் என்பதை அறிய எனக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. ஆலயங் களில் வடமொழியில் அருச்சனை செய்வதுபோல் தமிழிலும் அருச்சனை செய்ய வேண்டும் என்று பலர் விரும்பிய பொழுது அதற்கு உரிய அருச்சனைப் புத்தகம் கிடைக்க வில்லை. அக்குறையைப் போக்க 1000 திருநாமங்களைத் தொகுத்து அம்பிகைக்கும் சுவாமிக்கும் அருச்சனை நூல்கள் வெளியிட எண்ணினேன். அந்நூல்களைத் தொகுக்கும் பொறுப்பை மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுத் தொகுத்துக் கொடுத் தவர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களே யாவர். இன்று மதுரைத் திருக்கோயிலில் அந்நூலையே படித்து அருச்சனை நடத்துகின்றனர். அத்தகைய தெய்வப் பற்றும் தமிழ்ப் புலமையும் கொண்ட செட்டியாரவர்கள், பல்லாண்டு வாழ்ந்து பொதுத் தொண்டாற்ற எல்லாம்வல்ல மீனாட்சி சுந்தரர் அருள்புரிய வேண்டுகிறேன்.

(ஒப்பம்) *பி. டி. இராசன்*

M. ANDHALAN
Anbu Nilayam

63, Kacheri Street,
Kallakurichi (S.A. Dt.)

25-3—1967

அன்புடையீர் !

டாக்டர் அ. சி. செட்டியார் அவர்களின் மணிவிழாவினைத் தாங்கள் முன்னின்று செய்வது குறித்து மகிழ்ச்சியுறுகிறேன். தமிழறிஞர் டாக்டர் அ.சி. அவர்களின் தொண்டு தமிழுக்கும் தமிழகத்திற்கும் எஞ்ஞான்றும் உரித்தாகுக என்று உளமார வாழ்த்துகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க வள்ளுவம்!!

அன்பன்

(ஒப்பம்) *மு. அந்தாலன்*

பாரதி தமிழ்ச் சங்கம், நாகபுரி

ஆ. விநாயகம்
செயலாளர்

பாரதி இல்லம்
33/3, எஸ். இ. ரயில்வே குவார்டர்ஸ்
அஜ்னி, நாகபுரி-3

23—3—1967

அன்பீர் !

வணக்கம். நாட்டிற்கும், மொழிக்கும் ஆக்கப்பணி புரிந்து, ஆயிரமாயிரம் கடமையாளர்களைப் பல துறையிலும் தோற்றுவித்து இன்று மணிவிழாக்காணும் சீருடைய முனைவர் சிதம்பரனார் அவர்கட்குத் தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

(ஒப்பம்) ஆ. விநாயகம்

உடன்பிறந்தார்

கி. ஆ. பெ. விசுவநாதம்
அமைப்பாளர், தமிழகப்புலவர் குழு, திருச்சி.

ஒருதாய்வயிற்றிற் பிறந்தமக்களை உடன்பிறந்தார்எனக் கூறுவர். டாக்டர் அ. சிதம்பர நாதன் அவர்களும் நானும் அவ்வாறு பிறவாமற்பிறந்த உடன்பிறந்தார் ஆனோம்.

திரு. அ. சி. அவர்கள் எனக்கு எட்டு ஆண்டுகள் இளையவர் எனினும் ஒத்தவயதின ராகவே மதிக்கப்பெறுவோம். அதுமட்டுமன்று, உயரத்தில், நிறத்தில், உடல்அமைப்பில், முகத்தோற்றத்திலும்கூட ஒத்து இருப்பதாலும் நாங்கள் உடன்பிறந்தோர் என ஆனோம்.

தவறு கண்ட இடங்களிலெல்லாம் உடனே எங்கட்குக் கோபம் வந்துவிடும். பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பனவெல்லாம் பிறகுதான். இதனல் எங்களை முன்கோபிகள்எனக் கருதுவாரும் உண்டு. இதனலும் நாங்கள் உடன் பிறந்தாரானோம்.

மலாய் நாட்டில் வாழும் மக்கள் தைத்திரு நாளைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடுவர். முதலாண்டு திரு. அ.சி. அவர்களும், அடுத்த ஆண்டு நானும் அங்குச் சென்றிருந்தோம். 22 நாள்கள் 26 ஊர்கள், 31 பேச்சுகள் அவ்வளவுதான். "டாக்டர் அ. சிதம்பர நாதனார் அவர்கட்கு நீங்கள் அண்ணனா? தம்பியா?" எனக் கேட்டவர்கள் அங்கு நூற்றுக்கு மேம்பட்டவர். இதனால் நாங்கள் பிறர் முடிவின்படியும் உடன்பிறந்தாரானோம்.

டாக்டர் அ.சி. அவர்கட்கும் எனக்கும் பல துறைகளில் பல்வேறு ஆசிரியர்கள் உள்ளனர். எனினும் தமிழ்த்துறையில் எங்களுக்கு அமைந்த பேராசிரியர் பசுமலை நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள். இதனாலும் நாங்கள் உடன்பிறந்தாராகவே அமைந்தோம்.

நாவலர், கணக்காயர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்து பொன்னாடை போர்த்திப் பட்டம் வழங்கிப் பாராட்ட மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் வடக்காடிவீதியில் ஒரு பெருங்கூட்டத்தைக் கூட்டினர். அக்கூட்டத்தில் அவர்களைப் பாராட்டிப் பேசுதற்கு அழைக்கப்பெற்றவர் இருவர் மட்டுமே. அந்த இருவரும் நாங்களே. பாரதியார் அவர்கள் பேச எழுந்ததும் "எனக்குத் தமிழகத்தில் பல்லாயிரம் மாணவர்கள் உள்ளனர். ஆனாலும் மிகச்சிறந்த மாணவர் இருவர். ஒருவர் வலப்புறமுள்ள அ. சி. இவர் பல்கலைக்கழகத்திற்கு உள்ளே. மற்றொருவர் இடப் புறமுள்ள கி. ஆ. பெ. இவர் பல்கலைக்கழகத்திற்கு வெளியே" என எடுத்த எடுப்பி லேயே கூறினார்கள். இதை நினைக்கும்போதெல்லாம் எங்கள் உள்ளம் பொங்கும். இதனாலும் நாங்கள் உடன்பிறந்தோர் என வாழ்த்தப் பெற்றிருக்கிறோம்.

எதற்கும் எவருக்கும் அடிமைப்படாமல் சுதந்திரமாக நடப்பது என்பதே எங்கள் இருவர் கொள்கையும். இதை ஏற்க, அல்லது ஒப்ப மறுப்பவர்களை மட்டுமில்லை; அவர்கள் இருக்கும் இடத்தையேவிட்டு வெளியேறி வந்துவிடுவோம். இந்தப் பிறவிக் குணமும் எங்களை உடன்பிறந்தோராகவே ஆக்கிவிட்டது.

தமிழகத்தை, தமிழ்மக்களை, தமிழ்மொழியை, தமிழிசையை, தமிழ்ப்பண்பை வளர்க்கத் தமிழகத்துச் சான்றோர்களையெல்லாம் ஒன்றுதிரட்டித் "தமிழகப் புலவர் குழு" எனப் பாரதியார் அவர்களின் இல்லத்தில் ஒரு குழு அமைக்கப்பெற்றது. நான் அதன் தொண்டர். திரு. அ.சி. அவர்கள் அதன் தலைவர். எங்களின் கடன் தமிழ்ப்பணி செய்து கிடப்பதே. இதனினும் நாங்கள் உடன் பிறந்தாரானோம். ஆம்! எங்களின் தாய் தமிழ்த் தாய்!

கல்வி, அறிவு. ஆற்றல் முதலியவைகளால் மிக உயர்ந்து விளங்கும் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதனார் அவர்கட்கு வயதில் மூத்தவன். தமையன் என்ற ஒரே காரணத்தினால் நான் வாழ்த்துக்கூறக் கடமைப்பட்டவன். ஆகவே, அவர் பன்னெடுங்காலம், நல்லுடல் நலத்துடனிருந்து, நலம் பல எய்தி நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு புரிந்து நல்வாழ்வு வாழ வேண்டுமென இந்த மணிவிழா நாளில் முழு மனத்துடன் வாழ்த்துகிறேன்.

நாடு புகழ் நாவலர்

கருமுத்து தி. மாணிக்கவாசகம், பி. ஏ.
இயக்குனர், மீனாட்சி ஆலைக்குழு, மதுரை.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்று ஆன்றோர், தமிழ்மொழியின் பெருமையைக் கூறுவர். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியிடத்துப் பெரும்பற்றுக்கொண்டு அதன் வளர்ச்சிக்காகத் தொண்டு இயற்றும் தமிழ்ச்சான்றோர் பலராவர். போற்றற்குரிய அத்தகைய தமிழ்ச்சான்றோருள் தமிழ்நாதராம் சிதம்பரநாதனார் முன்னணியில் நிற்கும் பெருமை சான்றோர் என்பதை யாவரும் நன்கு அறிவர். இவர் தமிழ்மொழிக்குச் செய்திருக்கும் தொண்டு வரலாற்றுப்புகழ் வாய்ந்ததெனின், அது மிகையாகாது. நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் பெற்றிலங்கும் செந்தமிழ்காவலர் சிதம்பரநாதனார் நாடு புகழ் நாவலர்; பாடு புகழ்ப் பாவலர். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்களுள் ஆராய்ச்சிப்பட்டம் பெற்றோர் பலர்; அமைச்சர் ஆனோர் சிலர்; அயல்நாடுகளுக்குச் சென்று தமிழ்முழக்கம் செய்வோரும் உளர்.

எழில் உருவமும் இனிய பண்பும் நிறைந்திலங்கும் இப் பெரியார், தமிழ் ஆசிரியர் நிலையை உயர்த்திய தக்கோர் ஆவர். தொன்மைச் சிறப்பு மிக்க நம் தமிழினத்தின் உயரிய பண்பைப்பற்றியும், கலைச்சிறப்பைப் பற்றியும், இலக்கிய வளத்தைப்பற்றியும் நாகரிக மேன்மையைப்பற்றியும் வெளிநாடுகளில் நன்கு விளக்கிக்கூறிய பெருமை இவரைச் சார்ந்ததாகும். தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை பெற்றுத் திகழும் சிதம்பரநாதனுர் பல நூல்களை மொழிபெயர்த்துள்ளார். இவர் இயற்றியுள்ள 'ஆங்கிலந் தமிழ் அகராதி' தமிழ்மொழி வரலாற்றில் இடம் பெற்று. இவர் தம் புகழை என்றும் நின்றுரைப்பதாகும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்லுவதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்."

என்னும் பாரதியார் பாடல், இவர் வாழ்விற்கு மிகவும் பொருத்தம் உடைய பாடல் ஆகும்.

இலக்கியக் கருத்துகளைச் சுவைபொருந்தக்கூறும் மதிநுட்பம் வாய்ந்திலங்கும் இத்தமிழ்ப்பெருமகனுர், திருக்குறட்கருத்துகளையும் சிலப்பதிகாரக் கருத்துகளையும் விளக்கும் திறன், தனிச் சிறப்புப் பொருந்தியதாகும்.

பல்கலைக்கழகங்களிலும் கல்விக் குழுக்களிலும் பெரும் பொறுப்பை ஏற்று நன்முறையில் பணியாற்றி வரும் இவர்தம் தொண்டு, என்றும் நினைந்து போற்றுதற்குரியதாகும்.

பாரதியார், பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளைஆகிய பாவேந்தர்தம் கவிதைகளையும் போற்றிப் புகழும் இவர், மறுமலர்ச்சிக் கவிஞர்களுக்கு நல்லாதரவு தந்து புதுமைக்கவி வளரப் பெரிதும் பணிபுரிந்து வருகிறுர்.

மணிவிழா ஏற்கும் தமிழ்ச் சிதம்பரநாதனுர் இறைவன் திருவருளால் எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ்க! வாழ்க!, என வாழ்த்துகிறேன்.



டாக்டர் ராஜா சர் M. A. முத்தையாச் செட்டியார் அவர்கள்
Kt. B.A., D. Litt., M. L. C.,
மணிவிழாத் தலைவர்

உ
சிவமயம

மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வர்
செந்தமிழ் காவலர்—தமிழ்ப் பேராசிரியர்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் M.A., Ph.D., M.L.C.,

மணிவிழாவிற் பங்குகொண்ட பெருமக்களுக்கு
வரவேற்புக் குழுவின் சார்பில் மனங்கனிந்து படித்து வழங்கிய

வரவேற்புரை

வரவேற்கிறோம்; வரவேற்கிறோம்; இம்மாபெரும் விழாவுக்கு வருகைபுரிந்திருக்கிற பெருமக்களாகிய உங்கள் யாவரையும் வரவேற்கிறோம். இவ்விழா டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்களின் மணிவிழா. இது திரு. செட்டியாரவர்கள் தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் அணிவிழாவுமாகும். இவ்விழாச் சிறப்புற அமைச்சர்களும், அறிஞர்களும், செல்வர்களும், தலைவர்களும், மருத்துவர்களும், வணிகர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், பெருமக்களும், பெருமாட்டியர்களுமாகத் திரண்டு வருகைபுரிந்திருக்கிறீர்கள். உங்கள் வருகையால் இவ்விழா, உயர்வடைகிறது. வானத்தில் மேகம் தவழ்ந்து செல்லும். அவ்வளவில் வயலிற் பயிர் வளர்ச்சியடையும். கிழக்குத் திக்கில் கதிரவன் கிளர்ந்தெழும். அதுகண்டதும் பொய்கைத் தாமரைகள் பொலிவு பெறப் பூக்கும். அங்ஙனமே நீங்கள் இவ்விழாவுக்கு வருகைபுரிந்தீர்கள். அதனல் எங்கள் அகமும் மலர்கிறது; முகமும் மலர்கிறது. அம்மலர்ச்சியோடு உங்களை வாயார வரவேற்கிறோம்; மனமார வரவேற்கிறோம்.

மதுரைத் தியாகராசர் கல்லூரியில் சில மாதங்களுக்கு முன்னர்த் தமிழ்ச் சிறப்புச் சொற்பொழிவொன்று நிகழ்ந்தது. எங்களிற் பலர் அழைக்கப்பெற்று அதற்குச் சென்றிருந்தோம். சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தமிழறிஞர் திரு.ந.சஞ்சீவியவர்கள்M.A., சிறப்புச் சொற்பொழிவாற்றினர். சொற்பொழிவுக்கிடையில், இக்கல்லூரி முதல்வர் அ. சி. செட்டியாரவர்களுக்கு அண்மையில் அறுபதாண்டு நிறைவுறுகிறதென்று கூறி அதனை நினைவுபடுத்தினர்கள். அக்குறிப்பே இவ்விழாக் கொண்டாட்டத்துக்கு அடிப்படை. டாக்டர் செட்டியாரவர்களின் மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடலா

மென்றும் அதனை மங்கல நாளொன்றில் நண்பர்களுக்கு அறிவித்து ஆவன செய்யலா மென்றும் எண்ணியிருந்தோம். இஃது இங்ஙனமாக ஆ. தெற்கூரில் கலைத்தந்தை கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்கள் இல்லத்தில், திரு. தி. சுந்தரஞ் செட்டியார் அவர்கள் மகள் திருமணத்தில் இதனை அறிவிக்க வாய்ப்புக் கிட்டியது. திருமணத்துக்கு வந்திருந்த டாக்டர் காமேசுவரனவர்கள், டாக்டர் லலிதா காமேசுவரனவர்கள், திரு. ஆவி. க. தியாகராசச் செட்டியாரவர்களாகிய மூவருங் கூடி இதுபற்றிக் கலந்து பேசினோம்.

டாக்டர் அ. சி. செட்டியாரவர்கள் வருமானமும் மதிப்பும் மிக்க அரச அலுவல் களிற் புகாமல், தமிழாசிரியத் துறையிற் புக்கதே தமிழ்மொழியின்பால் இவர்களுக் குள்ள பற்றினைப் புலப்படுத்தும். டாக்டர் செட்டியாரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சிறிதுகாலம் துணைவேந்தராக இருந்து சிறந்த பணியாற்றி இராஜா சர். அவர்களின் அன்பையும், நம் நாட்டு மக்களின் புகழையும், உலகத்தின் மதிப்பையும் பெற்றார்கள் என்றால் மிகையாகாது. சென்னைப் பல்கலைக் கழகத்தார் கேட்டுக்கொண்ட படி ஆங்கிலம்–தமிழ் அகர வரிசையைச் சிறந்த முறையில் டாக்டர் செட்டியாரவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். தம் பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களைப் போலப் பலதுறையான தகுதியும் பெற்றுத் தமிழை இழிவுபடுத்தும் பிறர் கூற்றுகளை இவர்கள் சாடியுமுள்ளனர். அயல்நாடுகள் செல்லும் இக்காலத் தமிழர்களிற் சிலர், தமக்குப் போதுமானபடி பண்டைத் தமிழ் நூலறிவு இல்லாமையால் இந்நாளைய சிறு கதை–தொடர்கதை நூல்களையே அவ்வயல் நாடுகளில் எடுத்துக் கூறிவருகின்றனர். அதனால் தமிழ்மொழியின் தொன்மையும் தன்மையும் தெரியாமற் போகின்றன. ஆதலால் அந்நாடுகளில் பழந்தமிழ்க் கொள்கைகளைப் பரப்பப் பலவகையானுந் தகுதி படைத்தவர் டாக்டர் அ.சி.செட்டியாரவர்களேயென உலகப்பொருளியல் அறிஞர்களில் ஒருவரான ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள் அறிமுகஞ் செய்துவைக்க அதன் மேல் மேலைநாடுகள் சென்றுவந்தவர் நம் டாக்டர் செட்டியார் ஆவார். அன்றியும் தமிழகத்தில் ஆராய்ச்சித் துறையில் முதன் முதல் டாக்டர் பட்டம் பெற்றவரும் இவரே யாதலால் இவர் மணிவிழாக் கொண்டாட முடிவு செய்தோம்.

ஒருநாள் கலைத்தந்தை கருமுத்து. தியாகராசச் செட்டியார் அவர்களிடத்தும் திரு. தி. சுந்தரஞ் செட்டியாரவர்களிடத்தும் எங்கள் கருத்தினைத் தெரிவித்தபோது அவர்கள் சாலநன்றென ஒப்பினர். இதன் சார்பாக மதுரைத் தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் ஓர் அமைப்புக் கூட்டம் கூடியது. கூட்டத்துக்குக் கருமுத்து. தி. சுந்தரம் செட்டியாரவர்கள் தலைமை தாங்கினர். திரு. N. திருஞானசம்பந்தமவர்கள், டாக்டர் காமேசுவரனவர்கள், திருமதி டாக்டர் காமேசுவரன் அவர்கள், திரு. PL. மெய்யப்பனவர்கள், திரு. லெ. நாராயணன் செட்டியாரவர்கள், திரு. ஆவி. க. தியாக ராசச் செட்டியாரவர்கள், திரு. ஜட்டாலால் சோலங்கியவர்கள், திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கள், ஆகியோர் அமைப்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்தனர். டாக்டர் செட்டியாரவர்களின் மணிவிழாவை வனப்பமையக் கொண்டாடுவதெனவும், அதற்கென மதுரை நகரப் பெருமக்களடங்கிய வரவேற்புக் குழுவொன்று அமைப்பதெனவும், திரு. ஆவி. க. தியாகராசச் செட்டியாரவர்களும், டாக்டர் திருமதி லலிதா காமேசுவர னவர்களும் வரவேற்புக் குழுத் தலைவர்களாக இருந்து இவ்விழாவை நடத்தித்தர அவர்களைக் கேட்டுக்கொள்வதென்றும், மணிவிழா மலரொன்று வெளியிடுவதென்றும், விழாவுக்கு இவரிவரை அழைப்பதென்றும் முடிவு செய்தது அமைப்புக்கூட்டம்.

இதற்கிடையில் இவ்விழாவிற்குரிய டாக்டர் அ. சி. செட்டியார் அவர்கள் அறுபதாண்டு நிறைவெய்தும் மங்கல நாளில் அதனை யாருக்கும் அறிவியாது தாமும் தம் மனைவியாருமாகச் சென்று சொக்கநாதரையும் அவர் தேவியாரையும் வழிபட்டு அருச்சனை செய்து மணிவிழாக் கொண்டாடி இருந்தனர். எங்களுக்கு வாய்த்த ஒருநாள் அவர்களைக் கண்டு எங்கள் கருத்தினை எடுத்துக் கூறினோம். ஆரவாரத்தை அவாவாத அவர்கள், எங்கள் கருத்துக்கு இசைவு தாராமையோடு, இவ்வேற்பாடு வேண்டாமென்றுங் கூறினர். நாங்கள்தாம் தாய்மொழித் தொண்டு செய்பவர்களைப் பாராட்டினால் மேலும் பலர் அத்தொண்டு செய்ய முற்படுவரென்றும், தமிழ் தழைக்குமென்றுங் கூறி மணிவிழா ஏற்பாட்டில் முனைந்தோம். பொன்னாடை வழங்கியும், கேடயம் நல்கியும், வாழ்த்தி வாழ்த்தி நாத்தழும்பேறிய நன்மக்களை வருவித்து வாழ்த்தச் சொல்லியும் இவ் விழாவை நடத்தத் திட்டமிட்டோம். பின்னர்த் தியாகராசர் கலைக்கல்லூரி மாணவ அன்பர்களைக் கூட்டி விழாவைப்பற்றி அறிவித்தோம். அவர்கள் இதனை மகிழ்ச்சியாக வரவேற்று விழாவில் தம்பங்கினை உயர்வாக ஆற்றுவதாகவுங்கூறினர். அருளளிப்புகள் அளித்து நமது டாக்டரவர்களைச் சிறப்பிக்குமாறு சிவநெறித் திருமடங்களின் அருளாளச் செம்மல்களை வேண்டினோம். அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றித்தர இசைந்தனர்

அறிஞரைப் பாராட்டும் இந்த விழாவுக்கு ராஜா சர். மு. அ. முத்தையாச் செட்டியாரவர்களைத் தலைமை தாங்கி நடத்திக்கொடுக்குமாறு அழைத்தோம். அவர்கள் இதோ வந்து அமர்ந்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்தும் தமிழிசையை வளர்த்தும் வந்த வள்ளல் மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் தவ மைந்தரும், அத்தொண்டுகளைத் தம் தந்தையாரைக் காட்டிலும் பலமடங்கு ஆற்றிவருபவர்களுமான ராஜா சர். அவர்கள் தலைமைதாங்குவது பொருத்தம். டாக்டர் செட்டியார்க்குப் பொன்னாடை வழங்குபவர்களும் ஒரு ராஜர். அவர்கள் கருமுத்து. தியாகராசர். 'இன்னுயிர் கொடுத்தும் என்மொழி காப்பேன்' என்றவர்கள் இவர்கள். கல்லூரிகள், உயர்பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள், மருத்துவ மனைகள் கண்ட கலைத்தந்தையும் ஆவார் இக் கருமுத்து. தாம்மட்டுமாகவே இரண்டுகோடிக்குமேல் அறப்பணி செய்யும் சான்றவரான இவர்கள் பொன்னாடை வழங்க மிகப் பொருத்தமானவர்கள். அ. சி. செட்டியாரவர்களின் இல்லக்கிழத்தியாரான பெரியநாயகியம்மா அவர்களுக்குப் பட்டாடை வழங்குபவர் கலையன்னை திருமதி. இராதா தியாகராசனவர்கள். கவின்மலையாளம் பயின்று கவர்ச்சிமிகும் ஆங்கிலங் கற்றுக் கன்னித்தமிழ் தேர்ந்த இக்காவியம் வல்லார், ஓவியம் வல்லார்க்குப் பட்டாடை வழங்கல் உயர்ந்ததன்றோ !

பொற்குடத்துக்குப் பொட்டுவைத்தது போலப் போற்றத்தக்க இப்பேரவையைப் பொலிவுபெறச் செய்வது புலமைமிக்க அமைச்சர்கள் இருவர் வருகையென்றால் இது பொய்யுரையுமன்று; புனைந்துரையுமன்று. மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியனவர்கள் M. A., மலர் வெளியிடுகிறார்கள். கல்வியும் தொழிலுமாகிய கண்கள்போன்ற இரு துறைகள் இவர்கள் கையில் உள்ளன. கேடயம் வழங்குபவர்கள் பெருமைமிகு K. A. மதியழகன் B.A., அவர்கள். உணவுக்குறையுள்ள இந்நாளில், உள்ள உறுதியோடு உணவுத் துறையை ஏற்று எங்கும் ஒருபடியரிசி கிடைக்க ஓயாது உழைக்கும் அமைச்சர் இவ்வுரவோர். வருகிற டிசம்பர் மாதத்துக்குள் தமிழகம் முழுவதும் ஒருபடி அரிசி போடுவதாகச் சொல்லும் இவ்வமைச்சர் அதற்காக வருந்தியுழைத்து வருகிறார். "கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்றன்னை" யென்றார்கள் நம்முன்னோர்கள் கடவுளை.

அது இம்மதியமைச்சர்களுக்கும் பொருந்தும். இவர்கள் உயர்ந்த கருத்துடையவர்களாதலால் நம் கருத்தில் இடம்பெற்றிருக்கின்றனர். அதன்மேல் நமது கருத்தையும் அறிந்து முடிக்கின்றனர். இவர்களோடு பாராட்ட வந்துள்ளார் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். இவர் திரு. க. அன்பழகன் M. A., என்பார். சொல்லின் செல்வராகிய இத்தோன்றல் பச்சையப்பர் கல்லூரித் துணைத்தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். இவர்கள் மூவருமே நம் டாக்டரவர்களுக்கு நன்மாணுக்கர்.

மேலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தலைவரும், அன்றிருந்து இன்றுவரை நீதிக் கட்சியில் உள்ளவருமாகிய தமிழவேள் திரு பி. டி. இராசனவர்கள் B.A., Bar-at-law., பாராட்ட வந்துள்ளார்கள். கடைச்சங்கத்துக்குப் பின் நாற்பத்தொன்பது புலவர்களை ஒரு குழுவினராகக் கூட்டி இன்று தமிழகத்தில் தமிழுணர்ச்சியைத் தட்டியெழுப்பிய சான்றோர்–இந்தியை யெதிர்த்த ஏந்தல்–ஆகாசவாணியை மறுத்த அறிஞர் –முத்தமிழ் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதமவர்கள் வந்துள்ளார் வாழ்த்துரை வழங்க. இதோ அமர்ந்திருக்கிறார்கள் ம. பொ. சி. திருத்தணியை மீட்டுத்தந்த செம்மல், சிலம்புச் செல்வர், வள்ளலார் உள்ளத்தை வடித்துத்தந்த வள்ளல். அவர்களும் வாரி வழங்குவார்கள் அன்புரை. ஒருபக்கம் பெருமக்கள் கூட்டம், மற்றொரு பக்கம் பெருமாட்டியர் கூட்டம். இனியொருபக்கம் மாணவர்கள் ஈட்டம். உள்ளம் விம்முகிறோம்; உடல் பூரிக்கிறோம் உங்கள் வருகையையெண்ணி. இவர்களையும் உங்களையும் வரவேற்கிறோம்; வரவேற்கிறோம்; இதயங்கனிந்து வரவேற்கிறோம்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள,
ஆவி. க. தியாகராசச் செட்டியார்
டாக்டர் லலிதா காமேசுவரன்
வரவேற்புக்குழுத் தலைவர்கள்.

மதுரை
7—9—1967.



‘கலைத்தந்தை’

கருமுத்து-தியாகராசச் செட்டியார் அவர்கள்

பொன்னுடை வழங்குநர்

'கலையன்னை'

திருமதி இராதா தியாகராசன் B.Sc.,

பொன்னுடை வழங்குநர்

உ

மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வர்

தமிழ்ப்பேராசிரியர்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள்

M. A., Ph. D., M. L. C.

வாழ்க்கை வரலாறு

குடந்தையம்பதியில் சைவத்திரு. அ. அமிர்தலிங்கம் செட்டியாருக்கும் பார்வதி அம்மையாருக்கும் புதல்வராய்ச் சிதம்பர நாதன் 3-4-1907 இற் பிறந்தார், இராவ்பகதூர் அப்புசாத்திரியார் நடத்தி வந்த நேட்டிவ் உயர்நிலைப் பள்ளியிற் கல்வி கற்றுப் பள்ளியிறுதித் தேர்வில் சிறப்புற வெற்றி பெற்ருர். குடந்தை அரசினர் கல்லூரியிற் சேர்ந்து 1928-ல் பி. ஏ. வகுப்பில் முதன்மை பெற்றுத் தேர்ச்சியடைந்தார். மாநிலத்தில் தமிழிற் சிறப்புடன் தேர்ச்சி பெற்றமைக்காக. ஜி. யூ. போப் தங்கப் பதக்கமும் பிராங் கிலின் கெல் தங்கப் பதக்கமும் அளிக்கப் பெற்ருர். ரெவனியூ போர்டு, அரசாங்கத் தலைமைச் செயலரகம் ஆகியவற்றில் எழுத்தராகப் பணியாற்றிய பிற்பாடு சென்னை அரசினர் முகம்மதியர் கல்லூரியில் 1930 ஜூலைத்திங்களில் தமிழாசிரியராக நியமிக்கப்பெற்று மூன்ருண்டுகள் அங்கே பணியாற்றினர். ஈ. டபிள்யூ. கிரீன், எச். வி. பாப்வொர்த்து ஆகிய முதல்வர்களின் நன்மதிப்பை ஆங்குப் பெற்ருர். 1933 முதல் 1935 வரை அண்ணுமலைப் பல்கலைக்கழக முதுகலை வகுப்பு மாணவராயிருந்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று எம். ஏ. பட்டம் பெற்ருர். நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியோர்பால் கல்வி கற்ருர். பிறகு, ஓராண்டு அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையிற் பணியாற்றினர். 1936-இல திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழக முதன்மை விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுச் சென்றபொழுது, அவருடைய இடத்தில் விரிவுரையாளராக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டார்; பட்டதாரிகள் தொகுதியிலிருந்து செனட்டிற்கும், ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து அகாடெமிக் கவுன்சில் என்னும் கல்விக் குழுவிற்கும் உறுப்பினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; செனட்டு உறுப்பினர்கள் தமக்குள் மூவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலிலும் வெற்றி பெற்ருர். அவ்வாறு அப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மற்ற இருவர் திரு. முத்துரங்க முதலியார், திரு. பஷீர் அகமது,

1941-இல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அவர் எழுதி வெளியிட்ட '' தமிழ்ச் செய்யுள் வரலாறு '' என்னும் ஆராய்ச்சி நூலிற்காக டாக்டர் பட்டம் வழங்கப்பெற்ருர்; 1946 முதல் 1958 வரை தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கினுர்.

அண்ணுமலைப்பல்கலைக்கழகம் நிறுவிய பெரியார் இராசா சர்: அண்ணுமலைச் செட்டியாரவர்களுடைய நன்மதிப்பையும் அவர் திருமகனுர் இராசா சர்: முத்தைய

செட்டியார் அவர்களுடைய நன்மதிப்பையும் டாக்டர் சிதம்பரநாதன் பெற்றவர். அவ்வாறே துணைவேந்தர்கள் மகாகனம் சீனிவாச சாத்திரியார், சர் கே.வி. ரெட்டி, திரு. எம். இரத்தினசாமி, டாக்டர் மணவாளராமானுசம், டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் ஆகிய அனைவருடைய நன்மதிப்பையும் பாராட்டினையும் பெற்றவர்.

அவ்வாறே சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியாரவர்கள், டாக்டர் சிதம்பரநாதனின் இருமொழிப் புலமையிலும் நிர்வாகத்திறனிலும் மிகவும் ஈடுபட்டவர், அதனால், அண்ணமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி 1958-இல் சட்டமன்றத் தேர்தலில் ஆசிரியத் தொகுதியிலிருந்து போட்டியிட்ட ஓராண்டிற்குள்ளாக அவரைப் பல்கலைக் கழகம் தொகுப்பிக்க எண்ணியிருந்த ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராக வந்து பணியாற்றுமாறு அழைத்தார். அப்பணி 1959-இல் தொடங்கி 1965 ஜூலையில் செவ்வனம் முடிவுற்றது.

டாக்டர் சிதம்பரநாதன் 1948-இல் அண்ணமலைப் பல்கலைக்கழக இடைக்காலத் துணைவேந்தராக ஐந்து திங்கள் சிறந்த முறையிற் பணியாற்றினுர்.

இவர் பதினுன்கு ஆண்டுகளாக மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவராயிருந்து, மாநிலத் தமிழாசிரியர்களுக்குப் பெருந்தொண்டு இயற்றியுள்ளார். தமிழகப் புலவர்குழுவின் செயற்குழுத் தலைவராக ஈராண்டுகளாக இருந்துவருகிருர். மாநிலம் முழுதும் ஒரு தொகுதியாக இருந்த 1958-ஆம் ஆண்டுத் தேர்தலில் மேல் சட்டமன்ற உறுப்பினராகக் கடும் போட்டியினிடையே ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொகுதிகள் பிரித்து வைத்த பிற்பாடு நடந்த 1964 தேர்தலில், வடவார்க்காடு – தென்னுர்க்காடு ஆசிரியர்கள் தொகுதியிலும் கடும் போட்டியினிடையே வெற்றி பெற்ருர். பொதுவாக ஆசிரியர் நலத்திற்கும் சிறப்பாகத் தமிழாசிரியர் நலத்திற்கும் உழைத்துவருபவர் திரு. சிதம்பரநாதன்.

1955-இல் பிரிட்டிஷ் கவுன்சில் அழைப்பின்பேரில் இங்கிலாந்து ஸ்காத்துலாந்து ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழக நிர்வாக முறைகளை நேரிற்போய்க் கண்டறிந்துவந்தார். பிரான்சு, இத்தாலி, சுவிட்சர்லாந்து அவர் சென்ற பிற தேசங்கள். 1956–இல் சிங்கப்பூர் - மலேயா நாடுகளுக்குத் தமிழர் பிரதிநிதித்துவ சபையினரின் அழைப்பினை யேற்றுச் சென்று தமிழறிவு பரப்பிவந்தார்.

அவர் சாகித்ய அகாடெமி உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். பல்கலைக் கழகக் கல்வி ஆய்வுக்குழு முன்னும், இந்திய ஆட்சிமொழிக்குழு முன்னும் இவர் அளித்த சாட்சியங்களில் தமிழின் இன்றியமையாமை பற்றியும், தொடர்பு மொழி ஆங்கிலமாக இருத்தற்பாலது என்பதுபற்றியும் விளங்க எடுத்துச் கூறினுர். தமிழ் மொழியின் ஆக்கத்திற்கும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும் உழைத்து வருபவர். இவர் கருத்துகள் இன்ன என்பதை நேரிற் பண்டித நேரு அவர்களும், குடியரசுத் தலைவர்கள் இராசேந்திரா பிரசாத், இராதாகிருட்டிணன் அவர்களும், டாக்டர் கரே, டாக்டர் சம்பூர்ணநந்து போன்றவர்களும் அறிந்துள்ளார்கள்.

இரா. வேந்தன்



மதுரை
மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்
பொற்றாமரைக் குளம்

இவர் இயற்றியுள்ள நூல்கள்: ஆங்கிலத்தில் "Advanced Studies in Tamil Prosody", "An Introduction to Tamil Poetry"; தமிழில் "உழைப்பால் உயர்ந்த ஒருவர்", "முன்பனிக்காலம்", "தமிழோசை", "தமிழ் காட்டும் உலகு", "மன்னுயிர்க்கு அன்பர்", "வீட்டுத் திருமகள்" முதலியன.

பல்கலைக்கழக ஆட்சிக்குழு (Syndicate) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழாசிரியர் இவர்தான்; ஆராய்ச்சி டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழாசிரியர் இவர்தான்; பல்கலைக்கழகத் துணைவேந்தர் பணிபுரிய முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழாசிரியரும் இவர் தான்.

இவர் மனைவியார் திருவாட்டி பெரிய நாயகியம்மா, திரு. சிதம்பரநாதன் அவர்களைப்போலவே மாணவரிடத்தில் அன்பு காட்டி அவர்களையெல்லாம் ஊக்குவித்து வருபவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்த பொழுது விருந்தோம்புதலிற் சிறந்தவர் என்று புகழெய்தியவர்; அரசாங்க ஓவியத் தேர்வுகளிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஓவியப் பட்டத் தேர்விலும் வெற்றி பெற்றவர்; ஓவியக் கலை வல்லவர். இவர் வரைந்த காந்தியடிகளின் படம் திருநெல்வேலி மருத்துவர் கல்லூரியை அணி செய்கிறது. டாக்டர் சிதம்பரநாதன் அலுவல்களில் உறுதுணையாய் இருந்து வருபவர்.

டாக்டர் சிதம்பரநாதன் மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வராக 1965 ஜூலை 15-ஆம் தேதி முதல் பணியாற்றி வருகிறார். இரண்டாண்டுகளாக அவரது அயரா உழைப்பாலும் மதியுடைமையாலும் கல்லூரியிற் கட்டுப்பாடும் ஒழுங்கும் சீர்ப்படுத்தப்பட்டுள்ளன. மாணவரிடத்து அன்போடும் கண்டிப்போடும் திரு. சிதம்பரநாதன் செயலாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. பண்பொடு யாவர்மாட்டும் பழகும் பெற்றியாளர் இவர். ஆசிரியர்கள் அன்பினையும் நன்மதிப்பினையும் பெற்றிருக்கிறார். மதுரைப் பல்கலைக் கழக எல்லையில் உள்ள (அகாடெமிக் கவுன்சிலரால்) கல்விக்குழு உறுப்பினர்களால் ஆளுநர் அவை (சின்டிகேட்) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருடைய தொண்டு இன்னும் பல்லாண்டு தமிழக மக்களுக்குக் கிடைப்பதாக.

ROLE OF EDUCATIONAL AGENCIES IN PROMOTING NATIONAL INTEGRATION

BY

'Tamil Perum Pulavar' Prof. S. ARUMUGA MUDALIAR, M.A., B.O.L., L.T.,
Principal, (Madras Educational Service — retired) and Principal,
Sri Palaniandavar College of Indian Culture, Palni, Madurai Dist. Madras State.

Our country is facing a crisis with unfriendly countries knocking at our northern, north-eastern and eastern sectors and with shortage of food and other essential commodities in the country, it is of the utmost importance that all agencies in the country in the public and private sectors, including educational agencies should with one voice concentrate on achieving national integration to withstand and overcome the anti-social elements both from within and without, and lead the country to success and great achievement.

Our country, from time immemorial, inspite of multilingual, multi-racial and multi-cultural elements, has been progressing with one voice and one integrated aim, as one nation-the Barath from the great Himalayas to Comorin and from the east to the western borders. We wanted others also to live in union and with international out-look and mutual understanding with others. Our ideals and ideologies with the ultimate objects of achievement, were based on the bed rock of Dharma - ethics and morality and as

" சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல "

Sirappudai Marapil Porulim Inpamum
Arattu Valippadum Torram Pola —

even as the great tradition of Artha and Kamam, the wealth acquisition of and government for social life and the enjoyment in this world, follow the basis of Ethics and morality. — (Purananur)

and

" அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல "

"Arattan Varuvate Inpam Marrellam
Puratta Pukalu Mila" —
"Happiness springs only from Dharma. All else is sorrow and merits no praise"— (Tirukkural) said very long long ago.

"Though there are over 47 crores of faces in our country, the strong soul is one and the same, and though there are more than eighteen languages in the country the process and way of thinking is the same. The thoughts expressed by thinkers in Kasi will be heard in Kanci according to our National Poet" Barathi (Enkal Tay stanza 3 and Barata Tesam stanza 7). It is, therefore, our duty, the duty of all the learned and distinguished scholars, educationists, Administrators and spiritual leaders, to concert and channelise all ideal and practical measures to preserve and sustain this great national integration in the present times, in the face of mighty odds.

Of all the agencies that foster this ideal, educational institution is one of the most potential one, and in the short time at my disposal, it will be my humble endeavour to place before the learned delegates some of the practical ways, in which the theories on national integration can be inculcated in the minds, of the young men and women entering the portels of our Arts, Science, Technical, Technoligical and professional institutes of Higher Education in this country.

It was given to my lot to have served the cause of Higher Education in this state for over 40 years as Assistant Professor, Professor and Principal (from 1955) in Arts and Science, Teacher Training and Indian Culture Colleges. The more we teach all the more we learn, and from my long experience as a Teacher, theoretically and practically, I have come to the form conviction, that education in the full sense of the term will not be complete, unless the education that is imparted in our country at the primary, secondary and higher levels, is an alround and co-ordinated education, for Physical, intellectual and emotional including moral and spiritual faculties of the individual, so that the individual, the future citizen of India and the world will be fit to enter the arena of life. Nor will he be fit to play his due part in the national integrated life and much less international life, without this co-ordinated education. The first and foremost duty of educators is, therefore, to make the individual first a fit and co-ordinated and integrated personality to enable him or her to become integrated in the full life of the family, community, society, country and the world in turn.

The educator must first be clear in his mind about the aims of education, and educational values. The aims determine educational values, and what subjects we teach, is largely dependent upon what aims we seek to achieve through them. Hence, the teacher should first, and then the student through him, must be familiar with the object and aims and values in education. The *Vocational aim* — the bread and butter aim — that is the utilitarian aim is of course the starting point. Though purely utilitarian, it is neither sordid nor anti-social and anti-national in its results. Nevertheless a purely vocational education to which education may be drifting in modern times, will not meet the needs of life and ultimate objects of achievement, which consists as already seen, of many more aspects than merely earning one's livelihood. A purely vocational training will

be narrowing one's outlook and defeating its own ends. One will become soon conservative and unprogressive.

The exact anthesis of the vocational aim is the *knowledge aim*. If the one is much too practical, the other is far too impractical and, if the one glorifies material possessions, the other intellectual possessions we must move further. The *Cultural aim* is next looked upon as a branch of the knowledge aim, and this leads us to the *Complete living aim* formulated by Spencer and to the *Moral aim* formulated by Herbart. Morality being closely connected with society, rounding off the brute and anti-social impulses in man, leads us to the social aim of education. This aim has more claims to be accepted more than any other aim; but it subordinates the individual to a degree not observable in ordinary life. History teaches us of the emancipation of man from the family, clan, and the tribe and not his progressive subordination to them. The social aspect is not the only aspect of individual life.

All the above aims in an integrated way should lead us finally to the *Harmonious development of man's physical, intellectual and emotional, including moral, spiritual and aesthetic faculties.* It is this integrated personality that is going to play an important part in our integrated national life of to-day. It is the duty of educational agencies to train such personalities in their campus and send them out into the world.

Let me list some of the important factors inculcating the integrated disciplines in the minds of our prudents in colleges of higher education which will lead to an integrated national life with a broad outlook of universal brotherhood also.

(1) An elementary broad-based syllabus of comparative religion, Literature, Philosophy, Ethics and ways of life and cultures of different regions of the country and different countries may be framed and gone through during all the 4 or 6 years of higher education in Arts, Science, Commerce and Technical and Technological and Professional colleges in Pre-University — Graduate and Post graduate levels. The students need not be formally examined in this course, but they must experience these in their University life.

(2) Each day to begin with a prayer of universal nature in each class in the local language and English occasionally.

(3) Once a week, perhaps on the first day of the week, all classes may come together for a common Assembly taken by an educationist or religious leader for a few minutes with common prayer, National Flag salutation, National Flag songs, National integration pledges and songs, brief address ending with National Anthem create that consciousness.

(4) Devotional songs of particular religions of the students and common songs may be learnt by heart and recited by students in residential institutions in *hostels* in chorus both during morning and evening prayers.

Physical jerks each day in the morning for a few minutes in residential hostels.

(6) Weekly common worship in temples. The students may go to their respective places of worship under the guidance of tutors or student leaders.

(7) Celebrations in residential hostels or colleges, festivals, and days of saints, pro-

phets and thinkers of all denominations like Christmas, Gokulashtami, Vinayaka Chaturti, Skanda Sashti, Sivarathri, Ekadasi, Id, Sankara, Ramanuja, Neelakanta, Maykanta, Madhva, Appar, Nammalvar, Buddha, Mahavira etc., to be conducted by students followed by lectures, debates oratorical and essay competitions, recitations etc.

(8) Sramdhan work-life slum clearance, road laying, hospital services etc.-to inculcate spirit of service and dignity of labour. Road sense campaigns on important festival days when huge congregation of pilgrims in places like-Palni, Chidambaram, Madurai, Srirangam, Tiruvannamalai, etc. — by N. C. C. cadets and social service league members will be a good lesson for them, in social and National integration.

(9) Organising Bhajanas and Kalakshepams relating to topics of national culture and religion in regional and other languages, social life etc. and demonstrations of Yogic Asanas by experts and participation by interested students.

(10) Annual, excursion to places of religious, cultural architectural and archaeological interest in all regions.

(11) Arranging for inter-collegiate and inter-university competitions in sports and games and other cultural and literary activities.

These are some of the ways in which institutes of Higher education of all denominations can in my opinion, instil the thesis of national integration in the minds of young and adolescent men and women in their portels. All these will lead one to an integrated life of love and brotherhood of truth and Ahimsa in a Sarvodaya classless, casteless, colourless and creedless society envisaged by Mahatma Gandhi, the Father of the Nation, and Acharya Vinoba Bhava, the Modern Architect of that society.

I may conclude that almost all these aspects of in integrated approach to education are practically covered in the college to which I have the honour to belong, the Sri Palani Andavar College of Indian Culture, Palni, Madurai District, coaching students for the B.A. degree in Indian Culture of the Madras University (Branch XIII) till recently and now of the Madurai University.

உழைப்பால் உயர்ந்தவர்

பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம், M.A.,
தமிழ்த்துறைத் தலைவர்.
கிறிஸ்தவர் கல்லூரி, தாம்பரம், சென்னை.

என் அருமை நண்பர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் அன்பினையும் நட்பினையும் கடந்த 33 ஆண்டுகளாக யான் பெற்றுள்ளேன். யான் 1934-ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் B.A. (Hons.) (தமிழ்) வகுப்பில் சேர்ந்தேன். அவர் 1935-ம் ஆண்டில் எங்களோடு கலந்து கொண்டார். அதற்கு முன்னரே அவர் ஆசிரியராகப் பணிபுரிந்து இரண்டு ஆண்டுகள் விடுமுறை பெற்று 1935-ம் ஆண்டு தமிழ் M.A. வகுப்பில் சேர்ந்தார். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது ஆங்கிலப் பேரவைத் தலைவராகவும், (Union Chairman) தமிழ்ப் பேரவைத் தலைவராகவும் விளங்கிச் சிறந்த பணி ஆற்றினர். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும். தமிழ்ப் பேராசிரியராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் (Vice-Chancellor) பணி புரிந்தார். தம் உழைப்பின் பயனால் இப் பதவிகளை அவர் பெற்றார்.

திரு. செட்டியார் அவர்கள் சிறந்த சைவ மரபில் தோற்றியவர்கள். அவரிடத்தில் அன்பு, ஆள்வினையுடைமை, அறிவுடைமை, வீரம், பக்தி முதலிய பண்புகள் நிரம்பப் பெற்றுள்ளன. இதனால் அவர் பலருடைய நட்பினைப் பெற்றுள்ளார். சென்னைத் தமிழாசிரியர் கழகத்தில் தலைவராக விளங்கி அவர் தமிழ் ஆசிரியர் நலனுக்காக ஆற்றியுள்ள பணிகள் பல. தமிழ் ஆசிரியர் நலனுக்காகத் தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரிடத்திலும், கல்வித்துறை இயக்குநரிடத்திலும் அவர் பலமுறை தூது சென்று தமிழாசிரியர்களுக்குப் பல நன்மைகளைச் செய்துள்ளார்.

திரு. செட்டியார் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கேரளாப் பல்கலைக் கழகம், மைசூர்ப் பல்கலைக் கழகம் ஸ்ரீ வெங்கடேஸவராப் பல்கலைக் கழகம் முதலிய பல பல்கலைக் கழகங்களின் தமிழ்க் கலைக் குழுவின் உறுப்பினராகவும் தேர்வுக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள். இத்தகைய குழுக்களில் யானும் அவருடன் கலந்து பணியாற்றியதுண்டு. அவர் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து சிந்தித்துச் செய்வார்.

அவரது புலமைநலத்தினையும் ஆராய்ச்சித் திறமையினையும் கண்ட சென்னைப் பல்கலைக் கழகத்தார், ஆங்கிலத் தமிழ் அகராதியின் பதிப்பாளராக அவரை நியமித்தார்கள். அந்த அகராதியின் பதிப்பாளர் குழு உறுப்பினர்களுள் யானும் ஒருவனாகப் பணியாற்றினேன். அப்போது திரு. செட்டியார் அவர்களின் ஊக்கத்தினையும் ஆராய்ச்சித் திறனையும் நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

"இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்(து)
அதனை யவன்கண் விடல்"

என்ற பொய்யாமொழிக்கு ஏற்ப ஆசிரியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து திரு. செட்டியார் அவர்களை ஆசிரியர்களின் சார்பில் சென்னை சட்டசபை உறுப்பினராகத் (M.L.C.) தேர்ந்தெடுத்தார்கள். சட்டசபையில் திரு. செட்டியார் அவர்கள் பொதுவாக ஆசிரியர்களுக்காகவும் சிறப்பாகத் தமிழாசிரியர்களுக்காகவும் பல முறை பரிந்து பேசியுள்ளார்கள்.

திரு. செட்டியார் அவர்கள் இங்கிலாந்து, மலேயா, இலங்கை முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று தமிழ்த் தொண்டு ஆற்றியுள்ளார்கள். தில்லை அம்பலவாணரிடத்து அவருக்கு அளவுகடந்த அன்பு உண்டு என்பதை யான் அறிவேன். அவர் இத்தகைய பொதுப்பணிகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு ஊக்கம் அளித்து வருபவர் அவரது வாழ்க்கைத் துணைவியார் என்பதை நாம் மறக்க முடியாது. திரு. செட்டியாரவர்கள் தம் உழைப்பால் உயர்ந்தவர். அவர் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் துணைத்தலைவராகவும் அல்லது அமைச்சராகவும் பணி புரியத்தக்க ஆற்றல் பெற்றவர். தமிழ் நாடு அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர் இன்னும் பல்லாண்டுகள் சிறக்க வாழ்ந்து தமிழ் மொழிக்கும் நாட்டிற்கும் சிறந்த தொண்டு ஆற்றுவாராக. அவருக்கு எல்லா நலன்களையும் அளிக்குமாறு யான் ஸ்ரீ நடராசப் பெருமானை என் மனமொழி மெய்களான் இறைஞ்சுகிறேன்.

வழிபாட்டுக்கு உகந்த மொழி

கி. இராமலிங்கனுர்,
'தமிழ் மணம்' சென்னை-30

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலைநேரம். சாந்தினிகேதத்தில் ஒரு வயதானவர் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார். அவர் ஒரு வங்காளி. அந்தத் தாத்தாவின் கையைப்பற்றிக் கொண்டு அவர் பேர்த்தி சென்ருள். அவள் சிறு பெண். அதுதான் முதல்முறை அந்தச் சிறுமி சாந்தினிகேதனுக்கு வந்தது. அப்போது அங்கு வழிபாடு நடந்து கொண்டிருந்தது. ஆசிரமத்திலுள்ளோர் காலையும் மாலையும் ஒன்று கூடி சில வடமொழி மந்திரங்களை ஓதி வழிபாடு செய்வது வழக்கம். இப்படி ஒரு கூட்டத்தை அப்பெண் அதற்கு முன்பு கண்டதில்லை. எல்லோரும் கலந்து ஓதுவது அவளுக்கு ஒரு புதுமையாக இருந்தது. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்? என்று அச்சிறுமி தன் பாட்டனுரைக் கேட்டாள். 'கடவுளை வழிபடுகிருர்கள்' என்று தாத்தா விடை பகர்ந்தார். 'என்ன மொழியில் வழிபடுகிருர்கள்?' என்று மேலும் வினவினுள். 'வடமொழியில்', என்று பாட்டையா விடை சொன்னுர்.

சிறுமி சிறிதுநேரம் சிந்தித்தாள். பிறகு மெல்லக் கேட்டாள்; "ஏன் தாத்தா, வங்காள மொழி கடவுளுக்குத் தெரியாது என்பதனுலா?" என்று. பெரியவர் இந்தக் கேள்வியைக் கேட்டதும் வியப்புற்ருர்.

இச்செய்தி வார்த்தாவிலிருந்து வெளி வந்துகொண்டிருந்த அரிசன் தாள் தொகுப்பு XII எண் 13, 30-5-1948ல் வெளியாகியிருக்கிறது. திரு. மார். சுருவாலா என்பவர் 7-5-1948ல் இதனை எழுதியிருக்கிருர்.

திரு. விநோபாபவே அவர்கள், வழிபாட்டை அவரவர் தாய்மொழியிலேயே செய்யவேண்டும் என்று வற்புறுத்தும் பெரியவர். இதற்குச் சிலர் தடை கூறி வந்தனர். அத்தடைக்குத் தகுந்த விடை கூறுவது போலவே, மேற்கண்ட நிகழ்ச்சியை திரு. விநோபாவுக்கு ஒருவர் எழுதியிருந்தார்.

13-6-1948ல் வெளியான 'அரிசன்' தாள், தொகுப்பு XII, எண் 15ல் காணும் இன்னொரு செய்தியையும் இங்குக் குறிப்பிடலாம். அந்தத் தாளின் ஆசிரியருக்கு அத்தாளின் நேயர் ஒருவர் அனுப்பிய கேள்வியும் அதற்கு ஆசிரியரின்விடையும் வருமாறு :

கேள்வி : "நம்நாடு உரிமை பெற்றுவிட்டதால், இனி நம் முன்னோர்களின் மொழியாகிய வடமொழியை நாம் ஆதரிக்க வேண்டாவா? அவர்கள் நமக்கு அம்மொழியில்தானே ஞானக் களஞ்சியமாகிய வேதங்களை அருளியுள்ளார்கள்."

விடை : சமய வழிபாடு பயனுடையதாக இருக்க வேண்டுமானால், அதாவது வழிபாடு செய்பவருக்கு உண்மையான சமய உணர்வு ஏற்படவேண்டுமானால் சமய நூல்கள் அவற்றைப் படிப்பவர்கள் ஓதுபவர்களுக்கு ஒளி விளக்கம் தரவேண்டுமானால், அவை புரியாத மொழியிலும், மூடநம்பிக்கைப்பழக்கங்களாகவும் இருந்து வர விடக்கூடாது. வழிபாடுகளும் சமய நூல்களும் — அவை முதல் நூல்களாக இருந்தாலும் சரி, மொழி பெயர்ப்புகளாக இருந்தாலும் சரி, அவற்றை மக்கள் புரிந்துகொண்டு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய மொழியில் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

இச்செய்திகளால் நாம் அறிந்து கொள்ளும் உண்மை என்ன? ஒருவரது வழிபாட்டுக்கு உகந்த மொழி அவரது தாய்மொழியே என்பதாகும் அல்லவா? இங்ஙனமிருந்தும் நமது வீட்டிலும் கோவிலிலும் இன்னும் வழிபாடு நமக்குப் புரியாத மொழியிலேயே செய்யப்படுவதைக் காண்கிறோம். இல்லங்களில் தமிழ் அருட்பாடல்களைப் பாடி நாம் தனித்த முறையில் வழிபாடாற்றலாமானாலும், சமய முறைப்படி ஞான வழிபாடு— சமய தீக்கை, விசேட தீக்கை, சிவ பூசை முதலியன—வடமொழியிலேயே கற்பிக்கப் படுகின்றன. கோவில்களில் வடமொழியிலேயே அன்றாட வழிபாடுகளும், சிறப்பு வழிபாடுகளும் நடப்பதை நாம் அறிவோம்.

நமது சமயஉணர்வு விரிவாக வளராமல் குன்றியிருப்பதற்குப் பெருங்காரணம் இதுவேயாகும். குருட்டுத்தனமான நம்பிக்கையால், இவ்வழிபாடுகளை நாம் செய்தும், இவற்றில் நாம் கலந்து கொண்டும் வருகிறோம். உள்ளம் தொடப் பெறாமலேயே போகிறது. ஏதோ சிறிதளவு உணர்வு சிலருக்கு உண்டாகலாம். அதுவும் சிலகாலப் பழக்கத்தால், நாமே நம்மை ஏமாற்றிக்கொண்டு பெறும் குருட்டு உணர்வேயாகும். அதுபோதுமா? ஆண்டவரின் பாரொடு நன்றாய்ப் பரந்து விளங்கும் தன்மையை நாம் சிந்தித்து உணர, நமக்குத் தெரியாத மொழியில் செய்யப்படும் வழிபாடு உதவுவதாக இல்லை. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் இருக்கும் இறைவன் பண்பை, நமது தாய்மொழியில் எண்ணும் போதுதான் உண்மை உணர்வு ஊற்றெடுக்கும். வான் கெட்டு மாருதம் மாய்ந்து அழல் நீர் மண்கெடினும் தான்

கெட்டல் இன்றிச்சலிப்பறியாத கடவுளின் இயல்பை உன்னி உன்னி, ஊன்கெட்டு, உணர்வுகெட்டு, உள்ளமும் போய், தான் கெட்ட நிலை யெய்தப் பெறுவது, தமிழில் சிந்தனையைச் செலுத்துவதன் விளைவே யல்லவா ?

உண்மை இவ்வாறு இருப்பது தெரிந்தும், இன்னமும் நாம் நமக்குப்புரியாத ஓசைகளால் இறைவழிபாட்டைச் செய்து வர இசைந்திருப்பது வியப்பினும் வியப்பே யாகும். சிலபல ஆண்டுகளாக எந்தச் சூழ்நிலையினுலோ நாம் ஆளாகிவிட்டுள்ள இக்குருட்டு வழிபாட்டுப் பழக்கம் நம்மை அதற்கு அடிமைப்படுத்திவிட்டிருக்கிறது. அதனுலன்றே, உணர்வில் தோயாத இப் பழக்கத்தையே நாம் பெரிதாக மதித்து வரும் மனப்பான்மை யுடையவர்களாகி விட்டிருக்கின்றோம். தமிழில் வழிபாடு நிகழ்த்துவதே தவறு அல்லவா ! என்று கூட நம்மில் சிலர் கருதும்நிலை ஏற்பட்டு விட்டது.

நமது சமய குரவர்கள் தமிழில் வழிபாடு செய்ய வேண்டுவதின் இன்றியமையாமையை வற்புறுத்தவே தோன்றிய பெரியார்கள். தமிழில் பாடி நேராக அவர்களே செய்து காட்டி வழிகோலிச் சென்றிருந்தும், நாம் அவர்களைப்பின்பற்ற முனையவில்லையே ! தனியொருவர் வழிபாடு, வீட்டு வழிபாடு, கோவில் வழிபாடு, அனைத்தையும், தமிழில் நடத்துவதற்கு ஏற்ற வழிமுறைகளை வகுப்பது அரிதான செயலாகுமா ? இல்லத்தில் நடைபெறும் திருமணம் முதலிய நிகழ்ச்சிகளுக்கும் நாம் புரிந்து கொள்வதற்குத் தக்க வகையில் முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டாவா ? சிலர் ஒருவாறு இந் நிகழ்ச்சிகளைத் தமிழில் செய்ய முறைகள் வகுத்திருந்தும், அவற்றை ஆங்காங்கு யாரோ ஒரு சிலர் தாமே பயன்படுத்திக் கொள்ளும் துணிவு பெறுகின்றனர். வடமொழியில், சடங்குகளைச் செய்யா விட்டால், என்ன 'ஆபத்து' நேர்ந்து விடுமோ என்றும் அஞ்சுகின்றனரே.

உண்மைச் சமய உணர்வு பெறுவதற்கும், சடங்குகளைப் புரிந்துகொண்டு அறிவார்ந்த முறையில் செய்வதற்கும் தமிழில் முறைகளை வகுத்துப் பயன்படுத்த வேண்டும் என்பதனுலேயே, வடமொழி மீது வெறுப்புக்கொள்வதாக எவரும் கருதலாகாது.

வடமொழி நமதுமொழி. நமது மொழிகளில் ஒரு சிறந்தமொழி. அயல்நாட்டவர் பலர் அம்மொழியைக் கற்று ஆராயும் போது, நம்மில் எவரும் அதனைப் பகைப்பதோ புறக்கணிப்பதோ, சரியாகாது. அதனை நாம் போற்றுவோம். இயன்றவர்கள் அனைவரும் அதைப் பற்றோடு பயில்வோம். நம் அறிவின் மேதக்க மூதறிஞர் சி. இராசகோபாலாசாரியார் அவர்கள் ஒருமுறை சொன்னது போல, ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தால், ஒருவரை வடமொழி படிக்க ஒதுக்குவோம். அம்மொழியிலுள்ள பல அரிய நூல்களைப் படித்து ஆராய்வோம். தமிழிலும் பிறமொழிகளிலும், அவ்வறிவுக் களஞ்சியங்களை மாற்றுவோம். வேத பாடசாலைகளில் சேர்ந்து முறையாக வேத அத்தியயனம் செய்வோம். பிறப்பினுல் எவருக்கும் அவ்வுரிமை மறுக்கப்படாதவாறு பார்த்துக்கொள்வோம்.

ஆனுல், மிகச் சிலருக்கே, இவ்வாறெல்லாம் வடமொழி அரும்பெருஞ் செல்வத்தில் ஆழ்ந்து நுகர்ந்து மகிழும் ஆற்றல் கைவருவதாகும். வழிபாடுகளில் சொல்லுபவற்றை நன்ருகப் புரிந்துகொள்ளுகிற அளவுக்கு வடமொழியைத் தமிழர்

எல்லோரும் எளிதில் கற்றுக்கொண்டு விட முடியாது. எப்போதாவது கற்றிருந்ததும் இல்லை. அம்மொழியின் எடுத்த ஓசைகளும், உயிர்ப்பு மிக்க ஒலிகளும், எல்லோர் நாவிலும் திருத்தமாக இசைக்க இயல்வது கடினம்.

இந்த உண்மையைச் சட்டப்பேரறிஞரான திரு. எசு. வரதாசாரியார் அவர்கள், வருமானவரி ஏமாற்றுவதைக்கேட்டாய்வு செய்ய அமைத்த ஆணைக்குழுவின் தலைவராக அவர்கள் இருந்தபோது, பம்பாயில் 27—4—1950-ல் அவர்கள் ஒரு கூட்டத்தில் எடுத்துக் கூறியிருக்கின்றார்.

''மக்களின் வடமொழிப் பற்றுப் புத்துயிர் பெற்றுவிட வேண்டும், அது நீடித்ததாக இருக்கவேண்டும், என்னும் ஆவலோடு கிளர்ச்சி செய்யும் ஆர்வமுடையவர்கள், அவ்வாறு அம்மொழி புத்துயிர் பெறுவதற்குத் தடையாகவுள்ள மூன்று முக்கிய காரணங்களை உணர்வதில்லை'' என்றார். ''அம்மூன்று காரணங்களில் ஒன்று. பொதுமக்களின் திறமைக்கு எட்டுவதாக வடமொழி எப்போதுமே இருந்ததில்லை, இனி என்றுவது இருக்கும் என்றும் சொல்ல முடியாது என்பதாகும்'' என்றும் கூறினர்.

எனவே, தாய்மொழி இயல்பாக இருக்க வேண்டிய உயிர்நாடியான இடங்களை, இனியும் வடமொழி, கவர்ந்து கொண்டிருக்கும்படி விட்டுவிட்டிருப்பது, நமது சமய வளர்ச்சிக்கும் அறிவு மேம்பாட்டிற்கும், பொருத்தமாகுமா? அங்ஙனம் விட்டுவிட்டிருப்பதால், நாம் அடைந்துவிட்டுள்ள, இனி அடையும், இழப்பு, எவ்வளவு பெரிது என்பதை நாம் சிந்திக்க வேண்டாவா?

இனியாவது காலந்தாழ்த்தாது, தமிழருக்குத் தமிழ் மொழிதான் வழிபாட்டுக்கு உகந்தமொழி, அம்மொழியில் வழிபாடு அடைந்தால்தான், தமிழர் இது வரையில், தம்மையும் அறியாமல் இழந்து விட்டுள்ள சமயப் பேருணர்வாம் பெரும் பேற்றை மீளவும் பெற்று உண்மை உய்தி எய்த முடியும் என்பதை அறிந்து, ஆவன செய்ய விரைவோமாக! ஆழ்ந்த சமய உணர்வினை அனைத்துத் தமிழரும் பெற வேண்டுவதற்குக் கோவில் வழிபாட்டு முறையில், தாம் செய்யற்பால, எல்லாச் சீர்திருத்தங்களையும் விரைந்து செய்யத் தமிழக அரசினர் முனைந்து முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வோமாக!

தொல்காப்பியர் - பவணந்தியர் எழுத்து வைப்பு முறை

தமிழ்ப்பெரும் புலவர் ' ஆபிரகாம் ' அருளப்பன், B. A.,
' அரசகம் ' பாளையங்கோட்டை.

பிறப்பால் வரும் சிறப்புப் பற்றியும் இனம் பற்றியும் ஒன்றன்பின் ஒன்று வந்து தொன்றுதொட்டு அகரம் முதலாக நடக்கின்ற கிடக்கையேதான் தமிழ் மொழி எழுத்துகளின் வரிசை முறையாகும். இஃதுபற்றித் தொல்காப்பியம் நேரே கூறவில்லை யெனினும் தொல்லாசிரியர் நல்லாணையாக அமைந்த முறையை அங்கு ஒருவாறு காண்கிறோம்.

தொல். 1. எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர விறுவாய்
முப்பஃ தென்ப ...

,, 3. அ இ உ எ ஒ என்னும்
அப்பாலைந்தும்
ஓரள பிசைக்குங்
குற்றெழுத் தென்ப.

,, 4. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ
என்னும் அப்பாலேழும்
ஈரள பிசைக்கும்
நெட்டெழுத் தென்ப.

,, 19. வல்லெழுத் தென்ப
கசட தபற

,, 20. மெல்லெழுத் தென்ப
ஙஞண நமன

,, 21. இடையெழுத் தென்ப
யரல வழள.

அகரமுதல் ஔகார விறுவாய் பிறப்பு வகையால் அமையும் வரிசை முறை வருமாறு :—

தொல். 85. அ ஆ ஆயிரண்டும்
அங்காந் தியலும்.

,, 86. இ ஈ எ ஏ ஐ யென விசைக்கும்
அப்பா லைந்தும் அவற்றோ
ரன்ன
அவைதாம்,
அண்பல் முதல்நா விளிம்புற
லுடைய

,, 87. உ ஊ ஒ ஓ ஔ வென
விசைக்கும்
அப்பா லைந்தும் அவற்றோ
ரன்ன.

இச் சூத்திரங்கட்கிணங்கப் பெறத்தக்க முறை அஆ, இஈ, எஏ, ஐ, உஊ, ஒஓ, ஔ என்பதாம். ஆனால் தொன்றுதொட்டு அமைந்துள்ளதாகிய முறை, I. அஆ,

இ ஈ, உ ஊ, எனவும், II. எ ஏ, ஐ. ஒ ஓ, ஒள எனவும் இரண்டு தொகுப்பாய்ப் பாகுபட்டுத் தனித்தனிப் பிறப்பு முறைப் படியே நிற்பதைக் காண்கிறோம்.

''இனி, உயிர்களுள் அ, இ, உ, என்பன முறையே (1) அங்காந்து கூறும் முயற்சி யானும், (2) அவ் வங்காப்பொடு அண் பல்லடி நாவிளிம்புறக் கூறும் முயற்சியா னும் (3) அவ்வங்காப்பொடு இதழ் குவித் துக் கூறும் முயற்சியானும் பிறத்தலான் அப் பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன. ஆகார, ஈகார, ஊகா ரங்கள் அகர முதலியவற்றிற்கு இனமாத லின் அவற்றைச் சாரவைக்கப்பட்டன''. (சிவஞான முனிவர்; நன். 73 உரை விளக்கம்).

ஆனால், பிறப்பால் ஈகாரத்தை அடுத் துத் தோன்றும் எகரத்தை அதனையடுத்து வையாமல் உகரத்தை வைத்தமைக்கும், ஐகாரத்தை யடுத்துப் பிறக்கும் உகர ஊகாரத்தை அங்கு வையாமல் அதன் பின்னர்ப் பிறக்கும் ஒகரத்தை வைத் தமைக்குங் காரணங் காணவேண்டும்.

உயிர் எழுத்துக்களைத் தெளிவாக வேறுபடுத்தி ஒலிக்கும் முயற்சியானது இயல்பாக வாயை அங்காத்தல், ஒடுங்க நிறுத்தல், ஒடுங்க நிறுத்தி யிதழ்குவித்தல் அங்காந்திதழ் குவித்தல் என்ற செயல் களின்பாற்படும்.

ஒன்றையொன்று மிக அடுத்துப் பிறக் கும் எழுத்துக்களை அடுத்தடுத்து ஒலித் தல் ஒலிப்புப் பயிற்சிக்கு ஏற்றதன்று, அவ்வழியாற் பயில்வோர் தெளிவுபட ஒலிக்கப் பழகுதல் அரிதாகலின், பழகி யோருமே இருநூறு என்பதற்கு எருநூறு எனவும், கிணறு என்பதற்குக் கெணறு எனவும், உழக்கு என்பதற்கு ஒழக்கு எனவும், முளி என்பதற்கு மொளி எனவும் தவருகப் பேசுதல் பெருவழக்கு.—இன்ன வற்றை மொழியியல் அறிஞர் நன்கு தெளிவாக வகுத்துக்காட்டுவர்.

எனவே நடுவாயிடத்து அடுத்தடுத்துப் பிறக்கு இ ஈ, எ ஏ, ஐ என்ற எழுத்துக்க ளுள் ஈகார எகரங்களிடையே உகர ஊகாரங்கள் வைக்கப்பட்டன. ஆகவே முதல் தொகுப்பு வாயடி தொடங்கி இதழ் குவிவுவரை அ ஆ, இ ஈ, உ ஊ என்பன வாகவும், இரண்டாந் தொகுப்பு வாய் நடுத் தொடங்கி இதழ் குவிவுவரை எ ஏ, ஐ, ஒ ஓ, ஒள என்பனவாகவும் அமைத்து வைத்தனர். என்ப, மொழிப, என்மனர் புலவர் எனத் தொல்காப்பியர் போற்றும் தொல்லாசிரியர்.

''எகரமாவது அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்திசைத்து நரமடங்கல் போல் நிற்பதொன்று...... ஒகரமாவது அகரக் கூறும், உகரக் கூறும் தம்முள் ஒத்திசைத்து அவ்வாறு நிற்பதொன்று'' என்னும் சிவஞான முனிவர் கருத்துக்குத் தமிழ் நூல்களிற் சான்றில்லை.

தொல். 54. அகர இகரம் ஐகார மாகும்,

,, 55. அகர உகரம் ஔகாரமாகும்

என்ற சூத்திரங்களால் அ + இ = ஐ; அ + உ = ஒள என்பன பெறப்படும்.

(தொல். 56. அகரத் திம்பர் யகரப்
புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை
மெய்பெறத் தோன்றும்,

என்னும் சூத்திரத்தால் ஐ ஒலிக்கு அய் ஒலியும், ஒள ஒலிக்கு அவ் ஒலியும் போலியாக வரும் என்பதே பெறப்படும்.)

மெய்யெழுத்துக்களின் பிறப்பு பற்றிய வரிசை முறை :—

1. அடிநா அடியண்ணத்தோடு வன்மை யிற் பொருந்த க கரமும் மென்மை யியிற் பொருந்த ங கரமுங் பிறக்கும்.

2. முதல் நா முதலண்ணமுற யகரம் தோன்றும்.

3. நடு நா நடுவண்ணத்து வன்மையிற் பொருந்த ச கரமும் மென்மையிற் பொருந்த ஞ கரமும் பிறக்கும்.

4. நுனி நா அணரி நடுவண்ணத்தை வருட ழ கரமும் ஒற்ற ர கரமும் பிறக்கும்.

5. நுனி நா நடுமுன்னண்ணத்தை வன்மையிற் பொருந்த ட கரமும், மென்மையிற் பொருந்த ண கரமும் பிறக்கும்.

6. நுனி நா அணரி நடு முன்னண்ணத்தை வருட ள கரமும், ஒற்ற லகரமும் பிறக்கும்.

7. நுனி நா நுனியண்ணத்தை வன்மையின் வருட ற கரமும், மென்னமயிற் பொருந்த ன கரமும் பிறக்கும்.

8. நுனி நா பல்லடியில் வன்மையிற் பொருந்த த கரமும் மென்மையிற் ஓபாருந்த ந கரமும் பிறக்கும்,

9. மேற்பல்லைக் கீழிதழ் பொருத்த வகரகம் பிறக்கும்.

10. இதழிரண்டும் வன்மையிற் பொருந்த ப கரமும் மென்மையிற் பொருந்த ம கரமும் பிறக்கும்.

இவ்வாருகப் பிறப்பு முறையான வரிசை கங, ய, சஞ, ழ, ர, டண, ள, ல, றன, தந, வ, பம என அமைவதாகும்.

ஆனல் தொன்றுதொட்டு அமைந்துள்ளதாகிய முறை, I. கங, சஞ, டண, தந, பம எனவும், II. ய, ர, ல, வ எனவும் III. ழ, ள, ற, ன எனவும் மூன்று தொகுப்பாகப் பாகுபட்டுத் தனித்தனிப் பிறப்பு முறைப்படியே நடப்பதைக் காண்கிரும்.

ஆகவே, நன்னூல் 73-ம் சூத்திரம்,
சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்த ருனே முறையா கும்மே,

என்பதும்,

'அகரமுதல் னகரவிறுவாய் முப்பஃது' (தொல். 1) என்பதும் போன்றவற்றுக்கு.

அம்முதல் ஊவள வாறு மொன்ரு
எம்முதல் ஔவள வாறு மொன்ரு
உயிரிரு தொகுப்பா நின்றும் நன்றே
கம்முதல் மவ்விறு பத்து மொன்ரு
யம்முதல் வவ்விறு நாலு மொன்ரு
ழம்முதல் னவ்விறு நாலு மொன்ரு
மெய்யின் தொகுப்பு மூன்ரு நின்றும்
சிறப்பினு மினைதினுஞ் செறிந்து மரபின்
நடத்தல் முந்தை முறையா கும்மே,

என்பது விளக்கமாகும்.

"மெய்களுள், வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின்வைத்தல் மரபாகலின் அச்சிறப்பு நோக்கி வல்லெழுத்துகள் முன்னும், அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துகள் அவ்வவற்றின் பின்னுமாக வைக்கப்பட்டன..."

—சிவஞான முனிவர்.

ய, சஞ, ழ, ர, டண, ள, ல, றன, தந இவ்வெழுத்துகளை இப்பிறப்பு வரிசையில் நிறுத்தி ஒலிப்புப் பழகுதல் சிறுவர்க்கு மிக மிக அரிது. பெரியோரும் உயரம் என்பதை உசரம் எனவும், பழம் என்பதைப் பளம், பலம், பயம் எனவும், கலை

என்பதைக் கலை எனவும், மணம் என்பதை மனம் எனவும், மன்னன் என்பதை மண்ணன் எனவும், இன்னும் பலவாருகப் பிறழ ஒலிப்பதைக்கேட்டு மனங்கவல்கின்ருேம்.

சிறப்பு ழகர வொலியைப் பொது ளகர வொலியின் வேறுபடவும், த ந் ந க ர வொலியை றன்னகர வொலியின் வேறு படவும் திருந்தப் பேசுவோரை மலையாள அறிஞரிடையே காண்டல் எளிது; அன்றி மற்று, நம் தமிழறிஞரிடையே காண்டல் அந்தோ! அரிதாயிற்று.

இன்ன வகையான பிழைபாடுகளைத் தவிர்க்குங் கருத்துக் கொண்டே இவ் வெழுத்துகளைச் சஞ, டண, தந எனவும் ய, ர, ல எனவும். ழ, ள, றன எனவும் பிரித்துத் தொகுத்தனர் தொல்லாணை நல்லாசிரியர். பகர வகர வொலி மயக் கத்தை யொழிக்கவே முன்னதை முதல் தொகுப்பிலும் பின்னதை இரண்டாந் தொகுப்பிலுஞ் சேர்த்தனர்.

''ழகார றகார னகாரங்கள் மூன்றும் தமிழ் எழுத்து என்பது அறிவித்தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன'': என்னுங் கூற்ருனது,

''சிறப்புடைப் பொருளை முந்துறக்
கிளத்தல்''

என்பது தந்திரவுத்தி யாதலின் பொருந்து மாறின்று.

புது முறையெனத் தோற்றுவிக்கப்பட்ட டப, டம, பட, மட, படம், மடம் என எழுத்தறிவிக்கும் முறையால் பட பட பட மும், மடம்பட மடமும் வளர்ந்து, எழுத் துப்பிழையும் ஒலிப்புப் பிழையும் மலிந் துள்ளன. தொன்றுதொட்ட நம் தமிழ் முறைப்படி எழுத்துக்களை, நல்லறிவுக்கும் உறுதுணையான ஆத்திசூடி, கொன்றை வேந்தனெடு ஒலிச்சிறப்புணர்ந்து கணக் காயர் ஊக்கத்தோடு குழந்தைகட்குக் கற்பித்தால் கழிமடம் அஃகும்.

செந்தமிழ்ச் செம்மல்

பேராசிரியர் Dr. தா. ஏ. ஞானமூர்த்தி, M.A.,Ph.D., தமிழ்த்துறைத் தலைவர், P.S.G. கலைக் கல்லூரி, கோவை

தமிழர்களுக்குத் தமிழ் உயிர். தமிழ்மொழி வளர்ந்தால்தான் தமிழர்கள் பலதுறையிலும் முன்னேற்றம் எய்த இயலும். தமிழ் சிதைந்தால் தமிழர்கள் வாழ்க்கையும் சிதைவுறும். இவ் உண்மையை ஓர்ந்து தமிழகத்தில் பேரறிஞர்கள் பலர் தொன்றுதொட்டுத் தளரா ஊக்கத்துடன் தமிழுக்கு ஆக்கமும் ஏற்றமும் அளித்து வந்துள்ளனர். இப் பேரறிஞர்கள் வரிசையில் வைத்துப் போற்றுவதற்குரியவர் புலமை நலஞ்சான்ற பெரியார் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் ஆவர். டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் சிந்தை, மொழி, செயல் ஆகிய அனைத்தும் செந்தமிழ் மணக்கும் தகையவை. அவர் நம் அருந்தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டு அளப்பரிது. இதனாலன்றோ அப் பெருந்தகையாரை நம் தமிழகம் 'செந்தமிழ்க்காவலர்' எனப் போற்றிப் புகழ்கிறது.

டாக்டர் அ. சி. செட்டியார் அவர்கள் பல ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் திறம்படப் பணியாற்றி, ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளார். டாக்டர் அ. சி. செட்டியாரிடம் சிலப்பதிகாரம், மொழியியல் இன்னோரன்னவை பற்றிய பாடங்கள் கேட்பதற்குப் பல மாணவர்கள் பேரார்வத்துடன் காத்திருப்பர். அவர்கள் உள்ளத்தில் தமிழின்பம் உவட்டெடுக்கும்வண்ணம் இப்பேராசிரியர் அவர்

களுக்குத் தமிழறிவு ஊட்டுவார். ஆராய்ச்சித்துறையிலும் மாணவர்களுக்கு ஆர்வம் ஊட்டித் தமிழை வளர்த்த பெருமை அவருக்கு உண்டு.

டாக்டர் செட்டியார் அவர்கள் தமிழ் ஆசிரியர்களிடத்துத் தனிப் பற்றுடையவர்; தமிழாசிரியர்களுக்குத் தொண்டு செய்வதில் தனி இன்பம் காண்பவர். பல்லாண்டுகளாகத் தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவர் பொறுப்பேற்றுத் தமிழாசிரியர்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் பணிகள் புரிந்துள்ளார்; ஆண்டுதோறும் தமிழாசிரியர் மாநாடு நிறைவேற்றும் தமிழாசிரியர் நன்மைக்குரிய தீர்மானங்களை அரசியலார்க்குத் தாமே நேரில் சென்று எடுத்துச் சொல்லி தமிழாசிரியர்களுக்கு நன்மை புரிந்துள்ளார். தமிழக மேல் சட்ட மன்றத்தில் ஆசிரியர்களுக்குப் புரிய வேண்டிய நன்மைகளை அடிக்கடி எடுத்துக்கூறி வற்புறுத்தி வருகின்றார். கடந்த சில ஆண்டுகளில் தமிழாசிரியர்கள் பெற்றுள்ள சில நன்மைகளுக்கு டாக்டர் அ.சி. செட்டியார் அவர்களே அடிப்படைக் காரணமாவார்.

டாக்டர் செட்டியார் அவர்களின் ஆட்சித்திறன் பெரிதும் வியத்தற்குரியது. சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஒரு சில திங்கள்கள் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் பதவியை ஏற்றிருந்தார். அப்போதுதான் இப் பெரியாரின் ஆட்சி செய்யும் அருந்திறன் அனைவருக்கும் புலப்பட்டது. அனைவரும் அவர்தம் திறனை வியந்து போற்றினர். பல்கலைக் கழகச் சட்ட நுட்பங்கள் அனைத்தையும் தம் நினைவிலிருத்தி நெறிமுறை தவறாமல் பல்கலைக் கழகத்தை ஆட்சி செய்த அவருடைய திறத்தினைப் போற்றாதார் யாரும் இல்லை. தற்போது தமிழ்ப் பணியோடு தியாகராசர் கல்லூரி முதல்வர் பொறுப்பினை யேற்று அக் கல்லூரியை மிகத்திறம்பட ஆட்சி செய்து வருகின்றார். அவர் முதல்வர் பொறுப் பேற்ற பின்பு அக்கல்லூரியின் பெருமை பன்மடங்கு உயர்ந்துள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது.

டாக்டர் அ. சி. செட்டியார் அவர்கள் தற்காலத்துத் தலைசிறந்த தமிழறிஞர்களுள் தனிசிறந்தவர்; ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். தமிழ் இலக்கண இலக்கியங்கள் பற்றி ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் இயற்றி அவற்றின் வாயிலாக மேனாட்டார் தமிழின் பெருமையை உணரும் வண்ணம் செய்துள்ளார். மேலும் அவர் இங்கிலாந்து நாடு சென்று தமிழின் பெருமையையும், தமிழ்ப் பண்பாட்டின் சீர்மையையும் அந்நாட்டாருக்கு உணர்த்தியுள்ளார்.

இப்பெருந்தகையார் அறுபது ஆண்டுகள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து நம் அருந் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டு மிகப் பெரிது; சீரியது; தமிழர்கள் அனைவரும் எஞ்ஞான்றும் நன்றியறிதலுடன் போற்றுதற்குரியது. இச் சான்றோரின் மணிவிழா தனிச்சிறப்போடு நடைபெறுவதைக் குறித்து என் மனம் பூரிப்படைகிறது; தமிழர்கள் உள்ளமெல்லாம் பூரிப்பெய்தும் என்பதில் ஐயமில்லை. இப்பெருமகனார் இன்னும் பல ஆண்டுகள் உடல் நலத்தோடும் வளத்தோடும் சிறக்க வாழ்ந்து நம் செந்தமிழ்க்குத் தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என்று எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சுகிறேன்.

டாக்டர் செட்டியார் அவர்கள் வாழ்க! தமிழ் வெல்க! ●

இதோ சேரன் செங்குட்டுவன்!

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, எம். ஏ.,
அன்னை இல்லம், சென்னை

உருவிலேயே நெடிய உருவம்! மேனாட்டினர் கூடியுள்ள கூட்டத்தில்கூட, 'இதோ மேம்பட்ட நாட்டினர் ஒருவர்' என்று மேனாட்டவர் சுட்டிக் காட்டத்தக்க நெடியோர் முதல்வர் பேராசிரியர் முனைவர் திரு. அ. சிதம்பரநாதனார்!

உருவின் நெடுமை முனைவர் வகையில் அவர் திருவின் நெடுமைக்கு, பண்பின் பெருமைக்கு ஒரு சின்னம் மட்டுமேயாகும். இதனைக் காட்டும் அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல.

ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகம் ஆங்கிலேயர்க்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்றது. ஆங்கிலத்தை ஆங்கிலப் பண்பழுத்தம் வராமல் ஒலிப்பதில் எமக்கு நிகர் யாமே எனத் தருக்கிச் செம்மாந்திருப்பவர் அப் பல்கலைக்கழகத்தவர். முனைவர் அக்கழகத்திற்கு வருகை செய்த போது, அங்குள்ள ஆங்கிலப் பேராசிரியர் அவரை வரவேற்று அளவளாவினார். அதனிடையே மெல்ல, 'தாங்கள் இந்தப் பல்கலைக் கழகத்துக்கு இதுவரை எத்தனை தடவை வந்திருப்பீர்கள்? இங்கு எவ்வளவு நாள்கள் தங்கியிருப்பீர்கள்? என்று கேட்டார்.

'இங்கிலாந்துக்கே நான் இப்போதுதான் முதல் தடவை வந்திருக்கிறேன். தங்கள் திருமுன்பு தான் பல்கலைக்கழகத்தைக் கண்டு தங்களுடன் அளாவும் பேறுபெற்றேன்' என்றார் சிதம்பரனார்.

இங்கிலாந்திலேயே பிறந்தவர்கள்கூட, பலதடவை ஆக்சுபோர்டு வந்தும் பல ஆண்டுகள் அங்கே தங்கினுல்தான் சிதம்பரனுர் அளவு ஆங்கிலத்தை ஒலிப்பு வழுவறப் பேசமுடியும் என்று ஆங்கில ஆசிரியர் கருதியிருந்தார். அவர் கேள்விக் குரிய காரணம் இதுதான்!

இதன் பின்னர் இங்கிலாந்துக்கும் பிற மேலே நாடுகளுக்கும் பேராசிரியர் பல தடவை சென்றிருக்கிருர். அவர் மாணவர் பலர் அங்கே தமிழ்ப் பேராசிரியர்களாக வும், பிறதுறை அறிஞர்களாகவும் விளங்கி அவரை வரவேற்கும் பேறு பெற்றுள்ளனர்.

தமிழர் பெருமை நிலைநாட்டிய பண்டைத் தமிழ்ப் பெருவேந்தன் சேரன் செங்குட்டுவனை உருவிலும் திருவிலும் பண்பிலும் நினைவூட்டுபவர் பேராசிரியர் சிதம்பரனுர்! இனிய, கிட்டத்தட்டப் பெண்பான்மை ஒழுகும் செந்தமிழ்தான் அவர் பேசுவார். ஆனுல் இந்தப் பெண் பான்மை ஆசிரியர் மறைமலையடிகள் பெண்பான்மைபோல, பல ஆண்பான்மை களை வற்றக்காய்ச்சி இறுகவைத்தடக்கி பெண்பான்மை. தமிழுக்கு ஊறு என்ற பேச்சின் எதிர்வலை எங்காவது தென் பட்டால் போதும், அவர் சொற்கள் வேல்நுனிகள்போல் நிமிர்ந்தெழுந்து பாய முனைந்துவிடும்.

அவருடன் தொடர்பு கொள்ளும் பேறு கொண்ட பெரியோர், பெருநிலையங்கள் பல. இவற்றின் பட்டியல் வளர்ந்து கொண்டு வருகிறது. ஆயினும் மாண வராய் ஒரு காலத்தில் இருந்த பலர் உளங்கோயில் கொண்ட அவர் பண்புருவின் பின்னணியில் எப்போதும் அண்ணுமலைப் பல்கலைக்கழகமும்; தோழராக அவரைக் கருதியவர் உளச் சிறைப்பட்ட அவர் அன்புருவின் பின் னணியில் சென்னைப் பல்கலைக்கழகமும்; நாடறிந்த, உலகறிந்த பெரியாராக அவரைப் போற்றும் உள்ளங்களின் பீடுருவின் பின்னணியில் மதுரைத் தியாக ராசர் கல்லூரியும்; மதுரைப் பல்கலைக் கழகமுமே எப்போதும் நின்று மிளிரும் என்று கூறினுல் தவருகாது.

தமிழுக்காகச் சிதம்பரனுர் போராடிய களங்களில் தலைக்களம் அண்ணுமலைப் பல்கலைக்கழகம். தமிழுக்காக அவர் பணி செய்த பணிக்களில் குறிப்பிடத் தக்க பணிக்களம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் தமிழ்ச் சொற் களஞ்சிய அரங்கப் பட்டறைதான். ஆனுல் அவர் தமிழ்ப் பெருமைக்குப் பாரறியப் பாராட்டும் பரிசும் பெறுதற் குரிய இடம் மதுரை — அப்பெருமையின் பெரும்புகழ் ஒளியுறுவுக்குப் பின் னணியாய் நிற்கும் பெரும்பேருரு தமிழின் பீடுருவாகிய கருமுத்துத் தியாகராசர். புகழ் ஒளி உருவே!

சோணுட்டில் பிறந்து, தொண்டை நாட்டில் புகழ்ப்பரப்பி, பாண்டிநாட்டிலேயே புகழ்சிறக்கும் முத்தமிழ் வாழ்வு நம் காலத்தில் நம் கண்கண்ட சேரன் செங்குட்டுவனுக விளங்கும் தமிழ் ஆசிரியப் பெருந்தகை சிதம்பரனுருக்கு உரியதாகும்.

பொன்னம்பலத்தில் சீறிநின்ருடிய பெருமான் வெள்ளியம்பலத்தில் மாறி நின்ருடி மகிழ்சிறந்து பொங்குவளங் காணுக!

★

செயற்கரிய செய்வார்

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்
M.A., L.T., M.O.L., Ph. D.,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

பீடுமிக்க மாடமதுரையில் கலைத்தந்தை கருமுத்து—தியாகராசன் செட்டியார் அவர்கள் பெரும் பொருட்செலவில் பல ஆண்டுகளாக நடத்திவரும் தியாகராசர் கலைக் கல்லூரியில் முதல்வராக விளங்கி வரும் டாக்டர் அ. சிதம்பரநாதனுர் அவர்களை யான் 37 ஆண்டுகளாக நன்கு அறிவேன்.

இவர் சோழநாட்டின் உயிர்நாடியான திருக்குடந்தை நகரத்தில் அரசினர் கல்லூரியில் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றவர்; பி. ஏ. தமிழ்த் தேர்வில் முதல்வராகத் தேறி அதற்குரிய பொற் பதக்கத்தைப் பெற்றவர். இவர் தமிழ்த் தொண்டு புரிய விரும்பிச் சென்னைக் கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாள ராகச் சேர்ந்தார். அதே ஆண்டில் மேரி அரசியார் கல்லூரியில் பெரும் புலவர் சரவண ஆறுமுக முதலியார் அவர்கள் தமிழ் விரிவுரையாளர் பதவி ஏற்ருர். இவ்விருவரும் மிகநெருங்கிய நண்பர்கள். இவ்விருவருடனும் அக்கால முதலே பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

சில ஆண்டுகட்குப் பின்பு நண்பர் இருவரும் அண்ணமலைப் பல்கலைக்கழகத் தில் தமிழ் எம். ஏ. படிக்கச் சென்றனர். அப்பொழுது நாவலர் டாக்டர் சோம சுந்தர பாரதியார் அப்பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கினர். பண்டிதமணி கதிரேசச் செட்டியார், மகா வித்துவான் இரா. இராகவையங்கார், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை முதலிய பெரும் புலவர்கள் அப்பல்கலைக் கழகத்தில் அக்காலத்தில் தமிழ்த் தொண்டு செய்தனர். நண்பர் இருவரும் அப்பெருமக்களிடம் தமிழ்க் கல்வி பயி லும் பேறு பெற்றனர்.

எம். ஏ. பட்டம் பெற்றபின்பு சிதம்பர நாதனுர் மட்டும் அப்பல்கலைக் கழகத்தி லேயே தமிழ் விரிவுரையாளராகப் பதவி யேற்ருர். இவர் அப்பதவியில் பல ஆண்டு கள் தொடர்ந்து இருந்தார்; பின்பு தமிழ்த்துறைத் தலைவர் ஆனர்; சிறிது காலம் அப்பல்கலைக்கழகத் துணை வேந்தராயும் பணியாற்றினர். இவர் செய்யுள் இலக்கணம் பற்றி அரிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதி டாக்டர் பட்டம் பெற்ருர். தமிழகத்தில் தமிழாசிரி யராய் இருந்து டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழர் இவரேயாவர்.

டாக்டர் சிதம்பரநாதனுர் தம் பதவியை

ஒதுக்கிச் சென்னைச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்; பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஆங்கிலம் – தமிழ் அகராதி ஒன்றைத் தொகுக்க முனைந்தனர். டாக்டர் செட்டியார் அவ்வகராதிக் குழுவின் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றார்; ஆறு ஆண்டுகள் அப்பதவியில் இருந்து, தாம் மேற்கொண்ட பணியை அறிஞர் பாராட்டத்தகும் முறையில் செய்து முடித்தார். ஆங்கிலம் – தமிழ் அகராதி மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்டது.

பின்னர் டாக்டர் செட்டியார் கலைத் தந்தையின் அழைப்புக்கிணங்கி மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முதல்வர் பதவியை மனமுவந்து ஏற்றார்; இன்றும் அப்பணியில் தொடர்ந்து இருந்துவருகிறார்.

டாக்டர் செட்டியார் ஆங்கிலத்திலும் தமிழிலும் கடல்மடை திறந்தாற்போலப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்; தமக்கு உண்மை என்று பட்டவற்றை அஞ்சாமல் எடுத்துக் கூறும் திறனுடையவர்; நல்லியல்புகள் பலவும் வாய்க்கப்பெற்றவர்; தம் தாய்மொழியான தமிழைத் தம் உயிரினும் உயர்வாகக் கருதுபவர். அவர் இப்பலநலங்களால் மாணவர் உள்ளங்களையும் தமிழகப் புலவர்களின் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்தார்; இன்றும் கவர்ந்து கொண்டிருக்கிறார்.

டாக்டர் செட்டியார் பல கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்வேறு தமிழ் மன்றங்களிலும் புலவர் மாநாடுகளிலும் சொற்பொழிவாற்றிப் பெயர்பெற்றவர். மாநிலத் தமிழாசிரியர் சங்கத் தலைவராய்த் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்; இவர் சட்டமன்றத்தில் தமிழ் வளர்ச்சி கருதியும் தமிழாசிரியர் நலம் கருதியும் பேசிய பேச்சுக்கள் பலவாகும்.

டாக்டர் செட்டியார் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுக்களிலும் பாடநூற் குழுவிலும் பல்லாண்டுகள் இருந்தவர்; சென்னைப் பல்கலைக் கழகத்திலும், மைசூர், ஆந்திரா முதலிய பல பல்கலைக்கழகப் பாடநூற் குழுக்களிலும், தேர்வாளர் குழுக்களிலும் இருந்து தொண்டு செய்தவர்; இன்றும் தொண்டு செய்துவருபவர்; பள்ளி இறுதிப் பாடநூற் குழுவிலும் தேர்வாளர் குழுவிலும் பல ஆண்டுகள் இருந்து தொண்டாற்றியவர்; இந்திய அரசினர் நடத்தும் ‘சாகித்ய அகாடமி’ என்னும் அறிஞர் குழுவில் ஓர் உறுப்பினராக உள்ளவர்.

டாக்டர் செட்டியார் புக்கர் வாஷிங்குடன் முதலிய சில நூல்களை எழுதியுள்ளார். செந்தமிழ்ச் செல்வி போன்ற திங்கள் இதழ்களில் இவர் எழுதியுள்ள தமிழாராய்ச்சிக் கட்டுரைகள் பலவாகும். "சென்னைக் கடற்கரை" என்னும் தலைப்பில் இவர் 35 ஆண்டுகளுக்கு முன் எழுதிய கட்டுரை, சென்னைக் கடற்கரைக் காட்சியை நன்கு படம்பிடித்துக் காட்டுவதாகும். அக்கட்டுரைச் செய்திகள் இன்றளவும் உண்மையா யிருத்தலைக் கண்டு மகிழலாம்.

டாக்டர் செட்டியார் சில ஆண்டுகளுக்கு முன்பு ருஷிய நாட்டு அழைப்பின் மீது அந்நாட்டுக்குச் சென்று தமிழின் சிறப்பை அறிவித்தவர்; மலாயா நாடு சென்று தமிழ்ச் சொற்பொழிவுகள் ஆற்றிப் பெயரும் புகழும் பெற்றவர்.

டாக்டர் செட்டியார் எடுத்த வேலையை சிறப்புற செய்து முடிக்கும் திறமை மிக்கவர்; அனைவருடனும் இன்முகத்துடன் பழகும் இயல்புடையவர்; தமிழ்த்துறைத்

தலைவராகவும் ஒரு குழுவின் தலைவராகவும் ஒரு கல்லூரியின் முதல்வராகவும் இருந்து செயலாற்றும் ஆற்றல் பெற்றவர். இப்பெரியார் இப்பொழுது தமிழகப் புலவர்குழுவில் செயற்குழுத் தலைவராய் விளங்கிவருகிறார்.

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் சைவ வேளாள மரபினர், இவருடைய வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி பெரியநாயகி அம்மையார் என்பவர். அந்த அம்மையாரும் உயர் பண்புகள் பலவும் வாய்க்கப்பெற்றவர். "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்பதற்கு ஏற்ப, அம்மையாரது இல்வாழ்க்கைப் பண்பினால் அவர்களது இல்லம் இன்ப இல்லமாக விளங்குகின்றது. கண் இரண்டும் ஒன்றையே காண்பதுபோலக் கணவரும் மனைவியாரும் ஒத்த கருத்தினராய் விளங்கி வருதல் பாராட்டத்தகும். இந்த மன ஒருமைப்பாடு அவர்களது இல்வாழ்க்கை வெற்றிக்கு அடிப்படையாகும்.

டாக்டர் செட்டியார் தமிழுக்காக வாழ்பவர்; தமிழர்க்காக வாழ்பவர்; தமிழக நலனுக்காக வாழ்பவர். இத்தகைய பெரியார்க்குத் தமிழ் மக்கள் மணிவிழாக் கொண்டாடுதல் மாண்புறு செயலாகும். டாக்டர் செட்டியாரும் அவரது இல்லத்தரசியாரும் மேலும் பல்லாண்டுகள் நலம் பல புரிய வாழ்ந்து தமிழுக்கும் தமிழகத்துக்கும் இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன்.



கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் B. Com.,

மணிவிழா அமைப்பாளர்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M.A., Ph.D., M.L.C.

தமிழ்ப் பண்பாளர்

கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ்.

டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களுடன் பழகும் பேறு எனக்குக் கிடைக்குமுன், அவர் தமையனுர் திருவாளர் அ. மகாலிங்கம் செட்டியார் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தேன். என் சொந்த மாவட்டமாகிய கோவையில் திருவாளர் மகாலிங்கம் செட்டியாரவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன் பணியாற்றினுர்கள். பின்னர் அவர்கள் ஐ. ஏ. எஸ். பதவி பெற்றுத் தென் கன்னட மாவட்டக் கலெக்டராகச் சென்ருர். அக்காலத்தில் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியாரைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டேன். தமையனுர் நற்குணங்களை உணர்ந்த பின்னர் அவற்றின் வழியிலே அவர் உடன் பிறந்தாராகிய திருவாளர் செட்டியார் அவர்கள் பண்புகளை நேரில் கண்டறிந்து கொண்டேன். தஞ்சை மாவட்டத்தில் 1950–1952 ஆண்டுகளில் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியாருடன் நேர்முகமாக அளவளாவும் பேறு பெற்றேன். அச்சமயங்களிலெல்லாம் அக்காலத்தில் வருவாய்த்துறையில் பணியாற்றிய தமிழ்ப்பேரன்பர் இராமச்சந்திரப் பத்தர், ஏ. சிதம்பரநாதன் செட்டியாருடன் இருந்துவருவது வழக்கம். டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் அத்தகைய சமயங்களில் தமிழ் மொழி வளர்ச்சிபற்றிய கருத்துகளை எடுத்துக் கூறுவார்கள். டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களிடம் பல அரசாங்கப் பணியாளர்கள் அன்பு காட்டியதற்குரிய பல காரணங்களில் ஒன்று, அவர் ஆரம்ப காலத்தில் சென்னை வருவாய்த்துறைக் கழகத்திலும், தமிழகத் தலைமைச் செயலகத்திலும் சிறிதுகாலம் பணியாற்றிய தாகும். தமிழன்னைக்குப் பணிபுரிய வேண்டும் என்னும் நியதியிருந்தமையால் அவர் அரசுப் பணியை விட்டுவிட நேர்ந்தது. மாணவராக இருந்த காலத்தே டாக்டர் செட்டியார் அவர்களின் திறமையைப் பல பேரறிஞர்கள் உணர்ந்திருந்தார்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் முதன்மை விரிவுரையாளராகவும், பின்னர்த் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் இவர் ஆற்றிய பணிகள் சீரிய முறையில் அமைந்தன. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சிறிது காலம் துணைவேந்தராகவும் இருந்தார்கள். இப்போது மதுரை

யம்பதி தியாகராசர் கல்லூரி முதல்வராக உள்ளார். இவர்கள் ஒரு சிறந்த ஓவியர் என்பது பலருக்குத் தெரியாது. ஆசிரியர் தொகுதியின் சார்பில் தமிழகச் சட்ட மன்ற உறுப்பினராகவும் பணியாற்று கின்றார். ஆங்கில நாடு, ஸ்காட்லான்டு, பிரஞ்சு நாடு, இத்தாலி, சுவிட்ஜர்லாந்து, சிங்கப்பூர், மலேயா நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார்கள்.

டாக்டர் செட்டியார் அவர்கள் மாண வர்களிடமும் தமிழாசிரியர்களிடமும் நடந்துகொள்ளும் முறை மற்றவர்கள் எளிதில் பின்பற்ற முடியாதது. அதில் அவரது அன்பு நெறியும் இருக்கும்; தம் கடமையில் ஒரு சிறிதும் பிறழாதவாறும் நடந்துகொள்வார். வெறுப்பு விருப்பின்றி ஒரு செயலில் ஈடுபடவேண்டியது இன்றி யமையாதது. வெறுப்புக் கொள்வதால் ஒரு பொருளைப்பற்றிய உண்மைத்தன்மை வெளிப்படாது. விருப்பம் கொள்வோம் எனில் அதில் உள்ள குற்றமானது வெளி வராதவரையில் கெடுத்துவிடும்.

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே
–காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றாத தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்."

என்னும் ஆன்றோர் காட்டிய வழியைத் திறம்படப் பின்பற்றி அவ்வகையில் வெற்றி கண்டார். தங்கள் உற்றார் உறவி னர்களுடன் மிகப் பரிவுடன் நடந்து கொள்வார்கள். தம் தமையனார் திரு வாளர் அ. மகாலிங்கம் செட்டியார் அவர் களிடமும் தம் தங்கையரிடமும் மாறா அன்பு கொண்டுள்ளார்கள். இவர்கள் தம் தங்கையர் வள்ளியம்மையவர்கள் தெய்வவழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்கள். டாக்டர் செட்டியார் அவர்களும் இறை வழிபாட்டில் பற்றுள்ளவர்கள்.

இப்பெரியார் இயற்றியுள்ள நூல்கள் சிலவே, இவை தமிழ்ச் செய்யுள் இயலைப் பற்றிய நூல்கள். "தமிழ் காட்டும் உலகு" "மன்னுயிருக்கு அன்பர்" என்னும் இரு நூல்கள், இவர்களது தமிழ்ப்பணியையும், இவர்கள்தாமே தமக்கு வகுத்துக் கொண்ட அன்பு நெறியையும் விளக்கும். மக்களுக்கு நல்லுரை வழங்கும் வகையில் 12–7–1960 ஆம் ஆண்டில் கீழை நாட்டு மொழிப் பேரறிஞர் மாநாட்டில் இவர்கள் ஆற்றிய சொற்பொழிவு பொன்னே எனப் போற்றத்தக்கது.

"திருவள்ளுவர் புற வேடங்களுக்கு வைத்த மதிப்பைக் காட்டிலும் அகப் பண்புகளுக்கு நிரம்பிய மதிப்பு வைத்திருந் தார் என்பதாகவும், உலகம் இருண்டது எனத் திருவள்ளுவர் கருதாமல் இடர்ப் பாடுகளைப் பொடியாக்கித் தம் துயரங்களை எதிர்த்துப் போராடி வெல்பவனே சிறந்த மனிதன் எனத் திருவள்ளுவர் கருதுகிறார் என்பதாகவும், தனித்தனி மனிதரும், சமுதாயங்களும், மனித இனங்களும் உழைத்து வருவாய் தேடி வாழ்ந்து மகிழ வேண்டுமென்றாலும், பிறரை அழித்து அவர்களைப் புண்படுத்தி வாழவேண்டும் என்பதைத் திருவள்ளுவர் விரும்பவில்லை என்பதாகவும்" டாக்டர் செட்டியார் அவர்கள் எடுத்துக் கூறுவன சிறந்த கருத்துகள். இத்தகைய கொள்கைகளை டாக்டர் செட்டியார் அவர்களும் கடைப் பிடித்து வந்தார் என்பது கூறாமல் விளங்கும்.

டாக்டர் செட்டியார் அவர்கள் தமிழகப் புலவர்கள் கூட்டத்தின் தலைவர். இன்னும் பல சங்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் இவர்கள் தொடர்பு உள்ளது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனக் கூறும் திருக்குறள். இன்று இக்குறளின் கோட்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் செட்டியார் அவர்கள். கற்றவர்கள் பல பேர்கள் உள்ளார்கள். அத்தகையவரில் கசடறக் கற்றவர்கள் சிலரே. அச்சிலரிலும் கற்றதற்குத் தக்கவாறாக நிற்பவர் மிகச் சிலரே. கற்றவர்கள் தாங்கள் கற்றவற்றிற்குத் தக்கவாறு நடந்துகொள்ளாத காரணமாகப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. ஆதலால் தாங்கள் கற்றவற்றிற்குத்தக்கவாறாக நிற்கும் சான்றோர்களினால் இவ்வுலகம் உய்கிறது எனக் கூறலாம். '' உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே '' என்பதில் மாட்டு என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் கொள்வோம் எனில் ஓர் அரிய உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். இந்த உலகம் உயர்ந்தவர்கள் கைவசம் உள்ளது, இது காரணமாக உலகம் ஒரு வகையிலாவது நெறி பிறழாது இயங்கிவருகிறது. எனவே இத்தகைய சான்றோர்களிடம் மக்கள் பரிவு காட்டுவது அவர்கள் தம் கடமையாகும். டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் மணிவிழாவின்போது தமிழ் கூறும் நல்லுலகம் பெருமிதம் கொள்கிறது. அவர்களைப் பாராட்டுகிறது. அவர்களுடைய பணிகள் மேலும் சிறக்கவேண்டுமென வேண்டிக்கொள்கிறது. இத்தகைய பெரியாரைப் பாராட்டும் வகையில் நடைபெறும் மணிவிழா இனி அவர்கள் மேலும் ஆற்றவேண்டிய பெரும் பணிக்கு அடிகோலுவதாக அமைய வேண்டும். அன்னாருக்கு எல்லா நலங்களும் பெருக வேண்டுமென வேண்டிக்கொள்வோமாக.

செயல் வீரர் செட்டியார்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,
M.A., M. Litt.,
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பர் கல்லூரி, சென்னை.

இன்றைக்கு முப்பத்து நான்கு ஆண்டுகளுக்குமுன் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தே நான் வித்துவான் வகுப்பில் பயின்ற அந்த நாளில் அறிஞர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களை அறியும் வாய்ப்பினைப் பெற்றேன். அப்போது அவர்கள் 'எம்.ஏ.' (தமிழ்) பயின்று கொண்டிருந்தார்கள். அவர்களோடு நெருங்கிப் பழகுமுன் அவர் ஆசிரியரா? மாணவரா? என நான் எண்ணிய நாள்கள் பல. அவர் பழகும் முறையும் பிற இயல்புகளும் அவரை ஆசிரியராகவே எனக்குக் காட்டின. அவர் அதற்கு முன்பே அரசாங்கக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து, பிறகு அங்கே பயில வந்ததாக அறிந்தபின் நான் நினைத்ததும் தவறு அன்று என எண்ணினேன்.

அன்று தொட்டு இன்று வரை அவரொடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்ற—பெறுகின்ற நான் அவரது பண்பினை எண்ணுதிருக்க முடியவில்லை. அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தின் தலைவராக அவர் இருந்த காலை, நான் செயலாளனுகப் பணியாற்றினேன். அந்த இணைப்பே எங்கள் நட்பினை வளர்த்தது எனலாம். பயிலும் காலத்தில் அவர் தோற்றத்தால் மட்டுமின்றி உளத்தாலும் உயர்ந்தவராகவே வாழ்ந்தார். சிறப்பாக டாக்டர் சோமசுந்தர பாரதியாரிடம் அவர் பழகிய முறையும் பெற்ற சிறப்பும் அவர் சுதந்திர உளத்தையும் உரத்தையும் புலப்படுத்துவன, இன்று அப்பாரதியாரின் மகளாரே இவர் தம் மணிவிழாவை நடத்த முன்னின்று செயலாற்றுவதறிந்து மகிழ்கின்றேன்,

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தே அவர் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவர்கள் செய்த

தொண்டு அளவில. அப்பல்கலைக் கழகத் துணை வேந்தராகித் தொண்டாற்றிய பெருமையும் அவருக்கு உண்டு. தமிழ் ஆசிரியர்கள் அதுவரையில் புகாத இடங்களில் எல்லாம் புகுந்து செயல்புரியவும், மற்ற ஆசிரியர்களோடு தமிழாசிரியர்கள் சரிநிகர் சமானமாக வாழவும் அவர் ஆற்றியசெயல்கள் அளப்பில. ஓரிருதுறைகளில் அவருடன் நான்கலந்து பணியாற்ற வாய்ப்பு நேர்ந்த காலத்தில் அவரது பொறுப்பேற்றுச் செயலாற்றுந் திறனை அறியும் வாய்ப்பினையும் பெற்றேன்.

சென்னைப் பல்கலைக்கழகச் சார்பிலே 'தமிழ் அகராதி' வெளியிடும் பொறுப்பேற்றுச் சென்னைக்கே வந்த காலத்தில் அவர்தம் செயல்திறனும் செப்பஉள்ளமும் நன்கு காணமுடிந்தது. தமிழாசிரியர் சங்கத் தலைவராக இருந்து, தமிழாசிரியர் தம் நிலையை ஒல்லும் வகையிலெல்லாம் உயர்த்த அவர் பாடுபட்டுள்ளார். அரசியல் துறையிலே பங்குகொண்டு, தமிழக மேல் சபையில் உறுப்பினராக இருந்து, அங்கே தமிழ் ஒலியைப் பல நாள்களாக எழுப்பி வரும் செய்தி நாடறிந்ததாகும். தமிழ் நாட்டில் மட்டுமின்றிக் கடல் கடந்து பல நாடுகளுக்கும் சென்று தமிழர்தம் மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றை வளர்த்த பெருமையும் அவருக்கு உண்டு.

அவர்தம் வாழ்வு செம்மையாகவும், உரம் பெற்றும், உயர்வுற்றும் அமைய அடிப்படைக் காரணராக இருந்தவர்கள் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் அவர்கள். அவர்களுடைய விருந்தோம்பும் பண்பும் அன்பும் மறக்க முடியாதன. அவர்களுக்கு என் வாழ்த்தும் வணக்கமும்.

தற்போது தமிழ் வளர்த்த – வளர்க்கும் தகைசால் மதுரையில் – தமிழ் வளர்க்கும் தொல்குடியில் தோன்றிய நல்லவர் நடத்தும் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றுகின்ற திரு. செட்டியார் அவர்களால் மதுரை பெருமை பெறுகின்றது. மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவில் இடம் பெற்றிருப்பது பல்கலைக் கழகத்துக்குப்பெருமை தருகிறது. அவர் வழியில் தமிழகம் எதிர்காலத்தில் பல பல நன்மைகளை எதிர்நோக்கி நிற்கின்றது. உடன் பயின்ற அன்பர்களிடம் பழகும் பண்பும், தம்மிடம் பயின்ற மாணவரிடம் காட்டும் பரிவும், மாறா அன்பும் திரு. செட்டியார் அவரை மிகமிக உயர்த்துகின்றன. அன்னார் புகழ் தமிழ் உள்ளளவும் நிலவும் என்பது திண்ணம்.

திரு. செட்டியார் அவர்தம் மணிவிழா அண்மையில் நடைபெறுவதறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தே வளம்பல பெற்று, அவ்வளத்தை மற்றவர்களும் பெற வழி காட்டி நின்று, தமிழ்த் தொண்டே தம் தனித்தொண்டு என்று உலகம் உணரச் செயல்புரிந்து, எல்லோருக்கும் இன்முகங் காட்டி ஏற்றுப்போற்றி – அதே வேளையில் தவறு கண்டால் 'கடிதோச்சி மெல்ல எறியும்' பண்பால் அத்தவறுகளைக் களையும் செயல்புரிந்து, எல்லாருக்கும் நல்லவராய்-வல்லவராய்ச்செயல்வீரராய்ச் செம்மைத் தலைவராய் வாழும் திருமிகு. செட்டியார்அவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து வளமுற்று நாட்டுக்கும் மொழிக்கும் ஆக்கப்பணி பல புரிந்து சிறந்து ஓங்கி உயர்வார்களாக என வாழ்த்தி அமைகின்றேன்.

வாழ்க திரு. டாக்டர் அ.சி. செட்டியார் அவர்கள்!

வளர்க அவர்தம் ஆக்கப் பணிகள்!

தூதுக்கு 'ஏ.சி.'

'சோமலெ'

புலமை, திறமை, சுறுசுறுப்பு, இனிமை, அஞ்சாமை—இவை யாவும் ஒருங்கே யமைந்தவர் என் கெழுதகை நண்பர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் ஆவார்.

தமிழ் மொழிப் பற்று மிக்கவர் டாக்டர் ஏ. சி. வெறும் பற்றுமட்டும் பயன் தராது. பற்றுக்கு ஏற்பப் புலமையும் வேண்டும். புலமையும் பெற்றவர் ஏ. சி. கேட்பவர் உள்ளத்தில் ஆர்வம் உண்டாகுமாறும், இலக்கிய நயங்களை அவர்கள் உணருமாறும் பாடம்சொல்லும் ஆற்றல் ஏ.சி.க்கு உண்டு. வாழ்க்கை வரலாற்று நூல்கள், இலக்கியத் திறனாய்வு நூல்கள், பயணக் கட்டுரைகள், ஆங்கில நாடக நூலின் மொழிபெயர்ப்பு, ஆங்கிலத் தமிழ்ச்சொற் களஞ்சியம் உருவாக்குதல் போன்ற துறைகளிலும், உயர் பட்டம் பெற ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவோர்க்கு

வழிகாட்டுவதிலும், சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் வாயிலாகத் தமிழ் இலக்கிய வகுப்புகள் நடத்துவதிலும் ஏ. சி. யின் புலமை பயன்பட்டிருக்கிறது. மொழியியல் நூலறிவைப் பரப்புவதிலும் இவர் ஆற்றியுள்ள பணி பாராட்டுக்குரியது.

மேற்குறித்த பணிகளைச் செய்ய, ஏ. சி. க்கு அவரது சிறந்த ஆங்கிலப் புலமை உதவியாக இருந்திருக்கிறது. அவர் ஆங்கில மொழியில் பட்டம் பெற்று (இன்று சென்னை மவுண்ட் ரோடில் அரசினர் கலைக் கல்லூரி என்ற பெயரில் நடைபெற்றுவரும் முன்னுள்) மகமதியக் கல்லூரியில் சில ஆண்டுகள் ஆசிரியராக இருந்து பின்னரே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ. மாணவராய்ச் சேர்ந்தார்.

பல்வேறு பொறுப்புகளை ஏற்றதாலும், ஏராளமான குழுக்களில் உறுப்பினராயிருந்து தக்கவர் பலருடன் பழகியிருப்பதாலும், இயல்பாகவே எதையும் கூர்ந்து நோக்கும் நுண்மாண் நுழைபுலம் உடையவராக இருப்பதாலும் ஆளும் திறமையும் அனுபவமும் ஏ. சி. யிடம் நிரம்பியுள்ளன. பார்வைக்கு வரும் 'பைல்' களில் உயிரோட்டமான பகுதிகளைப் படித்து, 'சிக்கு' எடுத்து விரைந்த முடிவு காண்பது இவருடைய பழக்கம். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்து ஆட்சியாளர்களுக்கு இவர் அவ்வப்போது சீரிய அறிவுரைகளை நல்கி வந்தார். இதனை அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் எம். இரத்தினசாமியும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியாரும் 1959-ல் சென்னை தாசப்பிரகாஷாவில் நடைபெற்ற விழாவொன்றில் குறிப்பிட்டுப் பெரிதும் பாராட்டினர். டாக்டர் ஏ.சி.யின் அண்ணன் திரு. மகாலிங்கம் செட்டியார், தமிழகத்தில் சில மாவட்டங்களில் கலெக்டராக இருந்தவர் என்பதையும் இங்குக் குறிப்பிடலாம்.

டாக்டர் ஏ. சி. அவர்களை யான் 32 ஆண்டுகளாக அறிவேன். ஒரு நாளேனும் அவர் சோம்பலாக இருந்தோ, இன்று செய்யவேண்டும் வேலையை நாளைவரை தள்ளிப்போட்டோ யான் அறியேன். உழைப்புக்கும் செம்மையான பழக்க வழக்கங்களுக்கும் அவர் இலக்கியமாகத் திகழ்கிருர்.

அனைவர்க்கும் இன்முகம் காட்டித் தம்மைச் சந்திப்பவர்கள் எல்லோரையும் ஏ. சி. வயப்படுத்துகிருர். மாணவர்கள் அவரை ஒரு பேராசிரியராக மட்டுமன்றித் தங்கள்தலைவராகவும் கருதிவருகின்றனர். தமிழ் மாணவர்களிடம் தவிர ஏனைய மொழி மாணவர்களிடமும் இவரது செல்வாக்குப் பரவியிருக்கிறது. ஆசிரியர்களிடமும் இவ்வாறே. மாநிலத்தமிழாசிரியர் மன்றத் தலைவராக ஏ. சி. விளங்குகிருர். அம்மட்டோ! தமிழகத்திலுள்ள பல்வகை ஆசிரியர்களும் இவரை மதிக்கின்றனர்; அவர்களுடைய வாக்குகளாலேயே சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்துவருகிருர். ஏ. சி. யின் தோழர்களாகப் பணி புரியும் கல்லூரி முதல்வர்களும், ஏனைய கல்வியாளர்களும் அண்ணுமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களில் பல பெரிய பதவிகளுக்கு இவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

தமிழ்பரப்பிய சான்ரேர்

வித்துவான் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.,
தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை

மணிவிழாக் காணும் மாண்புடையோர் உலகில் ஒரு சிலரே ஆவர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்களே இத்தகைய பாராட்டுக்கு உரியவர் ஆவர். நமது டாக்டர் திரு. ஏ.சி. செட்டியார் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார் ஆதலின் மணிவிழாக் கொண்டாடும் மாண்புக்கு உரியராயினர்.

டாக்டர் திரு. ஏ. சி. செட்டியார் அவர்கள் அருந்தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழியும் பயின்று பேரறிவு படைத்தவர் என்ருலும் செந்தமிழ் மொழியில் சிறப்பறிவு பெற்ற சீரியர். அதற்கு எடுத்துக்காட்டுக் கூற வேண்டுமானல் இவர் சென்னைப் பல்கலைக் கழக பி. ஏ. பட்டத்தேர்வில் சிறப்புத் தமிழ்ப் பகுதியில் மாநில முதல்வராகத் தேர்ச்சி பெற்று ஜி. யூ. போப் தங்கப் பதக்கத்தையும், பிராங்கு லின்–கெல் தங்கப் பதக்கத்தையும் பெற்றதைக் கூறலாம்.

இவர் தாம் பயின்ற இரு மொழிகளிலும் செறிந்து கிடக்கும் இனிய கருத்துகளை எவர்க்கும் எடுத்துரைக்கும் ஆற்றல் சான்றவர்; இத்தகைய பேச்சாற்றலைத் தமிழகத்தில் மட்டும் காட்டியவர் அல்லர்; கடல் கடந்து சென்றும் ஆங்காங்குள்ள நாடுகளில் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக் காட்டிய ஏந்தலார் ஆவார்.

இவரது எழுத்தாற்றலுக்குத் தமிழோசை, முன்பனிக்காலம், வீட்டுத் திருமகள் முதலிய நூல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவும் சான்ருக நின்று நிலவுகின்றன.

திரு. ஏ. சி. செட்டியார் பொதுவாக எல்லா ஆசிரியர்களிடத்தும், சிறப்பாகத் தமிழ் ஆசிரியர்களிடத்தும் பெரிதும் அன்புகொண்டவர்; அவர்களின் ஆக்கத்திற்கு அரும்பாடுபட்டவர்; பற்றுக் கொண்டிருப்பவர். இதனை இவர் தமிழக மேல்சபையில் அவ்வப்போது ஆசிரியர்

நலம் கருதிப் பேசிய பேச்சுகளின் மூலம் தமிழகத்திலுள்ள யாவரும் நன்கறிவர்.

திரு. ஏ. சி. செட்டியார் அவர்கள் எதையும் செம்மையாகவும், திறமையாகவும் செய்யவல்ல தனிச் சிறப்பு வாய்க்கப் பெற்றவர். இதற்கு இவர் தலைமைத் தமிழகப் பல்கலைக் கழகச் சார்பில் பதிப்பித்த English Dictionary வெளியீடு நல்ல சான்று.

இவரது அலுவலக ஆட்சித்திறன், இவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தராகச் சில திங்கள் பதவி மேற்கொள்ளச் செய்தது. இது போது மதுரைத் தியாகராயர் கல்லூரி முதல்வராக இருப்பதற்கும் வழிவகுத்தது.

தமிழ் அறிந்தோர் டாக்டர் திரு. ஏ. சி. செட்டியார் அவர்கள் அருஞ்செயல் தொண்டை அறிவாராயின் அவர்களைப் பாராட்டாமல் இரார். இதற்கு யானே ஓர் எடுத்துக்காட்டாக அமைவேன். எனது சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ப் பெரு விளக்க உரையினைப் பற்றித் தாமே உள மகிழ்ந்து அதன் சிறப்பைச்சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில் வரும் செந்தமிழ்ச் செல்வியில் பாராட்டி ஒரு சீரிய கட்டுரை எழுதியுள்ளார். இதனைக் கேள்வியுற்ற யான் பெரிதும் மகிழ்ந்தேன்.

பின்னர்த் திரு. ஏ. சி. செட்டியார் அவர்களை நேரில் கண்டபோது என் நன்றி அறிதலான வணக்கத்தை அறிவித்துக் கொண்டேன்.

இவர் தமிழ் மொழியினையோ, தமிழ் அறிஞர்களையோ எவரேனும் இழுக்காகப் பேசுவார்களேயாகில் அதனைக் கேட்டு வாளா இரார்; மனம் பொறுார்; அப்பொழுதே கண்டித்து அடக்கும் ஆண்மை பெற்றவர். ஓர் அமயம் "மறைமலை அடிகள் தமிழ் ஒரு தமிழா" என்று ஒருவர் கூறிவிட அப்பொழுதே அவர் உளப் பான்மையை மாற்றி அறிவுறுத்தியதை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக இயம்பலாம்.

இன்னோரன்ன அரும்பெரும் குணங்கட்கு உறைவிடமாகிய திரு. ஏ. சி. செட்டியாரின் மணிவிழா கொண்டாடப் படுவதைக் கேட்டும் கண்டும் எவர்தாம் மகிழாமல் இருப்பர்.

திரு. டாக்டர் ஏ. சி. செட்டியார் அவர்களின் மணிவிழாக் காணும் நாம், அவர்களின் முத்து விழாவினையும், நூற்றாண்டு விழாவினையும் காணும் வாய்ப்பைப் பெற அம்மை அப்பர் அருளுமாறு அவர்தம் பொன்னார்திருவடிகளை வந்தித்து வாழ்த்தி வணங்குவோமாக.

தலையாயத் தமிழ்த் தூதர்

பேராசிரியர் வ. பெருமாள்,
எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி
உரிகம், கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.

டாக்டர் சிதம்பரநாதனாரிடம் மாணவர்களாக அமர்ந்து அறிவு பெற்றவர்கள் பலர். அவர்களுள் நானும் ஒருவன். நுண்மாண் நுழைபுலமும், சான்றோர் போற்றும் சால்பும் நன்கு அமையப்பெற்ற சிதம்பரநாதனார் தமிழ் மொழிக்கு ஆற்றி வரும் சீரிய நற்றொண்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கதாகும். சிதம்பரநாதனார் பேரறிஞர்; பேராசிரியர்; ஆராய்ச்சி வல்லுநர்; சிறந்த எழுத்தாளர்; இரு மொழிப் புலவர்; மொழியியல் மேதை; ஆசிரியர் தலைவர்; மாணவர்கட்கு வழிகாட்டி; சிலம்புச் செம்மல்; பண்பின் பெட்டகம்; செந்தமிழ் நாவலர். சுருங்கக் கூறுமிடத்து அவர் அறிவில் வல்லவர்; பண்பில் நல்லவர்.

அவர்தம் சீரிய தமிழ்த்தொண்டு தமிழகத்தையும் தமிழ் உலகத்தையும் கடந்து அறிவு உலகம் முழுவதும் பரவியிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இங்கிலாந்து, ரஷ்யா, மலேயா முதலிய அயல்நாடுகளுக்குத் தமிழ்த் தூதராகச் சென்று தமிழ் மணத்தையும் தமிழ் ஒளியையும் இணைத்துப் பரப்பிய தனிப் பெருமை செந்தமிழ் காவலர் சிதம்பரநாதனாரையே சேரும். ஆழ்ந்தகன்ற அறிவு, எடுப்பான அழகு மிக்க தோற்றம், ஆராய்ந்த கல்வி, இம்மூன்றும் தூதருக்குரிய நல்லிலக்கணமாகும்.

"அறிவுரு ஆராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

என்பது குறட்பா. தூதர்க்குரிய இம் மூன்று நல்லிலக்கணங்களையும் ஒருங்கே பெற்றுத் தலையாய தமிழ்த் தூதராகச் சிறந்து விளங்குகின்றார் செந்தமிழ் காவலர். மணிவிழாக் காணும் என் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கட்கு என் மகிழ்ச்சி கலந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்; நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வாழ்க செந்தமிழ்; வாழ்க செந்தமிழ்க் காவலர்! வெல்க அவர்தம் தமிழ்த்தூது. △

டாக்டர் லலிதா காமேசுவரன்,
M.B.B.S., Ph.D. (Lond)
மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர், மதுரை.

மணிவிழாக் குழுத் தலைவர்கள்



ஆவி. க. தியாகராசச் செட்டியார்
நகரத்தார் சங்கச் செயலர், மதுரை.



கலைத்தந்தையாரோடும் திரு. கோபாலரெட்டியாரோடும்
திரு. அ. சிதம்பரநாதனர்

செந்தமிழறிஞர்
T. R. பஞ்சநதம் பிள்ளை
சென்னை

செட்டியார் சிறப்பியல்பு

தமிழறிஞர் திரு. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் மணிவிழா நடைபெற இருப்பதைக் கேட்டு மிகவும் மகிழ்கின்றேன். தமிழே உருவான திரு. செட்டியார் அவர்களின் மணிவிழா நடக்க வேண்டியது மிகவும் பொருத்தமே. தமிழ் என்ருல் இனிமை என்பது பொருள். 'தமிழ் சிவம் இனிமை எனும் தனிப் பொருளாம்' என்பது பழமையான பாடலின் வரி. எனவே இனிமையான தோற்றமுடையவர் நமது செட்டியார் அவர்கள். அவர்களுடைய கம்பீரமான தோற்றமும், நடை உடை பாவனைகளும் கண்டோரைக் கவர்ச்சி செய்யும். அவருடைய தொடர்பு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும், திருச்சிராப் பள்ளித் தமிழ்ச் சங்கத்திலும் எனக்குக் கிடைத்தது. உலகத்தில் பலர் பற்பல கொள்கைகளுக்காக வாழ்வர். புகழைக் குறித்தோ, பதவியைக் குறித்தோ, செல்வத்தைக் குறித்தோ, வேறு பல காரியங்களைக் குறித்தோ வாழ்வர். ஆனுல் தமிழுக்காக வாழ்பவர் ஒரு சிலரே. அவர்களுள் நமது செட்டியார் அவர்கள் ஒருவர் என்ருல் மிகையாகாது. 'இருந்தமிழே உன்னுல் இருந்தேன். இமையோர் விருந் தமிழ்தம் என்ருலும் வேண்டேன்' என்கிருர் ஒருவர். அஃதாவது பெருமையான தமிழே உன்னுல்தான் உலகில் வாழ்கிறேன். தேவலோகத்திலுள்ள அமிர்தத்தைக் கொடுத்தாலும் விரும்ப மாட்டேன் என்பது. எனவே தமிழுக்காக வாழ்ந்துவருவதை நமது செட்டியார் அவர்கள் வாழ்க்கையில் காட்டி வருகிருர்கள். புகழைக் கருதாமல் தமிழுக்குத் தொண்டு செய்வதே நல்லது என்று கருதி உழைத்து வருகிருர்கள்.

பரம்பொருளிடத்திலேயே நாட்டங் கொண்டு செல்வத்தை விரும்பாதவர்களிடமே அச்செல்வம் நாடிச்செல்வது போல், நமது செட்டியார் அவர்கள் புகழை விரும்பாவிடினும், புகழ் அவர்களையே நாடிச் செல்கிறது. மேலும் மணிவிழா மதுரையில் நடக்க இருப்பது மிகவும் பாக்கியம். சங்கப் புலவர்களாகிய சான்ருேர்கள் வாழ்ந்த இடத்தில், ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசுவரர் எழுந்தருளி அருள் வழங்கி வரும் இடத்தில், இனிமை வாய்ந்த இடத்தில் மணிவிழா நடப்பதை யாவரும் கேட்டு மகிழ்வர். ஸ்ரீ மீனுட்சி சுந்தரப்பெருமானின் திருவருளால் நமது செட்டியார் அவர்களின் மணிவிழா இனிது நடைபெறுவதுடன் அவர்கள் பல்லாண்டு இனிது வாழ்ந்து செந்தமிழ் மொழிக்குரிய சிறந்த தொண்டுகள் செய்து வாழப் பிரார்த்திக்கிறேன். வாழ்க தமிழ்! வாழ்க திரு. செட்டியார் அவர்கள்!

சித்திரனும் சிதம்பரநாதரும்

பாலபண்டிதம் - வித்துவான் - பாப்பு - இராமநாதன்
தலைமைத் தமிழாசிரியர்,
அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி,
பேரையூர், மதுரை மாவட்டம்.

மூவேந்தர் அரசோச்சிய தமிழகந் தன்னில், பாவலர் கவல் ஒழித்து வாழ்ந் தனர். அத்தகைய சங்ககாலச்சான்றோரிற் பெருஞ்சித்திரனரும் ஒருவராவர்.

அப்புலவர் பெருமான், வெளிமான், அதியமானெடுமானஞ்சி, வெளிமான் இளவல் இளவெளிமான் ஆகியோரைப் பாடியுள்ளார். அற்றை நாளில் வாழ்ந்த புலவர் பலரும் தமக்கென வாழாது, பிறர்க் கென வாழ்ந்த தண்ணளியுடையோரா யிருந்தனர். அதனற்றன் கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி, இந்த உலகம் அழியாமைக்குக் காரணம் சான்றோர் உண்மையேயெனக் கூறினன் போலும்.

புலவரைப் போற்றிய புரவலர் பலர் வாழ்ந்தமையாற்றன், புலவர் பழுமரம் தேடிச்செல்லும் புள்ளினம் போலப் பண் புடையாரைத் தேடிச்சென்று பரிசுபெற்று வந்தனர். அத்தகைய சான்றோர் தாங்கள் பெற்ற பரிசு கொண்டு தாங்களே நல் வாழ்வுகொள்ள நாடாது, சுற்றத்தோடு வாடி வரும் புலவருக்கு வழிகாட்டி, அவர் தம் அழிபசி நீக்க ஆவன செய்த செய்தியை யாமறிய ஆற்றுப்படை அணி செய்து நிற்கின்றது.

சித்திரம் வரைவதில் மிக்க வல்லுநரா யிருந்தமையை அவர்தம் பெயர் பறை சாற்றுகின்றதன்றோ? இவர் குமணன்பாற் சென்று. அவன் புகழ்பாடிப், பரிசு பெற்று இல்லம் ஏகினர்; வறுமையுற்ற நிலை யினும் பெருமையுற்று வாழ்ந்தனர், பெருஞ்சித்திரனரும் அவர்தம் இல்லத் தரசியாரும். அவர்தம் மனைவியார் கணவர் பண்பறிந்து வாழ்ந்த தகைமை யுடையோராயிருந்தனர்.

பரிசுபெற்ற பாவலர், இல்லத்துள் சென்றனர். கணவர் வருகையறிந்த இல்லத்தரசியார் முகமலர்ச்சியோடு வர வேற்றனர். பெற்ற பரிசைப் பெருமை யுடன் தம் மனையாள் கையில் தந்தனர்

புலவர். பெற்ற அவ்வம்மையார் உடனே தக்கவிடத்தில் வைக்க வெண்ணினரோ வெனின், அன்று; அவர்தம் கணவர் கருத்தறிய முகம் நோக்கினர். தம் மனைவியர் தம் கருத்தறிய விரும்பு கின்றார் என்பதையறிந்த புலவர் பெருமான் சொல்லலுற்றார் :

கற்பு நெறி வழாது பொற்புடன் விளங்கும் பெண்ணே ! நின்னை விரும்பி நிற்கும் பெண்களுக்கும், நீ விரும்பும் மகளிர்க்கும், பல சிறப்பினையுடைய கற்பிற் சிறந்த நின் சுற்றத்தார் முதலியவர் களுக்கும், நம்மில்லில் பசி நீங்க நெடுநாள் உணவு தந்துஉதவிய சான்றோர்களுக்கும், இன்னார்க்குத் தாம் தருதல் வேண்டும் என்றெண்ணுதும், யாவர்க்குத் தரல் வேண்டுமெனவென்னை வினவாதும், இச் செல்வம் நாமே உண்ணின் நெடுநாளள வும் இருக்குமென்று கருதாமலும் முதிர மலைக்குத் தலைவனான குமணன் நல்கிய இதனை நீ அனைவருக்கும் வழங்குவாயாக எனக் கூறினார்.

இனிச் செய்யுள் வருமாறு :

"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே !
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே"

இப்புலவர் பெருமான் எங்ஙனம் பிறர் நலம் கருதி வாழ்ந்தனரோ, அப்பெற்றியே நம் உயர்திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களும் பிறர்நலமே, குறிப்பாகத் தமிழாசிரியர் நலமே தம் நல மாகக்கொண்டு, அவர்தம் முன்னேற்றத் துக்கு அல்லும் பகலும் அயராது அரசுடன் உரையாற்றிப் பாடுபடும் பெரியாரெனின் புகழுரையாமோ ? அன்று, அன்று ! பொருளுரையே யாம்.

இதற்குச் சான்றாக என் வாழ்க்கையிற் கண்ட ஓர் உண்மையினை ஈண்டியம்பி அமைவல். யான் ஆயிரத்துத் தொள்ளா யிரத்து ஐம்பத்திரண்டாமாண்டு, ஏப்ரல் திங்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தார் நடத்தும் புலவர் புகுமுகத் தேர்வெழு துவதற்கு அண்ணாமலை நகர் சென்றேன். அத்தேர்வு விதியில் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வெழுதியவர்கள் "இலக் கணத்தேர்வு எழுதத் தேவையில்லை யெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது பற்றி அங்குள்ள பலரிடம் உசாவினேன். என் ஐயம் நீங்க வேண்டின் ஐயா அவர் களிடம் தெளிவுறுமாறியம்பினர். முதல் முறை அவர்தம் மனைக்குச் சென்றேன். அவர் குளித்துக் கொண்டிருப்பதாக அங்குள்ள ஓரம்மையார் என்னிடம் கூறி, என்னைப் பற்றிய செய்தி அறிந்து கொண்டனர்.

பின், நான் வீட்டின் முன் சற்றுத் தொலைவில் இருந்த வெளியிடத்தில் அமர்ந்திருந்தேன். ஏறத்தாழப் பதினைந்து மணித்துளிகள் இருக்கலாமெனவெண்ணு கின்றேன். அவ்வமயம் ஒரு சிறுவன் மிதிவண்டியிலிருந்து இறங்கிக், கையில் நோட்டுக் கற்றையோடு உள்ளே சென்றான். உள்ளே சென்றதை நோக்கிய நான் விரைவில் எழுந்து மனையை நெருங் கினேன், சிறுவன் வெளியில் வந்து விட்டான். நான் தாழ்வாரத்திலே நின்றேன். அப்பொழுது வானொலிப் பெட்டியின் முன்னமர்ந்து இசையினைச் செவிமடுத்த அம்மையார் மதுரையி லிருந்து யான் வந்திருப்பதைச் சுட்டினர். அவர்களும் சின்னேரத்தில் "ஏஸ், ஏஸ்" எனஆங்கிலத்தில் மொழிந்தனர். இதனைக்

கேட்ட யான் உள்ளே சென்றேன்; என் ஐயத்தைக் கூறினேன். அதனைக் கேட்ட அவர்கள் கூறலுற்றனர்:

''நீங்கள் பொது அறிவுப் பாடத்தில் தமிழ்ப் பாடத்திலும், இலக்கணத்திலும் எடுக்கும் மதிப்பெண்களின் அளவினைச் சேர்த்து எடுப்பீர்களா? வென வினவினார்.

நான் தேர்வு பெற்றுவிடுவேன். மிகுந்த மதிப்பெண் பெறுவேனென்பதை எவ்வாறு உறுதி கூற முடியுமென நவின்றேன். நான் தேர்வு எழுத வந்து விட்டேன். அனைத்துப் பாடங்களையும் எழுதிவிடுகிறேன் என்றேன். அதற்கு அவர், மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தேறிய சான்றிதழைக் காட்டினேன். இந்தத் தேர்வில் தேறிய நீங்கள் இப்புகுமுகத் தேர்வு ஏன் எழுதுகிறீர்கள்? உங்களைப் புலவர் இறுதி வகுப்பில் சேர்த்துக்கொள் கின்றேன். சூன் திங்கள் வாருங்கள் — இடம் வைத்திருக்கின்றேன் என்றனர்.

நானே என் தாயைப் பேணும் பொறுப்பு உடையேனாதலின், பள்ளியிற் சேர்ந்து பயில வாய்ப்பிழந்த நிலையை விளக்கிக் கூறினேன், இங்குப் புகுமுகத் தேர்வில் வெற்றி பெறின், சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப் பெறும் வித்துவான் இடைநிலைத் தேர்வு எழுத இசைவளிப்பார்களோவெனவினவினேன். உடனே, ஒரு புத்தகத்தைப் புரட்டி, எழுதலாமென நவின்றனர். ரூபாய் ஐந்திற்கு 'சலான்' அரசுக் கருவூலத்தில் செலுத்திச் சென்னைப் பல்கலைக்கழகத் திற்கு அனுப்பித் தேர்வு எழுதுமாறு விளக்கம் தந்தனர். அதன்பின் விடை பெற்று வெளியேறினேன். முன்னறியாத வென்னை மிக்க ஆதரவோடு அழைத்து, வேண்டுவன கூறிய பண்பினை இன்று நினைக்குந்தோறும் அக்காட்சி என் உள்ளத்தின்கண் நின்று நிலவுகின்றது.

அத்தகைய சான்றோர் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் ஆசிரியர்கட்கும், தமிழுக்கும் நல்லன செய்து வாழ எல்லாம் வல்ல அங்கயற்கண்ணியின் திருவடித் தாமரை மலர்களை மனமொழி மெய் களால் இறைஞ்சுகிறேன்.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் பாரதியார்ப் பாராட்டு விழா



நாவலர் சோமசுந்தர பாரதியார், 'கலைத்தந்தை' கருமுத்து தியாகராசச் செட்டியார்,
'முத்தமிழ் காவலர்' கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களோடு டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்



அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில்
இராசா சர் மு. அ. முத்தையாச் செட்டியார்
திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்களோடு
டாக்டர் அ. சிதம்பரநாதனூர்

தமிழ்த் தாயின் தவப்புதல்வர்

வித்துவான் நா. இராமையா பிள்ளை, M.A.,
7, மின்சாரநிலைய வீதி, மதுரை-1.

டாக்டர் திரு அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களும் நானும் ஒரே ஆசிரியரிடத்தில் தமிழ் பயின்றவர்கள். அவ்வாசிரியர் அவர்களுக்கு டாக்டர் செட்டியாரவர்கள் முதல் மாணாக்கர்; நான் கடைமாணாக்கன்; அவர் கல்லூரி மாணாக்கர்; நான் தனி மாணாக்கன்.

முதல் மாணாக்கர் என்றால் ஆசிரியர் மனத்தில் முதலிடம் பெற்று அவர் எல்லா நன்மையும் செய்யும்படி நடந்து கொள்ளுபவர். ஆசிரியர், தம்பதவியையே தம் மாணாக்கருக்கு வழங்கவேண்டும் என்னுமளவிற்கு முதன்மையானவராகத் திகழ்ந்தவர்கள் டாக்டர் செட்டியார் அவர்கள். அந்தப்பதவி பெற்றதோடன்றி தம் திறமையால் அதற்கு மேலான பதவியையும் (துணைவேந்தர் பதவி) பெற்று ஆட்சித் திறமையில், தமிழ் கற்றோர் எவருக்கும் இளைத்தவர், சளைத்தவரில்லை என்பதை டாக்டர் செட்டியார் அவர்கள் நிலைநாட்டிவிட்டார்கள்.

கடை மாணாக்கன் என்றால் கடைசியாக மாணாக்கனாக இருந்தவன். டாக்டர் செட்டியாரவர்களுடைய தமிழாசிரியர்க்கு நான் செல்ல மாணாக்கனாக இருந்தேன். எனக்குப் பின் எவரும் அவர்களிடம் மாணவராக இருந்ததில்லை. எவரையும் மாணவராக ஏற்றுக்கொண்டதில்லை. அவர்கள் வித்துவான் தேர்வு பெற்றவர் தாம் தம்மிடம் மாணாக்கராகவிருந்து பயிற்சிபெறமுடியுமென்றெண்ணினார்கள். ஆனால் வித்துவான் தேர்வு பெற்றவர்கள் பள்ளியை நாடிப் பணிக்குச் சென்றார்களே தவிரப் பசுமலையை நாடிப் படிப்பிற்காகப் போந்தார்களில்லை. எமது ஆசிரியர் நாவலர் சோமசுந்தரபாரதியார் அவர்கள்.

நாவலர் பாரதியாரவர்களிடம், அவர்களது முதுமைப் பருவத்திலே. பசுமலையில் தமிழ் பயின்ற பின்பு பணிக்குச் சென்று சில ஆண்டுகளில் ஒரு நூல் எழுதி நான் வெளியிட்டேன். அதனை அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைத்துதவினால் மிகுந்தபேருதவியாய் இருக்குமென்று என் ஆசிரியரவர்களிடம் தெரிவித்துக் கொண்டேன். நூல் தகுதியுடையதுதானா என்று அறிந்துகொள்ள விரும்பி என் நூல் முழுதும் ஒருமுறை படித்துப் பார்த்தார்கள். தகுதியுடையது என்று கண்டு தம் மாணக்கர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில், தம்மிடத்தில், தமிழ்ப் பேராசிரியராக விளங்கும் டாக்டர் செட்டியாரவர்களுக்கு எழுதினார்கள். எழுதிய இரண்டு மூன்று நாள்களில் ஆவன செய்வதாக மறுமொழி வந்தது. அதனை என் ஆசிரியர் எனக்குத் தந்தார்கள். மகிழ்ந்திருந்தேன்.

1954-ஆம் ஆண்டு கோவை சிவக் கவிமணியார் பெரிய புராணப் பேருரை நிறைவு அரங்கேற்ற விழா சிதம்பரத்தில் நடராசப்பெருமான் திருக்கோவிலில் நடைபெற்றதற்கு நான் மதுரையிலிருந்து சென்றிருந்தேன். தங்கியிருந்த இடத்தி லிருந்து கல்லூரித் தமிழாசிரியர் ஒருவரோடும் சில நண்பர்களோடும் டாக்டர் செட்டியாரவர்களைக்காண அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றேன். டாக்டர் இல்லம் சென்றோம். அதுவரை டாக்டரவர்களை நான் நேரில்கண்டதில்லை. கண்டதும் மகிழ்ச்சி கொண்டேன். காரணம் இப்படித்தானே தமிழ்ப் பேராசிரியர்கள் இருக்கவேண்டும் என்ற எண்ணந்தான். உரையாடிக்கொண்டிருந் தோம். நல்ல மோர் கொடுத்தார்கள். கனிவான பேச்சு; குலுங்கிய சிரிப்பு; என்னோடு வந்த கல்லூரித் தமிழாசிரியர் பாற் பரிவு காட்டிய முகமன் ஆகியவை இருந்தன. அனைவரும் விடைபெற்றுக் கொள்ளும்போது என் நூல் பற்றியும், நாவலர் பாரதியார் எழுதிய கடிதம் பற்றியும் மெல்லத் தெரிவித்தேன். அது வரை நான் இன்னன் என்று தெரிவித்துக் கொள்ளவில்லை. கேட்டதும் டாக்டரவர் களுக்கு அவரது ஆசிரியர்பால் எத்துணை பெரிய மதிப்பும் அன்பும் இருந்தன என்பதை அவர்கள் நிலை எனக்குக் காட்டிற்று. சொல்லற்றுச் செயலற்றுச் சிலநொடிகளிருந்தார்கள். கருத்துச் செலுத்துவதாகக் கூறி எனக்கு விடையளித்தார்கள்.

சில மாதங்களில் டாக்டர் செட்டியார் அவர்கள் பல பல்கலைக்கழகங்களையும் பார்வையிட ஆங்கில நாட்டாரின் அழைப்பின் பேரில் இங்கிலாந்து போந்தார்கள். எனது நூல் எப்படிப் பாடமாகப் போகிறது என்று ஏங்கி யிருந்தேன். வேண்டுவன செய்துவிட்டே போயிருந்தார்கள். அது பாட நூலாக ஆக்கப்பட்டிருப்பதாகப் பல்கலைக் கழகத் திலிருந்து செய்தி வந்தது. நான் ஆசிரியர் அவர்களுக்கும் செட்டியாரவர்களுக்கும் நன்றி செலுத்தினேன்.

1958-ஆம் ஆண்டு சென்னை மேல் சட்டமன்றத்திற்கு ஆசிரியர் தொகுதியில் தாம் ஒரு வேட்பாளராக நிற்பதாகவும், மதுரை மாவட்டத்திலிருக்கும் ஆசிரியர் களின் வாக்குகள் தமக்குக்கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும் டாக்டர் செட்டியாரவர்களிடமிருந்து தட்டச் செழுத்தில் இரு முடங்கல்கள் எனக்கு வந்தன. நான் அஞ்சலட்டைகள் வாங்கி எனக்குத் தெரிந்த ஆசிரியர்களுக்கு எழுதினேன். அப்போது மதுரைமாவட்டத்

தமிழாசிரியர் மன்றம் தோன்றவில்லை; இயங்கவில்லை. தேர்தலின்போது திருச்சிப் பேராசிரியர் உயர்திரு. ஐயன்பெருமாள் கோனாரவர்களின் விருப்பப்படி மதுரைப் புத்தக வெளியீட்டாளர் திரு. M. சீனிவாசன் அவர்கள் இரு 'கார்'களை ஏற்பாடு செய்து வாக்காளர்களை ஏற்றி வாக்குப் பதிவு செய்யும் கோட்ட அலுவலகத் திற்குக் கொண்டு செல்லும் பணியில் என்னையும் ஈடுபடுத்திக் கொண்டார்கள். எங்கள்காரில்வந்து டாக்டர் செட்டியாரை விடுத்து மற்றவர்களுக்கு வாக்குப் பதிவு செய்தவர்களும் உண்டு. இறுதியில் டாக்டர் செட்டியாரவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். மேல் மன்றத்தில் இவர்கள் அமைச்சர்களும் போற்றும் வண்ணம் அரிய பணி செய்திருக் கிறார்கள்.

டாக்டர் செட்டியாரவர்களிடம் அரிய தமிழ்ப்புலமைமட்டும் அமைந்திருக்க வில்லை, அவர்கள் ஆசிரியரிடத்தில் அமைந்திருப்பதுபோல அரிய ஆங்கிலப் புலமையும் அமைந்திருப்பது கண்டு சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியாரவர்கள் ஆங்கில – தமிழ்ப் பேரகர வரிசைக்கு டாக்டர் செட்டியாரவர்களை ஆசிரியராக இருக்கும்படி ஏற்பாடுசெய்துவிட்டார்கள். ஆறு ஏழாண்டுகளில் அருமையான அகரவரிசை வேலை அறிஞர்கள் மெச்சும் வண்ணம் நிறைவுபெற்றது.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து தேர்ந்து தெளியும் வல்லாராகிய கலைத்தந்தை, மீனாட்சி ஆலைத் தலைவர் உயர்திரு. கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள் தம் கலைக்கல்லூரியை, முதல்வராய் இருந்து நடத்தித்தர டாக்டர் செட்டியாரவர்களை அழைத்தார்கள். அழைப்பை ஏற்று மதுரைபோந்து மாட்சியோடு ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கும் டாக்டர் செட்டியாரவர்களுக்கு இப்போது 60 ஆண்டு ஆகிறது.

குடந்தையில் பிறந்து கற்றுச், சென்னை போந்து அரசுப் பணியோடு வளர்ந்து, சிதம்பர நடராசப்பெருமான் முன்னிடத் தில் உயர் தமிழ்ப் பணி செய்து, மதுரை அன்னை மீனாட்சியின் அருட்பார்வையில் அன்போடு ஆட்சிப் பணிபுரிந்து கொண் டிருக்கும் தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்களுக்கு அறுபதாண்டின் போது, "ஐயனே! எல்லா நலமும் எம் டாக்டருக்கு அருளித் தமிழ்ப் பணியோடு தமிழ்நாட்டுப் பணியும் இமிழ் கடல் உலகில் யாவரும் போற்ற அவர் இயற்றும் படி செய்து காப்பது நின் கடன்" என்று கரம்கூப்பிச் சிரந்தாழ்த்திச் சொக்கலிங்கப் பெருமானை வணங்குகிறேன்.

வாழ்க டாக்டர் செட்டியார்!

வளர்க அவர்தம் தொண்டு!

★

செந்தமிழ் காவலர்

பேராசிரியர் நா. சஞ்சீவி, M.,A. M.Litt., தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனுர் கண்ணுக்கு இனியர்; கருத்துக்கும் இனியர்; கூரிய அறிவினர்; பாரிய பணியினர்; பல்லாண்டுகள் தமிழ்ப்பணி புரிந்து புகழ் பெற்ற பேராசிரியர். இவர்கள் சில்லாண்டுகளிலேயே சட்டமன்றத் தொண்டாற்றிச் சிறப்புப் பெற்றது—தமிழ்ப் புலவர் தலை நிமிர்விற்கு வழிகோலியது. தம்மாணவர்களை அமைச்சர்களாய்க் காணும் பேறு எல்லார்க்கும் வாய்ப்பதன்று. அவ்வரிய பெருமை நம் பேராசிரியர்க்கு வாய்த்தது. நாம் பெற்ற — நாடு பெற்ற — நற்றமிழ் பெற்ற இது பெரும் பேறு. வாழ்க்கையில் பெரிதும் ஒழுங்கையும்கட்டுப்பாட்டையும் கண்ணெனப் போற்றும் பெரியார் டாக்டர் அவர்கள். சில நேரங்களில் கடுமையாய் நடப்பினும் பல நேரங்களில் கனிவாய் நடக்கும் அவர்தம் பண்பு எளிதில் மறத்தற்கு இயலாதது. ஆடவர் அவாவும் அழகு படைத்த அவர்கள் அரிவையரும் நாணும் பெண்மைச் சாயலும் பெற்றிருப்பது மறைமலையடிகள் — திரு. வி. க. மரபுகாக்கவே போலும்!

பேராசிரியர் அவர்கள் முதன்முதல் தமிழாராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள்; அதன்வாயிலாக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தனிப்புகழ் தந்தவர்கள்; அதனுடன் அப்பல்கலைக் கழகத்தின் ஒரு பெரும் பேராசிரியராய்ப் பல்

லாண்டுகள் விளங்கி அச்செழுங்கலை நியமத்திற்குத் திரைகடலுக்கு அப்பாலும் பெரும்புகழ் மேவப் பேருதவி புரிந்தார்கள்; சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ்ச்சொற்களஞ்சியத்தைக் குறித்த ஆண்டுகளுக்குள் சிறந்தமுறையில் வெளியிட்டது வாயிலாகத் தம் தாய்ப் பல்கலைக் கழகத்தின் தனிச்சிறப்பை நிலைநாட்டினார்கள்; இப்போது மதுரைப் பல்கலைக் கழகம் மாண்புற அப்பெருங் கலைக் கோயிலின் ஆட்சியாளருள் ஒருவராய்த் திகழ்கிறார்கள்.

கிழக்கும் மேற்கும் கண்ட டாக்டர் சிதம்பரநாதனார், பழமைக்கும் புதுமைக்கும் சிறந்த பாலமாய் விளங்கலை அவர்தம் உடையாலும் நடையாலும் உணர்வாலும் உரையாலும் நன்குணரலாம். உழைப்பும் உறுதியும் நிறைந்த அவர்களின் வருங்காலம் தமிழ்நாட்டின் தனிச்சிறப்புகளைத் தரணி அரிய உதவ வேண்டும். உலக நாடுகள் பலவற்றிற்கும் அவர்களைத் தமிழ் நாட்டின் கலைத் தூதுவராய் அனுப்ப வேண்டுவது இந்திய அரசின் கடமை என்று வற்புறுத்த வேண்டுவது தமிழக அரசின் தனிப் பொறுப்பு.

சிதம்பரநாதனார் சிந்தைக்குஇனிய பெருமாட்டியார், திருமதி பெரியநாயகி அம்மையார். பெண்ணுரிமை போற்றும் பெருந்தகைக்கு வாழ்க்கைத் துணைவியாராய் வாய்த்த அவர்கள் கலையுள்ளம் நிறைந்த கருணையாளர். ஐயா அவர்களைக் கடமையின் வடிவம் என்றால் அம்மா அவர்களைக் கருணையின் வடிவம் எனலாம். கடமையும் கருணையும் கலந்த காட்சியே மணியும் ஒளியும் வழங்கும் மாட்சி!

செந்தமிழ் காவலரின் மணிவிழாச் சங்கத்தமிழ் கண்ட மதுரை மாநகரில் நடைபெறுவது பொருத்தமே. அங்கயற் கண்ணி—ஆலவாய் அண்ணல் அருளால் செந்தமிழ் காவலர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து பைந்தமிழ்ப் பயிர் வேலி ஆயிரம் விளைய வேண்டுவன புரிவார்களாக!

சிதம்பரனார்—பெரியநாயகி
சீரடி போற்றி!

தமிழ் ஒன்றே!

இனிய தமிழ், எளிய தமிழ், சிறந்த தமிழ், பழைய தமிழ், தனித் தமிழ் எனத் தமிழைக் கூறுவதுண்டு. இந்த இனிய, எளிய, சிறந்த, பழைய, தனித்த என்ற அடைமொழிகளுக்கு உலக மொழிகளில் உரிமை உடையவை எத்தனை? என்று ஆராயும்பொழுது தமிழ் ஒன்றே அதனை ஏற்கத் தலை நிமிர்ந்து நிற்கிறது. இது தமிழ் மொழிக்குள்ள அடைமொழிச்சிறப்பாகும்.

—திரு கி. ஆ. பெ. விசுவநாதம்

வையை மணலிலும் பல்லாண்டு வாழ்க

கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார்

அறிஞர் சிதம்பரநாதன் செட்டியாரின் மணிவிழா, அண்மையில் சிறப்பாக நிகழவிருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

இவர்கள் சோறுடைய சோழ வளநாட்டில் தமிழ் மணங் கமழும் தொல்குடியில் தோன்றியவர்; தமிழ்ப் பல்கலைக்கழகம் என்னும் புகழ்கொண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்; நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நன்மாணவராய்த் திகழ்ந்தவர். எனவே, அறிஞர் சிதம்பரநாதன் செட்டியார் ஐந்து பேரறிவும் தமிழேயாகத் திகழ்தல் இயல்பே யாகும்.

அறிஞர் செட்டியார் தமிழில் பெரும் புலமையும், ஆங்கிலத்தில் ஆழ்ந்த பயிற்சியும் சான்றவர்.

" கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் "

என்னும் தமிழ்மறைக் கேற்ப நாநலம் மிக்கவர். மேலும், இவர் சிறந்த எழுத்தாளருமாவர்.

இவர்கள்,

" தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் "

என்னும் வள்ளுவர் பெருமான் வாய்மொழி தேர்ந்து, தாம் பெற்ற தமிழ் இன்பத்தை மற்றவர்க்கும் அளிக்கும் ஆசிரியர் பணியை மேற்கொண்டார்; அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் கால் நூற்ருண்டுக்கும் கூடுதலாகத் தாய்மொழிக்கு அரும்பணி யாற்றினுர். இவரிடம் பயின்ற பல மாணவர்கள் தமிழார்வம் மிக்க அமைச்சர்களாகவும், பாராளுமன்ற—சட்ட அவை உறுப்பினர்களாகவும் திகழ்தல் அறிஞர் செட்டியாரின் பெருமைக்குச் சான்ருகும்.

தமிழ்ப் பெரும்புலவரும் நல்லாசிரியருமான அறிஞர் செட்டியார் அவர்கள் சிறந்த ஆட்சியாளரும் ஆவர். அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், தியாகராசர் கல்லூரி முதல்வராகவும் அவர் தமது ஆட்சித் திறனை இனிது புலப்படுத்தியுள்ளார்.

மற்றும், அறிஞர் செட்டியார் அரசியல் தலைமையும் சான்றவர். தமிழக மேலவையின் உறுப்பினராக அமர்ந்து, பல ஆண்டுகளாக அவர் ஆற்றிவரும் அருந்தொண்டு இதற்கு நற்சான்று பகர்கிறது.

இவை யனைத்திற்கும் மேலாக, அறிஞர் செட்டியார் உயர் ஒழுக்கமும் இறையன்பும் நிறைந்தவர். கற்றதனுல் ஆய பயன் வாலறிவன் நற்ருள் தொழுதலே எனத் தெளிந்தவர்.

இனி, இவர்கள் பெறற்கரும் பேறுகள் அனைத்திலும் சிறந்தவரும்,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்னும் பொதுமறைக்கு இலக்கியமாய் இலங்குபவருமான பெரியநாயகி அம்மையாரை இன்றுணையாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அறிஞர் செட்டியார் இலக்கியத்தில் தோய்ந்து நிற்பதைப் போன்று, அம்மையார் அவர்கள் நுண்கலையில் ஆழ்ந்து திளைக்கும் பெற்றிவாய்ந்துள்ளார். இஃது அறிஞர் செட்டியாரின் இல்வாழ்க்கையின் முழுமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இத்தகைய அருஞ் சிறப்புகள் அனைத்தும் சான்ற அறிஞர் செட்டியாரின் மணிவிழாத் தமிழன்பர் ஒருங்கிணைந்து சிறப்புற எடுத்தல் பாராட்டிற்குரியதும் பொருத்தமானதுமாகும்.

அறிஞர் அவர்களும், கலையுணர்வு சான்ற அவர்கள் வாழ்க்கைத் துணைவியாரும் வையை மணலினும் பல்லாண்டு இனிது வாழ எல்லாம் வல்ல ஆலவாய் அண்ணல் திருவருள் புரிவாராக.

●

நிமிர் ஆசிரியர்

பண்டித இராம. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, M.A., M.E.S.

அமிர்த. சிதம்பரம் - அண்ணுமலை நகரிலே :

முப்பது யாண்டுக்கு முன்னர்ச் சிறப்புத் தமிழ் உயர் பட்டக் கல்வி பெறுதற்காக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்தேன். அப்போது 1937, ஜுலைத்திங்களில் ஒருநாள் தமிழ்த்துறை ஆசிரியர் அறையில் பேராசிரியர் ஒருவருக்கு அறிமுகம் செய்துவைக்கப் பெற்றேன். பேராசிரியர் என்ருல் அப்பெயர் பொருந்தாது. நெடுமால் என்ன உருவமும், பொன்வண்ணமேனியும், நெளிகுஞ்சியும், நிமிர்நடையும், நேர்பார்வையும், நிலைத்த புன்முறுவலுங் கொண்டு, ஆங்கிலேயரோ என்று காண்பார் ஐயுறும் வகையில் சிறு மாற்றத்தவறும் நேராமுறையில் வட்டுடையுமணிந்து திகழ்ந்தார் அந்த நிமிர் ஆசிரியர். அங்கேயே எம். ஏ., பட்டம் பெற்றுத் தம் ஆசிரியர்களுடன் இணையாசிரியராய்த் திகழ்ந்த இவர்மாட்டு ஏனைய தமிழாசிரியர்கள் 'தம்மிற் றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனி'தாகும். உண்மை உணர்ந்து உண்மையன்பு கலந்த மதிப்புடன் பழகி வந்ததையுங் கண்டேன். அவரே, குடந்தை **அமிர்த. சிதம்பரநாதன் செட்டியார்** என்னும் வேளாண்குலக் குரிசில் ஆவார். அன்று முதல் இன்று வரை அவரது அன்புக்கு உரிமை பெறும் நல்லூழ் என்பால் இருப்பதால் மகிழ்கின்றேன். அன்று கண்ட கோலத்தே மாற்றமாகச் சிறிது தடிப்போ மெலிவோ இன்றி நிலையான சீரான உடல் அமைப்புக்கொண்டு திகழும் அவ்வாசிரியர், அகவைக் கணக்கில் அறுபதைத் தாண்டினுர் என்ற செய்தியை என்னுல் நம்புதற்கியன்றிலது. சற்றே நரையும் வழுக்கையும் தோன்றினுலும் உள்ள உரத்தில் என்றும் இளைஞரே என் **நிமிர் ஆசிரியர்**. விழாக்குழுவினர் விதித்த வரம்புக்குட்பட்டுச் சிறிதளவு மட்டுமே அவர்பற்றி நினைவு கூற முற்படுகின்றேன். விரிப்பின் வளரும் பல செய்திகள் பரக்கப் பேசப்பட்டு உலகறிதல் வேண்டும்.

முதன்மை நிலை:

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே முதன்முதல் தமிழ் எம். ஏ., வகுப்பு அமைந்தவுடன் சேர்ந்துபடித்து முதன்மை நிலைத் தேர்வு பெற்றவர் செட்டியார். முதன்முதலாக டாக்டர் பட்டம் பெற்றவரும் இவரே. இரண்டொரு தமிழாசிரியர்கள் இவருக்கு முன்னர் ஓசிப்பட்டம் பெற்றனர். ஆனால் இவரோ பிறர் தயவினால் டாக்டர் பட்டம் பெற்றிலர். முறையாகச் சொல்மறவர் சோமசுந்தர பாரதியாரிடத்தும், கா. சு. பிள்ளையிடத்தும் ஆய்வு மாணவராக இருந்து தமிழ்ச் செய்யுளிலக்கணக்கடலுள் புக்குக் குள்ளக் குடைந்து, நன்மணிகளை வெளிக் கொணர்ந்து, தம்முடைய தனிப்பட்ட கருத்துகளாம் பட்டைதீட்டிப் பலரும் பாராட்டு நிலையில், உழைப்பின் பரிசாக டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழாசிரியர் இவரேதான்.

ஆட்சித் திறனும் சட்ட நுணுக்கமும், ஆங்கில நாவளமும் பெற்ற உயர்வு தகுதி காரணமாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமனம் பெற்றுச் சீர்மை கொண்ட முதல் தமிழாசிரியரும் இவரே தான்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தும் ஆங்கில நாட்டகத்தே பிற கல்விநிலையங்களிலும் தமிழ்பற்றி ஆராய்ச்சியுரைகளை ஆங்கவர் மனங்கொள ஆற்றிப் புகழ் நட்டு மீண்ட முதல் தமிழாசிரியரும் இவரேதான்.

'நெல்லிக்காய்கள்' எனச் சிறு மதியோரால் எள்ளப்படும் நிலையிற் சிதறுண்டிருந்த நற்றமிழாசிரியர்களைத் திரட்டி, ஒருங்கிணைத்து, ஒருமுக உழைப்பும் நோக்கும் கொள்ளச் செய்து, அன்னவர்தம் முழு நம்பிக்கைக்குகந்த மேலாளெனச் சென்னைச் சட்டமன்ற மேலவையுறுப்பினராக முதன்முதல் தமிழாசிரியரும் புகுந்த இவரேதான்.

இங்ஙனம் நான் எழுதும்போது எங்கோ ஒரு குரல் எழும்புகிறது. "உலகறிந்த உண்மைகளைப் பறைசாற்ற உன் உரை எற்றுக்கு?" என. சரி. நிகழ்ச்சிகளைச் சுட்டுகின்றேன்.

தலைநிமிர் பெருமிதம்:

சிறப்புத் தமிழ் வகுப்பில் எங்கட்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார் தமிழ்த் துறைத் தலைவர். வகுப்பு நேரமணி அடித்தது, மாணவர் பட்டியலையும் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு டாக்டர் செட்டியார், பி.ஏ., வகுப்புக்குச் செல்லும் வழியில் எங்கள் வகுப்பைக் கடந்தார். அப்போது தமிழ்த்துறைத் தலைவர் அவரை அழைத்தார். 'பிறகு வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே ஏகினர், நின்றிலர். மாணவர் ஒருவரை அனுப்பி அழைத்து வருமாறு ஏவினர் தலைவர். "வகுப்பு நேரம் இப்போது. முடிந்ததும் வருகிறேன். சொல்" என்ற மாற்றம் மட்டும் உய்த்தாரேயன்றித் திரும்பி வந்திலர் செட்டியார். அப்போதிருந்த தலைவர் சற்றே அதிகார வேட்கையர். மற்றவர்களைத் தம்விருப்பப்படி விதிப்புறம்பாகவும் அடக்கியாள்வதில் இன்பம் காண்பவர். மீறுவோர்பால் செற்றம் கொண்டு பல இடையூறுகள் விளைவிப்பவர்: எனவே நமது நிமிர் ஆசிரியர்க்கு என்ன தீங்குநேருமோ என்று மாணவரேம் அஞ்சி நின்றனம். ஆனால் ஒன்றும் நடந்திலது. கடமையாற்றச் செல்லுமவரைத் தடுத்து நிறுத்துங்குற்றம் தலைவரதுதானே! எனவே திருடனுக்குத் தேள் கொட்டின கதையாகத் தலைவரின் முகத்தில் தெரிந்த அவல உணர்வுகண்டு

அவரது அகந்தைக்குச் சரியான அடி கொடுத்தார் நிமிர் ஆசிரியர் என்பதையும் உணர்ந்து இறும்பூது எய்தினேம். கடமையில் தவறுபவர் அல்லரோ குழைதல் வேண்டும்!

குருவி பிடியாத குரவர் :

அங்கத மரபிற்கிண்டலாகக் 'காக்காய் பிடித்தல்' என்னும் இலக்கணச் சிறுநூல் ஒன்று சூத்திர வடிவிற் புனைந்துள்ளார் நம் டாக்டர் செட்டியார். அதில் ஒரு நூற்பா 'சிறியோர் மேவிற் குருவி பிடித்தல்' என்பதாகும். அஃதாவது பெரியவர்கள் தம்மினும் சிறியவர்களைக் காக்காய் பிடித்துக் குல்லாப் போட்டுக் காரியம் சாதித்துக் கொண்டால், அச் செயலுக்குக் 'குருவி பிடித்தல்' எனப் பெயரிட்டுள்ளார். இவ்வாறு குருவி பிடிக்கும் ஆசிரியர் பலர் அக்காலத்து இருந்தனர். வகுப்பிற் சரிவரப் பாடம் சொல்ல இயலாத தகுதிக் குறைவால் தம் வகுப்புகளில் நடந்த கலாட்டாக்களைத் தடுக்க முடியாமல், மாணவர்க்குக் காப்பி வழங்கியும், அன்னாரிடம் இச்சகம் பேசியும் எள்ளலுக்குட்பட்டார் பலர். அக்காலை நமது டாக்டர் மிடுக்குடன் சென்று, வகுப்புள் நுழைந்து, புன்முறுவலால் மாணவரை வயக்கிப் புரைபடாச் சொற்பெருக்கால் அவர்தம் உள்ளத்தே வியப்பூட்டிக் குறும்பொடுக்கிக் கட்டுப்பாடு கலையா முறையில் பயமும் ஊட்டி, பீ.ஏ., வகுப்புகளை நடத்துவார். வால் நீட்டினால், இவர் வகுப்பில் அறுபடும் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

முறைச் செயலர் :

1938-ல் எங்கள் பல்கலைக் கழகம் கல்கியின் கூற்றுப்படி "சர்வ கலாட்டா சாலை" ஆயிற்று. மாணவர் வேலை நிறுத்தம் போன்ற பல தொல்லைகள் நிகழ்ந்தன. வகுப்புகளுக்கு மாணவர் வந்திலர். ஆசிரியர்களும் பாடநேரத்தில் வகுப்புக்குச் சென்றிலர். ஆனால் நமது செட்டியார் மட்டும் உரிய நேரத்தில் வகுப்பறைக்குச்செல்வார்; விதிமுறைக்கு ஒக்கப் பத்து நிமிஷங்கள் காத்திருப்பார். பிறகு மாணவர் பட்டியலில் அவர்கள் வாராததைப் பதிவுசெய்து மீள்வார். இது கண்டு ஏனைய பேராசிரியர்கள் தம்கடமை தவறுதலையுணர்ந்தனர்.

நேர்மை நிறை நெஞ்சினர் :

1940 மார்ச்சில் எங்கட்குத் தேர்வு முடிந்தது. நேர்முகத் தேர்வு உறுதிப் பாட்டிற்காகத் (vivavoce) தங்கியிருந்தேன். வழக்கமாக மாலையில் இரயில் பாதையில் நெடுந்தொலைவு தம் மனைவியுடன் உலவி மீள்வார் செட்டியார். ஒரு நாள் இரயிலடியில் சோடா வாங்கிக் குடித்துக்கொண்டிருந்தனர். அப்போது நான் அவர் கண்ணிற்பட்டேன். அருகழைத்தார். வினுத்தாள்கள் பற்றி உசாவினுர். என் கருத்தினைத் தயங்காது சொல்லுமாறு தூண்டினுர். அங்ஙனமே சொல்லி வரும்போது உரைநடைத் தாளினை உருவாக்கியவரைச் சற்றே கடுஞ் சொற்களால் கண்டித்துரைத்தேன். பல்கலைக் கழகத் தொடர்புடைய சமகாலத்து ஆசிரியர்களின் எழுத்துநடை குறித்து ஆய்வுரை தருமாறு அமைந்த வினுவினைச் சுட்டிக் "குறும்பாக வம்பு செய்யும் நோக்குடன் அமைந்துள்ளது" என்றும் குறித்தேன். அதற்குச்செட்டியார் என்னுடன் வாதாடினுர். ஆக்ஸ்போர்டு போன்ற மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் நடக்குந் தேர்வுகள் பற்றியெல்லாம் விளக்கியுரைத்து அந்தத் தேர்வுத்தாள் முறையானதே என்று வாதித்தார். தமக்கு ஒத்த நிலையில் வைத்தே என்னுடன் பேசினுர்; நான் மனங்

கொண்டிலேன். பிரிந்தனம். எவ்வளவோ பேசினர். ஆனால் ஓர் உண்மை மட்டிலும் அறிவித்திலர். பல நாள் கழிந்தபின்தான் உண்மை தெரிந்து வருந்தினேன். அப்போதும் நயமாக நான் சுட்டிய தவறு பொருத்தமானது என்று என்னைப் பாராட்டினரே தவிரச் சினந்திலர். உண்மை என்ன தெரியுமா? அந்த வினாத்தாளை உருவாக்கியவர் நம் செட்டியாரேதான். அந்த நாளில் வகுப்பில் தவறாக இலக்கணக் குறிப்புச் சொல்ல அதைச் சுட்டிக் காட்டிய மாணவன்பால் மட்டற்ற சீற்றம்கொண்ட ஆசிரியர்கள் நடுவே இத்தகைய நேர்மையும், தம்மைப் போலவே தம் உள்ளங் கொண்டதை வெளிச்சொல்லும் உரிமை மாணவர்க்குந் தரப்படல்வேண்டும் என்ற உயர்ந்த கோட்பாடுங் கொண்டிருந்த வரை எங்ஙனம் வியவாமல் இருத்தல் இயலும்! தவறுகண்டுழி, T. K. C. போன்றாரையெல்லாம் சாடியுள்ளார், ஆனால் உண்மை கண்டக்கால் உவந்து ஒப்பி ஏற்பார்.

பெண்ணுரிமை பேணும் பெரியவர் :

இவர்தம் மனைவியார் சிறந்த ஓவியர்; வண்ணத்தில் வரையப்படுவார் எண்ணத்தை எடுத்துக்காட்டும் இயற்கையாற்றல் உடையவர். அவரது திறமை தெரிந்த நம் செட்டியார் அதனைப்போற்றி வளர்க்க, வேண்டிய உதவி புரிந்து, ஊக்குகின்றார்; பெருமை கொள்கின்றார்; இலண்டன் மாநகரத்து ஓவியக்காட்சியில் தம் துணைவியாரின் ஓவியப்படைப்புகளை வைக்க ஏற்பாடும் செய்துள்ளார். அவர்கள் இருவரும் மன ஒற்றுமையுடன் அன்பு கனிந்து வாழ்வது கண்ணிற்கு விருந்து. மற்றவர்க்கு ஒரு காட்டு.

செயல் முடிக்கும் செவ்வியர் :

1960 ஆகஸ்டில் மாஸ்கோவில் ஒரு மாநாடு நடந்தது: **கீழை நாட்டியல் அறிஞரின் அனைத்து நாட்டுக் கழக வெள்ளி விழா மாநாடு (XXI International Orientalogists Congress),** அதற்கு இந்திய நாட்டு மேலாளாக நமது செட்டியார் வந்திருந்தார். அக்காலை நான் அங்கேயே வதிந்தேன். நானும் பங்கு பற்றினேன். நமது செட்டியார் திருக்குறள் பற்றி ஆற்றிய சொற்பொழிவு அனைத்து நாட்டவரையும் பெரிதும் கவர்ந்தது.

அப்போது ஒருநாள் க்ரெம்ளின் அரண்மனையில் விருந்து நடந்தது. அங்கு தாஷ்கெண்டினைச்சார்ந்த இசைவித்தகர் ஒருவர் வந்திருந்தார். அவர் இசை நெறி நாடக (opera) இயக்குநர். அவரிடம் முன்னேயே சிலப்பதிகாரத்தை இசைநெறி நாடகமாகச் செய்யும் கருத்தினைக் கூறியிருந்தேன். என் கருத்துக்கு அரணும் ஆக்கமுந்தரும் வகையில் என்னாசிரியரும் சொன்னால் பயன்தரும் என்றுகருதினேன். ஆனால் அந்த இயக்குநருக்கு ஆங்கிலம் தெரியாது. என் ஆசிரியரிடம் இந்தச் சிக்கலைச் சொன்னபோது, "என்ன கூற வேண்டுமோ அதனை உருசிய மொழியிற் சொல்லுங்கள், பார்ப்போம்" என்றார்கள். நான் ஓரளவு சொன்னேன். இரண்டு மூன்று முறை அதனைச் சொல்லிப்பார்த்து ஐந்து நிமிடங்களுக்குள் அந்த இயக்குநரிடம் உருசிய மொழியிலேயே பேசிவிட்டார்.

வாழிய பல்லாண்டு :

நல்ல நாவலர், எழுத்தாளர், மொழி இயல் அறிஞர், மொழி பெயர்ப்பாளர், சட்டத்துறை வல்லுநர், சால்பு நிறை பண்பினர் ஆகிய எங்கள் ஆசிரியராம்

தலை மாணாக்கர்

R. இராசரத்தினம் அம்மையார், M.A., L.T.,
விரிவுரையாளர், வில்லிங்டன் பெருமாட்டி பயிற்சிக் கல்லூரி, சென்னை.

உயர்திரு டாக்டர் சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் எம்.ஏ. வகுப்பில் படிக்குங்கால் அங்கு நானும் படித்து வந்தேன். நான் ஓராண்டு பின்னால் சேர்ந்த காரணத்தால் சில பாடங்கள் மட்டும் எங்கள் இருவருக்கும் பொதுவாக நடத்தப்பட்டன. அப்படி நடத்தப்பட்ட போது அவர்கள் ஒரு தலைமாணாக்கராக இருந்ததைக் கண்டேன்.

இரண்டு வகுப்புகளுக்கும் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களும் பாடம் நடத்துவார்கள். அப்போது திருவாளர் செட்டியார் அவர்கள் மிகவும் கவனமாகப் பாடத்தைக் கேட்பதுடன், இடையிடையே தம் ஐயங்களையும் மிகவும் பணிவுடனும் அறிய வேண்டும் என்ற ஆர்வத்துடனும் கேட்பார்கள். அதன் விளைவாகப் பிற மாணவரும் பெரிதும் பயனடைந்ததுண்டு. அவர்கள் கேட்கும் கேள்விகளிலிருந்து முதல்நாள் நடந்த பாடத்தைத் தெரிந்திருப்பதுடன் நடக்கவிருக்கும் பாடத்திலும் கருத்தூன்றி இருந்ததை உணரலாம்.

உதாரணமாக ஒருமுறை திருவாளர் பண்டிதமணி அவர்கள் ஒரு புலவர் "பேரியாற்றின் மணலினும் பலவாக உன் வாழ்நாள் அமைய வேண்டும் என்று வாழ்த்தினார்"! என்று கூறி விளக்கஞ் சொன்னார். அதைக்கேட்டநம்செட்டியார் அவர்கள் மிகவும் பணிவாக ஓர் ஐயம் என்று கூறி—ஆற்று மணலினும் பலவாக என்ற வார்த்தையினால், மண்ணாகப் போகக்கடவாய் என்ற தொனிப்பொருளை யாரும் கொள்ள மாட்டார்களோ" என்று கேட்டார்; ஆசிரியர் கூறிய விளக்கத்தினால் சமாதானமும் அடைந்தார்.

முன்பக்கத் தொடர்ச்சி

'செந்தமிழ் காவலர்' சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தம் வாழ்க்கைத்துணையாம் பெரியநாயகியம்மையுடன் இன்னும் பல்லாண்டு இனிது வாழ்ந்து என்போன்றார்க்கு வழிகாட்டியுதவுமாறு அருள்பாலிக்க எல்லாம் வல்ல இறையடி இறைஞ்சுவல் !

நல்லாசிரியர் :

திருவாளர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தை விட்டு நீங்கிச் சென்னைக்குச் சென்ற பின் நம் செட்டியார் அவர்களே அந்தப் பணியைச் செய்துவந்தார்கள். ஒரு பேராசிரியரான போதும் செட்டியார் அவர்கள் பல நூல்களைப் படித்து விஷய அறிவோடு சிந்தனை செய்து காரண காரிய முறைப்படி, பாடத்தை மாணவர் மனத்தில் பதியும்படியாகக் கூறுவதோடு, குறிப்புக்களையும் எழுதிக்கொள்ளச் சொல்லுவார்கள்.

எழுத்தாளர் :

இவர்கள் படிக்குங் காலத்திலேயே கல்லூரி இதழ்களில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார்கள். பிறகு பலநூல்கள், பாடநூல்கள் எழுதி இருக்கிருர்கள். எளிய, தெள்ளிய நடையில் எழுதுவது இவர்கள் இயல்பாகும்.

சொற்பொழிவாளர் :

இவர்களுடைய பேச்சு வன்மையை அறிந்த பல வெளியூர் மன்றங்களும், சங்கங்களும் இவர்களை விரும்பி அழைப்பதுண்டு. இயன்றபோதெல்லாம் சென்று இனிய முறையில் சொற்பொழிவாற்றி வருவார்கள். தலைமைதாங்குங்காலும், சொற்பொழிவாளர் அல்லது பொது மக்களுடைய கருத்துக்கு மாறுபடாத வாறு மிக்க பண்பாட்டுடன் நடந்து கொண்டு கூட்டத்தை இனிது நடத்தித் தருவார்கள்.

உற்ற நண்பர் :

இவர்கள் எல்லோருக்கும் உற்ற நண்பராக நடந்துகொள்ளும் சிறப்பியல்பு வாய்ந்தவர்கள். தம் மாணவரையும் நண்பரைப்போலவே நடத்துவதுவழக்கம்.

இல்லத் தலைவர் :

இவர்கள் தம் வாழ்க்கைத் துணைவியாருடன் இனிதே இருந்து விருந்து அளிக்கும் முறை சிறப்புக்குரியதாகும். இவர்கள் செவிக்கும் விருந்தளிப்பார்கள். இவர்களுடைய நாயகியாரோ என்ருல் தம் கைவண்ணத்தைச் சமையலில் மட்டும் காட்டாது, ஓவியத்திலும் தீட்டிக் கண்ணுக்கு விருந்தளிப்பார்கள். ஆக இவர்களுடைய இல்லமானது காவியமும் ஓவியமும் சேர்ந்த ஒரு புதுமை இல்லமாகக் காட்சியளிக்கும். இத்தம்பதிகளுடன் எவ்வளவு நெருங்கிப்பழகினுலும் அறியமுடியாத இரகசியம் ஒன்று உண்டு. அதுதான் இவர்களுடைய இளமை. என்றும் இளையவராக இவர்கள் இருப்பது காவியத்திலுலா ஒவியத்திலுலா மன நிறைவிலுலா என்று விளங்குவதில்லை. வள்ளல் அண்ணுமலை அரசரின் பல்கலைக் கழகத்தின் பயிற்சியினுல் பெரும் புகழ் பெற்ற மாணவருள் நம் செட்டியார் அவர்களும் ஒருவராவர் என்பது மிகையாகாது.

மணிவிழாக் கண்ட செட்டியார் தம்பதிகள் இன்றுபோலவே என்றும் இளையவராய், எல்லா நலன்களும் வாய்க்கப் பெற்றுச் சுற்றமும் நண்பரும் சூழப் பல்லாண்டு பல்லாண்டுகள் வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல மீனுட்சி சுந்தரேசுவரரை வழுத்துகின்றேன்.

வாழ்க! டாக்டர் செட்டியாரும் அவர் தம் இல்லத்தரசியும்! இம் மணிவிழா, வைர விழா, முத்து விழா முதலிய பல விழாக்களுக்கு வழி வகுக்கட்டும்!

△

நேர்மையான ஆட்சியாளர்

டாக்டர் மெ. சுந்தரம், M. A., M. Litt., Ph. d., தமிழ்த்துறை, மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை.

" நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி "

சங்க காலத்தில் வணிகச் சான்றோர் வணிகம் புரிந்ததாகப் பட்டினப்பாலை பகர்கிறது. அந்தச் சான்றாண்மை கடைச் சங்க காலத்தில் மட்டுமன்று; கழகக் காலத்திலும் தொடர்ந்து வருகின்றது, என்பதற்குச் சான்றாக விளங்குகிறார் செந்தமிழ் காவலர் சிதம்பரநாதனார் அவர்கள். வணிக நெறியும், வண்டமிழ் நெறியும் ஒன்றே என்பதைச் செந்தமிழ்ச் சான்றோர் சிதம்பரநாதனார் தம் சொல்லாலும் செயலாலும் விளக்கி வருகிறார்,

" புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும் "

என்ற குறட்பாவிற்கேற்பச் சிந்தை தூயவராய இச்செம்மலின் வாழ்வு, வாய்மை தழுவிய வண்டமிழ் வாழ்வாகும். 'வாய்மையே வெல்லும்' என்பதில் ஊன்றிய நம்பிக்கையுடைய இவ்வுயர் தனிச் செம்மல் அகமும், புறமும் ஒன்று பட்ட தூய வாழ்வினராவர். அகத் தோற்றமாகிய பண்பாடும், புறத்தோற்ற மாகிய நாகரிகமும் நிறைந்த இச்செம்மல், தம் தூய வாழ்வால் மற்றோர்க்கும், மாற்றோர்க்கும் வழிகாட்டியாக விளங்கி வருகிறார்.

தமிழ்த் துறையின் முதல் டாக்டர் திரு. சிதம்பரநாதனார் அவர்கள். தமிழில் ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெறலாம் என்ற எண்ணத்தினை நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னே தமிழகத்தில்

உருவாக்கியவர்களே திரு. அ.சி. அவர்கள் தான். அவர்களுக்கு முன்னர் அந்த நிலையும், நினைப்பும் தமிழகத்தில் இருக்க வில்லை. அவர்கள் ஆசிபெற்று அத்துறையில் ஈடுபட்ட பல மாணக்கர், இன்று தாய்த் தமிழகத்தில் மாணச் சிறந்த டாக்டர்களாய் வலிவொடும், பொலிவொடும் உலா வருகின்றனர். செந்தமிழ் வானில் அந்த நிலாக்களை உலா வரவிட்ட பெருமை டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்களையே சாரும். இது தமிழன்னைக்கு அவர்கள் புரிந்த தலைத்தொண்டாகும். தமிழ் ஆராய்ச்சி உள்ளளவும் இத்தலைத் தொண்டு நிலைத்த பெயருடன் நீடித்து நிற்கும்.

மொழித் துறையில் டாக்டர் சிதம்பரநாதனுர் முன்னின்று ஆற்றிய தொண்டுகள் அளவிலடங்கா. மொழி இயல் துறையில், தமிழ்மொழிக்கு ஆக்கம் ஊட்டும், அரண் பயக்கும் கொள்கைகள் பலவற்றை உருவாக்கிய சிறப்பு திரு. சிதம்பரநாதனுர் அவர்களைச் சாரும். சிலர் மேலைநாட்டு மொழியியல் கொள்கையினைத் தழுவி, அவற்றைத் தமிழொடு பொருத்திப் பார்த்துத் தாய்த் தமிழுக்குச் சிறுமையும், குறைவும் கற்பித்தனராக, டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள் அப் புன்னெறிப் படராது, செந்தமிழ் மரபிற் கேற்ற செந்நெறிச் சென்று முத்தமிழின் மொய்ம்பினையும், அதன் மொழியியற் கொள்கைகளின் தொன்மையினையும், தன்மையினையும் இயற்பட மொழிந்து எழிற்றமிழ் மொழிக்கு ஏற்றம் அளித்தார். எஞ்சிய சிலர் இரக்கம் இன்றி அன்னைத் தமிழுக்கு இறக்கம் அளித்த நேரத்தில் துணிவொடும், கனிவொடும் களத்தில் இறங்கி, மாற்றுரைப் புறங்கண்டு மொழிக் கொடியை உயர்த்திப் பிடித்தவர், இதனுல் 'தமிழ் மொழியியல் துறையின் தந்தை' என்று இவர்களை அழைக்கலாம்.

'வடமொழியே இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய்'' என்று முன்னுள் தில்லிச் சட்ட மன்றத் தலைவர் திரு. மௌலங்கர் மொழிந்து சென்றுர். மொழி இயல் துறையில் இருந்த சிலர், இக் கூற்றினைச் செவிமடுத்தும் வாய்மூடி மௌனிகளாய் வாளாவிருந்தனராக, டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள்தாம் வெகுண்டெழுந்து, 'அக்கூற்று, தமிழ் மொழியைப் பொறுத்தவரை தவறு பட்டது; மொழியியல் கொள்கைகளுக்கே முரண்பட்டது. அக்கூற்றுச் சில மொழி நூல் உண்மைகளுக்குக் கூற்றுவனய் அமைந்தவொன்று என்று சான்று கொண்டு நிறுவினுர்கள். தமிழ், வட மொழிக்கு ஆட்படாத ஓர் உயர்தனிச் செம்மொழி. அதன் மரபுகளும், இலக்கண இலக்கியங்களும், மொழியமைப்பும் வட மொழியினின்றும் முற்றிலும்மாறுபட்டன, என்று விளக்கித் தமிழின் தனித் தன்மையினைத் தரணி அறியச் செய்தார்.

முத்தமிழ், முக்கடல் எல்லைக்குள்மட்டும் அமைந்து விடாமல் நானிலமும் பரவிய நன்மொழியாய்த் திகழ வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டவர்கள் நம் பண்டாரகர் அவர்கள். மேலை நாடுகள் தமிழின் மேன்மையை அறிய வேண்டும் என்று அவா மீக்கூர்ந்தவர்கள் அவர்கள். இந்தியப் பேரரசின் முகவர்களில் (Delegate) ஒருவராக மாசுகோ சென்று, அனைத்துலக எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டு 'திருக்குறட் செய்தி' என்ற தலைப்பில் அரிய ஆராய்ச்சியுரை ஒன்று நிகழ்த்தினுர்கள். திருவள்ளுவப் பெருந்தகை உலகினர்க்கு விடுக்கும் செய்தி யாது என்பதைத் தெளிவாகவும், முறையாகவும்அவர்கள் எடுத்துமொழிந்த

திறம் தமிழ்இலக்கியங்களின் ஆற்றலையும் ஏற்றத்தையும் அறியாதாரையும் அறியச் செய்தது. 'தமிழ்ப் பண்பாடு' முதலிய ஆங்கில இதழ்களில் இவர்கள் அவ்வப் போது எழுதிவரும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மேலைநாட்டுமொழித்துறைப் புலவோர்க்கு விருந்தாதல் ஒருதலை.

இப்பெருந்தகையாரின் நன்மாணுக்கர் பலர் தாயகத்தில் மட்டுமின்றி மேலைப் புலத்திலும் மேதினி போற்றப்பணியாற்றிக் கொண்டு வருகின்றனர், இலண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராய்ப் பணியாற்றும் டாக்டர் ஜான்மார் அவர்கள், நம் பேராசிரியர் அவர்களிடம் ஆராய்ச்சிப்பணி மேற் கொண்ட அன்பராவார். டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்களின் செந்தமிழ்ப் பண்பால் ஈர்க்கப் பெற்ற திரு. ஜான்மார் அவர்கள் நம் பேராசிரியர் அவர்களின் மாணவராய் அமர்ந்து ஆராய்ச்சி புரிவதைப் பெறலரும் பேருய்க் கருதினுர், அதற்குக் காரணம் டாக்டர் அவர்களிடம் தொல்லாணை நல்லாசிரியர்க்கு வேண்டும் இலக்கணம் அனைத்தும் அமைந்து இருந்தமையேயாகும். இவர் தொல்லாணை நல்லாசிரியராய் அமர்ந்திருந்தாரே தவிரச் சிலர்போலத் தொல்லை கொடுக்கும் பொல்லாத ஆசிரியராய் அமையவில்லை.

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யாறு அன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்
அலைகா அன்பும் வெலைகா உள்ளமும்
துலைநா வன்ன சமனிலை உளப்பட"

அனைத்திலக்கணங்களும் அமையப் பெற்று ஒரு நல்லாசிரியன் திகழவேண்டும் என்று ஆத்திரையன் பேராசிரியன் கூறினுன். அவ்விலக்கணங்களுக் கெல்லாம் இலக்கியமாய் இன்று நம் மிடையே காட்சியளிப்பவர் டாக்டர் அ.சி. அவர்கள். இப்பெருந்தகையாரின் அடிச் சுவட்டை மற்றைப் பேராசிரியர்களும் பின்பற்றினுல் ஆசிரியத் துறை மாசு மறுவின்றி மாண்புற்றெளிரும் என்பதில் ஐயமில்லை. இங்ஙனம் ஆசிரியத் துறை யினர்க்கு வழிகாட்டியாய் அமைந்துள்ள டாக்டர் அவர்கள், அவ்வாசிரியத் துறையினர் சார்பாளராய்ச் சென்னைச் சட்டமேல்மன்ற உறுப்பினராய் விளங்கி ஆசிரியர்கள் நலனுக்கு அருந்தொண்டு ஆற்றி வருவது போற்றி மகிழத் தக்கது.

இவர்கள் ஆசிரியப் பெருமகனுராய் மட்டும் அமைந்துவிடாமல் தலைசிறந்த ஆட்சியாளராகவும் விளங்குவது பாராட்டுக்குரிய செய்தியாகும். 'ஏடு அறிந்த புலவர் நாடு அறியார்' என்ற குறை இவர்களால் நீங்கியது. அந்தப் பழிமொழி இவர்களால் துடைக்கப் பெற்றது. இவர்கள் ஆட்சியாளர் மட்டும் அல்லர். நேர்மையான ஆட்சியாளர். கல்வி முதல் நாடு வரை உள்ள ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளவர்கள் அறிந்து பின்பற்றவேண்டிய செய்தி இது. இன்னுர் இனியர் என்று பாராது சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து இவர்கள் நீதி வழங்கும் திறம், நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளுக்கு ஆட்படுதல் கூடாது. சூழ்நிலைகளுக்கு அடிமையாதல் கூடாது. பழிவாங்கும் நோக்கமும், வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையும் அவர்கள் கனவில் கூடத் தோன்றக் கூடாது. இத்தீய பண்புகளுக்கு அவர்கள் ஆட்பட்டால் என்ன ஆவார்கள் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே இளங்கோவடிகள் கூறிச் சென்றுர். 'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்று ஆவதூஉம்' என்பதே அவ்வரசத் துறவி

தில்லியில்
குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரப்பிரசாத்துடன்
டாக்டர் அ. சிதம்பரநாதனர்

அறிவுறுத்திச் சென்ற அடி. அந்த அடியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்ருர் உய்ந்தார்; செல்லாதார்க்கு உய்தியில்லை என்று அறநூல்கள் உரைத்த வண்ணம் உள்ளன. இந்த அறம் ஆட்சியில் முதலிடம் பெற வேண்டும் என்பதில் அக்கரை கொண்டவர்கள் டாக்டர் அவர்கள். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'' என்று புறநானூறு கூறுகிறது. அறந் தழுவிய ஆட்சியே நிலைக்கும்; ஆதலால் அறவோர் ஆட்சியாளராய் வரவேண்டும் என்ற அவாக் கொண்டவர்கள் டாக்டர் அ.சி.அவர்கள். அவர்கள் அறநெறி தழுவிய ஆட்சியாளராய் விளங்கிய காரணத்தால் அவர்களுக்கு அறத்தின் அருமையும் பெருமையும் நன்கு தெரிந்திருந்தன. அறமே என்றும் நிலைக்கும்; மறம் மாண்டு ஒழியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் டாக்டர் அவர்கள். அந்த நன்னம்பிக்கை முனை நோக்கித்தான் அவர்கள் நடைபயின்று வருகின்ருர். ஆதலால்தான் அந்நடை வெற்றிநடையாய், வீறுபெற்ற நடையாய் வியனீர் உலகு வியக்கும் கொற்ற நடையாய்க் காட்சி அளித்து வருகிறது. இக்காட்சி மறநெறி பின்பற்றும் மாற்று ஆட்சியாளர் அகக்கண்ணையும், புறக் கண்ணையும் திறக்கும் என நம்புகிறேம். கண் திறவாவிடில் திறக்கவைப்பர் காசினியோர்.

டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள் பிரிட்டிசுக்கழகத்தின் (British Council) அன்பழைப்பை ஏற்று இங்கிலாந்து சென்று பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சி முறைகளைக் கண்டறிந்து வந்தார்கள். அது பற்றிய அறிக்கை ஒன்றினையும் அரசினரிடம் அளித்து உள்ளனர். இவர்கள் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் விளங்கினுர்கள். இப்போது மதுரைத் தியாகராசர் கல்லூரியின் முதல்வராகவும் விளங்கி வருகிருர்கள். இந்நிகழ்ச்சிகள் ஆட்சித்துறையில் இவர்களுக்குள்ள மாட்சியினைத் தெள்ளத் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல எடுத்துக் காட்டுவனவாகும்.

தமிழக அரசு இப்பெருந்தகையாரின் ஆட்சித் திறமையினைத் தக்கவாறு பயன் படுத்திக்கொள்ள வேண்டும். பல்துறைகளும் நிறைந்த பல்கலைக் கழகத்தினை நேர்மையான முறையில், நீதி பிழையாமல் அறத் தடுமாற்றம் இல்லாமல் ஆட்சி புரியத்தக்க பெரும்பேராசிரியர், தமிழ்த் தக்கார் டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள். புலமை நலமும், ஆட்சித் திறமையும், நடுவுநிலை சான்ற நற்றமிழ்ப் பண்பும், ஆழ்ந்த சிந்தனையும், அமைதி உள்ளமும் கொண்டிலங்கும் முத்தமிழ்ப் பேராசிரியர்களின் முடிசூடா மன்னரான டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்களைத் தமிழ்நலம் நாடும் தமிழக அரசு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக (Vice-Chancellor) நியமனம் செய்து, உயர் கல்வியினையும், ஆராய்ச்சியினையும் வளர்ச்சியுறச் செய்யவேண்டும் என்று கல்வியாளர்களும், மாணுக்கர்களும், தமிழகப் பெருமக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். தமிழக அரசு கல்வி வளர்ச்சி கருதி இந்நற் செயலை விரைவில் மேற்கொள்ளும் என நம்புகிறேம். இச் செயல் நிறைவேற்றத்தால் தமிழகத்தில் பல்கலைக் கழகக் கல்வியின் தரமும் நிறையும் சீர்பெறும் என்பதுறுதி. ஏனெனில் டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள் தொடக்க காலத்தில் இருந்தே கல்வித்துறையோடு தொடர்பு உள்ளவர்கள். அவர்கள் வாழ்வே கல்வித்

துறையிலிருந்துதான் தொடங்கியது. மற்றைச் சிலரைப்போல் பிறபல துறைகளில்புகுந்து அங்கெல்லாம் புறமுதுகிட்டு, இறுதியில் கல்விதான் கதி என்று வாழ்வு கருதி வந்தவரல்லர் டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள். உண்மையான கல்வி உள்ளத்துடன், கல்வி நிகழ்ச்சிகளை ஆராய்ந்தவர்கள். இதற்கு இவர்களின் சென்னைச் சட்டமேல்மன்ற உரைகளும், ஆசிரியர் மாநாட்டுச் சொற்பொழிவுகளுமே தலைசிறந்த சான்றுகளாகும். இங்ஙனம் கல்வித் துறையின் அகப்புற நிகழ்ச்சிகளை நன்கு அறிந்த நேர்மையான உள்ளங் கொண்டவர்களைத் துணைவேந்தராக நியமனம் செய்தால்தான் கல்வித் துறையும் சீர்படும்; கல்வியாளர்களும் இன்பத்தில் மூழ்குவர். இதற்கு மறுதலையானவர்கள் பல்வேறு அரசியல் அடிப்படையில் இப்பதவிக்கு வந்தால் கல்வித்துறை சீர்கெடும். கல்வியாளர் துன்பத்தில் மூழ்குவர். இதனைத் தமிழக அரசு உள்ளத்திற் கொண்டு விரைந்து செயலாற்ற வேண்டுகின்றோம்.

டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள் தலைசிறந்த நாவலர் ஆவர். நாநலம் என்னும் நலனுடைமை அவர்கள்பால் சிறந்து இலங்குவது கண்கூடு. தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலமையும் கைவந்தவர்கள். இவ்விரு மொழிகளிலும் இவர்கள் எழுத்தும், பேச்சும் ஆற்றல் வாய்ந்தவை. கேட்டார்ப் பிணிக்கும் சொல்வன்மை நிறைந்தவர்கள். அனைத்திற்கும் மேலாக ஆண்ட நாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப் பாண்டிய வேந்தர் மீண்டு வந்தது போன்ற எடுப்பான தோற்றம் உடையவர்கள். ஒரு தூதுவருக்கு வேண்டிய அன்பு, அறிவு ஆராய்ந்த சொல்வன்மை, உரு, கல்வி ஆகிய ஐந்து இலக்கணங்களும் இவர்கள் பால் இயற்கையாகவே அமைந்துள்ளன. ஆதலின் இவர்கள் தமிழ்ப் பண்பாட்டுத் தூதுவராக மேலைநாடுகளுக்குச் சென்று தமிழ்மொழி, பண்பாடு ஆகியவைகளைப் பரப்பப் பெரிதும் தகுதியுடையவர்கள். சிலர் மேலைநாடுகளுக்குச் சென்று தமிழ்மொழி, பண்பாடு ஆகியவை பற்றித் தவறுன கருத்துகளைப் பரப்பி வந்துள்ளனர். இந்த நச்சுக் கருத்துகளை மாற்றி நல்ல கருத்துகளைப் பரப்பப் பெரிதும் தக்கார் டாக்டர் அ.சி. அவர்கள். அமெரிக்க முன்னுள் குடியரசுத் தலைவர் ஜான் கென்னடி அவர்கள் தம் கொள்கைகளைப் பரப்பச் 'சுற்றிவரும் தூதுவர் (Roving Ambassador) அமர்த்திக் கொண்டதுபோல், மக்களாட்சிப் பண்பு நிறைந்த நம் தமிழக அரசும் டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்களை மேலைநாடுகளில் தமிழ் மொழி, பண்பாடு பரப்பும் 'சுற்றிவரும் தூதுவராக' நியமனம் செய்தல் நலம் பல பயக்கும். இதனை அரசு கருத்தில் இருத்தி வாய்ப்பு வரும்போது செயற்படுத்துதல் நலம். ஏனெனில் மேலைநாடுகளில் தமிழ்மொழி, பண்பாடு பற்றிப்பரப்புவதற்குத் தக்கநேரம் இதுவேயாகும். வேறு சிலர் தமிழைப் பற்றி இழித்தும், பழித்தும் தாழ்வாகக் கூறி வந்ததை இதுவரை யாரும்மறுக்கவில்லை. ஆதலின் அத்தவறுன கருத்துகள் அங்கு மாபெரும் உண்மையாக எற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவைகளை மாற்றி உண்மை துலங்கச்செய்ய இதுவே ஏற்ற சமயம். இனியும் காலந்தாழ்த்துதல் கூடாது. காலந்தாழ்த்தின் அது கழிவிரக்கத்தில்தான் முடியும். தமிழ் உள்ளங் கொண்ட தமிழ்ப் பேரரசு இத் துறையில் சிந்தித்துச் செயற்பட்டால், செந்தமிழ்ப் பண்பாடு அலைகடலுக்கு அப்பாலும் அடிவானத்திற்கு அப்பாலும்

பரவி வேரூன்றக், காலூன்ற வாய்ப்பாக இருக்கும்.

டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள் கல்வித்துறை பற்றிய செய்திகள் அனைத்தும் செம்மையாக உணர்ந்த செவ்வியோர் ஆவர்; கல்விச் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் ஆகிய வற்றை அறிந்துணர்ந்த அரிய மதிநலம் படைத்தோர் ஆவர். ஆதலின் அவர்களை அரசு, கல்வி ஆலோசனையாளராக (Educational Adviser) அமர்த்தி, அவ்வப்போது கல்வித்துறை வளர்ச்சி பற்றிய அறிவுரைகள் பெறலாம். இதனுல் கல்வித்துறையில் நெறி முறை வளரும்; நிலைத்த கொள்கைகள் உருவாகும். எதனையும் ஆழ்ந்து சிந்தித்து அமைதியாக வெளியிடும் திறம் டாக்டர் அவர்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது. திட்டங்கள் பல தீட்டிய பட்டறிவு இருக்கின்றமையின் நாட்டிற்கு நலம் பயக்கும் கல்வித் திட்டங்களை இவர்கள் செம்மையாக உருவாக்குவார்கள் என்பது ஒருதலை.

இத்துணைச் சிறப்புகளுக்கும் இலக்காக விளங்கும் டாக்டர் சிதம்பர நாதனுர் அவர்கள் செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு இன்று காட்சி அளிக்கிறுர்கள். 'பிறந்த நாளில் பெருமங்கலமும்' என்று தொல்காப்பியம் பேசும் மணிவிழாக்காண இருக்கின் றுர்கள். மணிவிழாக் காணும் தமிழ் மன்னர் அவர்கள், தொடர்ந்து பல அணி விழாக்களும் கண்டு சிறப்புற வேண்டும் என்பது தமிழ்கூறு நல்லுலகத்தின் பெரு விருப்பமாகும். பீடு பல பெற்ற இப் பெருந்தகையாரை எண்ணும்போது அன்பொழுகும் முகமும், அருள்பொழியும் கண்களும், பகைப்புலம் மாய்க்கும் நகைப்புல இதழ்களும், நெடிய செவ்விய தோற்றமும், அனைத்திற்கும் மேலாக நேர்மையான தமிழ் நெஞ்சமும் நம் மனத்தகத்தே தோன்றி மகிழ்வூட்டு கின்றன. இத்தமிழ்ப்பண்பாளர் பெயரைச் சொன்னுலும் வாய் மணக்கும், தொட்டாலும் கை மணக்கும். இவர்கள் எந்த நிலையத்தில் பணியாற்றினுலும் அந்த நிலையத்திற்குத் தான் பெருமை. இவ்வறநெறிச் சிந்தையாளர் நாட்டின் பொதுச் சொத்து. இவர்கள் பெருந் தகுதியினையும் திறமையினையும் தமிழக அரசும், மக்கள் மன்றமும் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே நம் வேணவா.

மணிவிழாச் செல்வர் மாண்பெலாம் பெற்று, மாணச் சிறந்த பெருவாழ்வு வாழ்ந்து, பிறங்க வாழ்த்தி, எம்மையும் வாழ்த்தியருள வேண்டுகிறேம்.

★

நெறிஞர்

டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., M.O.L., Ph.D.,
முதல்வர், அழகப்பர் கல்லூரி, காரைக்குடி.

என் ஆசிரியர் டாக்டர் சிதம்பரனாரை நினைக்கும்போது, செந்தமிழும், செயல் மாண்பும் கண்முன் ஓடி வருகின்றன. முப்பது ஆண்டுகட்குமேலாக அவர்தம் அன்பையும், நண்பையும், துணையையும் இடையறுது பெற்ற அன்பர் குழாத்துள் நானும் ஒருவன். சிதம்பரனாரின் தோற்றத்தில் சான்ருண்மையையும், நடையில் பெருமிதத்தையும், சொல்லில் மொழித் தூய்மையையும், கருத்தில் துணிவுடைத் தெளிவையும், செயலில் கால ஒழுங்கினையும், நட்பில் கூடிப் பிரியாப் பண்பையும், நெஞ்சத்தில் உயிர் ஊட்டும் உணர்ச்சியினையும் கண்டுவந்திருக்கின்றேன்.

அறிஞர்சிதம்பரனார் வாழ்க்கை தமிழை மையமாகக் கொண்டது. எல்லோர்க்கும் தமிழ் தாய்மொழியாக இருந்தாலும், எல்லோரும் தமிழ் அன்னையின் மக்களாக இருந்தாலும், மொழி அன்னையைச் சிந்தித்துக்கொண்டே இருக்கும் அன்பர்கள் நாட்டில் எவ்வளவு பேர்? "பால் நினைந்தூட்டும் தாய்" என்ருர் மணிவாசகர். அங்ஙனம் ஊட்டியவள் தாய் என்ற நினைப்பு எவ்வளவு நாள் எத்துணைப் பேருக்கு வாழ்க்கையில் அடிக்கடி தோன்றுகிறது? இலக்கணம் இலக்கியம் என்ற இருமார்பிலிருந்து மொழிப்பால் ஊட்டிய கன்னித் தமிழ்த் தாயை மறவாத மகனுவார் சிதம்பரனார். மொழித்தாயை என்றும் நினைக்கும் நல்லூழ் அவர் பிறப்பில் அமைந்து கிடக்கின்றது. தமிழ் அல்லாத பிறதுறைப் பதவிகள் சிதம்பரனார்க்கு வந்தபோது, தமிழ்த்துறையில் இருப்பதையே அவர் நயந்து விரும்பினார். தமிழுக்கு ஓர் இழுக்கு என்ருல் அவர் மெய்யும் நாவும் கண்ணும் உயிரும் துடிதுடிக்கும். பின் விளைவைப் பொருட்படுத்தாது தமிழ் காக்க முனைந்து விடுவார். திறம்படைத்த பெரியவர் ஒருவர் தமிழைக் குறைகூறிய போது சிதம்பரனார் தாம் ஒரு கூட்டங் கூட்டி அப்பெரியவர் கருத்தை அதே இடத்து மறுத்து மொழிந்தார். அப் பெரியவர் தமக்குப் பெரிய அதிகாரி யாயினும் தமிழைக் குறைகூற அவருக்கு உரிமை இருக்குமாயின் அதனை மறுத்து நிறைவு செய்ய நமக்கு உரிமையில்லையா என்பது சிதம்பரனார் கருத்து. நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மாணவ வழித் தோன்றல்ஆதலால், அஞ்சாது எதிர்க்கும் உணர்ச்சி சிதம்பரனாரிடத்து அமைந்து கிடப்பதில் வியப்பில்லை.

தாயை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை என்பதுபோல், சிதம்பரனார்க்குத் தம் கருத்தை ஒளிக்கும் வஞ்சகம் இல்லை. சொல்ல நினைக்கும் கருத்தைப் பக்குவ மாகச் சொல்லிப் புலப்படுத்தும் ஆற்றல் அவர்பால் உண்டு. காரைக்குடி, 'ஹிந்து

மதாபிமான' சங்கத்தின் ஓர் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய போது, சங்கத்தின் பெயர் முழுதும் வடமொழியாக இருப்பதைத் தற்கால நல்ல தமிழ் உணர்ச்சிக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாகாதாவென்று உறுப்பினர்களைக்கேட்டுக் கொண்டார். அவர் வேண்டுகோளை முழுதும் நிறைவேற்ற இயலாவிட்டாலும் 'இந்து மதாபிமான சங்கம்' என்று தமிழ் ஒலியாக அமைத்துக் கொண்டனர், சங்க அன்பர்கள். டாக்டர் சிதம்பரனார் சங்க விழாவிற்குத் தலைமையுரையாற்றும்போது வள்ளல் அழகப்பர் கூட்டத்திற்கு வந்திருந்த காட்சி என் மனத்திரையில் இன்றும் பொலிகின்றது. தமிழாசிரியர்களின் சங்கத் தலைவராய்ப் பல்லாண்டுகளாக இருந்துவரும் சிதம்பரனார் கல்வித் துறையில் தமிழ் ஆசிரியர்கட்கு ஏற்படும் இன்னல்களை அரசினரிடம் சொல்லியும், சட்டமன்றத்தில் எடுத்துக்காட்டியும், பல முன்னேற்ற வழிகளைச் செய்துள்ளனர். ஆதலின், 'செந்தமிழ் காவலர்' என்னும் பட்டம் சிதம்பரனாருக்குப் பொருள் பொதிந்த பட்டமேயாகும். இப்பட்டத்தினைத் தருமபுர மடத்தினர் வழங்கினர். பட்டம் வழங்கிய அக்கூட்டத்தில் தமிழ் நாட்டுத் தமிழர்தம் கோயில்களில் வாழ்த்தும் வழிபாடும் தமிழில் அமைய வேண்டும் என்று சான்றுகளோடு கூறினார் என்றால், இடமறிந்து அறங்கூறும் துணிவுடையவர் சிதம்பரனார் என்பது பெறப்படும்.

டாக்டர் பட்டத்தின் ஆராய்ச்சிக்குச் சிதம்பரனார் கொண்ட ஆய்வுப் பொருள் யாப்பிலக்கணம் ஆகும். இப்பொருள் ஆராய்ச்சிக்குரிய அரிய பொருள் என்பது வெளிப்படை. "கல்நார் உரித்தன்ன" வன்மையுடையவர்க்கே இத்தகைய பொருளை ஆராய முடியும். தமிழ் கற்று டாக்டர் பட்டம் பெற்றோருள் முதல்வர் ஆவார் சிதம்பரனார். அன்ன பெரும் பட்டம் பெறும் வாய்ப்பு தமிழ்கற்றோர்க்கு உண்டு என்பதனைத் தமிழ் உலகிற்கு விளம்பிய வழிகாட்டியும் அவரேயாவார். பண்டிதமணி கதிரேசச் செட்டியார்க்கு அரசினர் அளித்த மகாமகோபாத்தியாய பட்டத்தையும், சிதம்பரனார்க்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டத்தையும் ஒருங்கு பாராட்டுதற்குச் 'சிதம்பரம் இளங்கோ மன்றத்தார்' நடத்திய விழாக்காட்சியை நானும் கண்ணுற்றேன். தம் மாணக்கர் சிதம்பரனார் தம்மொடு ஒரு மேடையில் பாராட்டப்பெறும் பேற்றுக்குப் பண்டிதமணியார் மகிழ்ந்து வாழ்த்திய உரைகள் இன்றும் என் நினைவில் உள. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பல தமிழ் வெளியீடுகளுக்குச் சிதம்பரனார் பதிப்புரை எழுதியுள்ளார். அப்பதிப்புரைகளில் இலக்கிய வரலாறு பற்றிய நுண் ஆராய்ச்சிக் குறிப்புகளைக் காணலாம்; இப்பல்கலைக்கழகத்தில் முறையான தமிழ் இலக்கிய வரலாற்று வெளியீடுகளுக்குத் திட்டமிட்டவர் சிதம்பரனாரே.

அறிஞர் சிதம்பரனார்க்கு, நன்கு திறனாய் வன்மை உண்டு. மொழியியல் பற்றிய ஆராய்ச்சி மதுகையும் உண்டு. 'தமிழோசை' என்ற தலைப்புடைய அவர் நூலகத்துத் தமிழ்மொழியின் பல்லியல்புகளைப் புலப்படுத்துகின்றார். ஐயர், பிள்ளை, செய்யுள், நெய், தண்ணீர் என்ற கிளவிகளின் பொருள் வளர்ச்சிகளைப் பன்னூல் மேற்கோள்களோடு நிறுவியிருக்கக் காண்கின்றோம். எழில், அழகு என்ற இரு சொற்களும், நுண்ணிய பொருள் வேறுபாடு உடையவை எனவும், வளர்ந்து வரும் அழகுத் தன்மையைக் குறிப்பதற்குத்தான் எழிற் சொல்லை ஆள

வேண்டும் எனவும் எடுத்துக் காட்டிய திறம் இவ்வறிஞர்க்குரியது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு வேண்டும் ஆக்கக் கருத்துகளையும் இவர்தம் கட்டுரைகளிடைத் தெளிவாகக்காணலாம். பொதுமக்கட்குப் புரியாது என்று தமிழ்மொழியின் நடையைத் தாழ்த்திக் கொண்டே சென்ருல், தாழ்ந்து போவதற்கு எல்லையிராது என இவர் இடித்துரைப்பர். வட நாடு, தென்னடு என மொழி நிலையில் பேசும்போது, வட இந்தியர்க்கு ஒத்தது, தென் இந்தியர்க்கும் ஒக்கும் என்ற கோட்பாடு பொருந்தவே பொருந்தாது என டாக்டர் சுட்டிக்காட்டுவர். "சொல்லும் பொருளும்" என்ற ஒரு கட்டுரையில் இவர் தமிழ் இலக்கண மரபை மிகவும் வலியுறுத்துவர்.

தமிழ்ப் பற்றுக் காரணமாகத் தமிழ் ஆசிரியர்களை நாத்திகர் என்று சிலர் நாட்டில் பரப்பும் இழி போக்கை வன்மையாகக் கண்டிப்பர் சிதம்பரனுர். அவரும் நானும் சிதம்பரம்கூத்தப்பெருமான் கோயிலில் தெற்குக் கோபுரம் வழியாகச் சென்ருேம்; முதலில் முக்குறுணிப் பிள்ளையாரை வணங்கினேம். வணங்கி மேலும் சென்று கொண்டிருந்தபோது, பிள்ளையாரின் உருவத்தில் சில சிற்பக் கூறுகளைப் பற்றி மறுபடியும் பார்க்க எண்ணினேன். ஐம்பது அடி தொலைவில் இருந்தமையின் வந்த வழியே திரும்பச் செல்லலாம் என்று சொன்னேன். அது முறையன்று எனவும் முறையாக வலம் வந்து பின்னரே பார்க்க வேண்டும் எனவும் கோயில் மரபை வற்புறுத்திஞர் சிதம்பரனுர். இதனுல் அறிஞர் சிதம்பரனுர் எத்துறையிலும் முன்னேர் மரபுக்கு அடிமைப்பட்டவர் என எண்ண வேண்டா. ஆராய்ச்சியாளர்க்கு மரபு, வழிகாட்டியேயன்றி வழியடைகல் அன்று. உரையாசிரியர்களின் ஆற்றலிலும் தொண்டிலும் நன்மதிப்பு உடையர் என்ருலும் சில உரைமுறைகள் அவருக்குப் பிடிப்பதில்லை. இலேசு என்ற ஒரு முறை கொண்டு, இலக்கண உரையாசிரியர்கள் சில கருத்துகளைப் புலப்படுத்துவது உண்டு. தொல்காப்பியர், 'ஆகும்' என்று கூறினமையால், இவை ஆகாஎன்று நச்சினுர்க்கினியர் உரை செய்த இடங்கள் உள. 'காக்காய் பிடித்தலும் குருவி பிடித்தலும்' என்று ஒரு சிற்றிலக்கணநூல் சூத்திரவடிவில் யாத்தார் சிதம்பரனுர். சிறியவர்கள் பெரியவர்களைக் காரியத்திற்காகப் புகழ்ந்து பாராட்டுவதைக் காக்காய் பிடித்தல் எனவும், பெரியவர்கள் காரிய முடிப்பதற்காகச் சிறியவர்களைப் பாராட்டி அணைப்பதைக் குருவி பிடித்தல் எனவும் கொண்டு இப்பிடிப்புகளுக்கு உரிய இலக்கணங்களுக்கு நூற்பா யாத்துத் தாமே உரையும் எழுதினுர். அவ்வுரையில் நச்சினுர்க்கினியர் இலேசு முறையை மறைமுகமாக நகையாடியிருப்பதைக் காணலாம்.

அறிஞர் சிதம்பரனுர் தமிழ் வன்மையோடு ஆட்சித் தனி வன்மையும் வாய்ந்தவர், அலுவற் கூறுகளைச் செப்பமாகப் போற்றிக்கொள்வர்; அடுக்கு அடுக்காக வகுத்துக்கொள்வர்; காலம் போற்றிக் காரியம்முடிப்பர், உடையிலும், சொல்லிலும், ஒழுக்கவழக்கங்களிலும், மொழி மரபுகளிலும், நட்பு முறைகளிலும், அறிஞர் சிதம்பரனுர் தமிழ் நெறிஞராக மதிக்கத் தக்கவர்.

★

மணிவிழா வாழ்த்து

நா. பாலுசாமி, M. A., M. Litt.
தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களைத் தமிழகம் நன்கு அறியும். பிறநாட்டுப் பேரறிஞர்களும் பல்கலைக்கழகங்களும் போற்றிப் புகழும் பெருந்தகையாளர். இவர் தமிழ் முழுதுணர்ந்த தன்மையாளர். தமிழகத்தில் தமிழில் முதன்முதல் ஆராய்ச்சித் திறமைக்காக 'டாக்டர்' பட்டம் பெற்ற பெரியார். இவர் நின்ற சொல்லர்; நீடு தோன்று இனியர்; ஆங்கிலத்தில் அழகாகப்பேசும் நாவலர். முதன்முதல் ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றும் பேறு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் இவரே. மாணவர் பால் மட்டற்ற ஈடுபாடு கொண்டவர்; நெகிழ்ந்த உள்ளத்தினர். உற்றுழி உதவும் உயர் குணத்தர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலந் தமிழ் அகராதித்தொகுப்புக் குழுவின் தலைவராக அமர்ந்து நிலைத்த புகழினைப் பெற்றவர்; துணை வேந்தர்கள் தொடங்கித் தொண்டர்கள் வரை யாவரும் விரும்பும் சால்பினர்; செந்தமிழ் காவலர்; செயல் திறம் மிக்கவர்; சட்ட மன்றத்தின் மேலவை உறுப்பினராகத் தொடர்ந்து இருமுறை இணையற்ற தொண்டாற்றும் ஏந்தல்.

இவர்தம் மணிவிழாக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அரங்கத்துப் பெருமான் அருளால் இப்பெரியார் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் இனத்துக்கும் சீரிய பல செயல்களை மேலும் புரிந்து சிறக்க விழைகிறேன். வளர்க இவர்தம் பணி; ஓங்குக இவர்தம் புகழ்.

நல்லாசிரியர்

மு. ஏழுமலை, எம். ஏ., பி. ஓ. எல்., எல். எல். பி.,

அறிஞர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் மணிவிழா, சிறப்புற நிகழ இருப்பதறிந்து தமிழாசிரியர்களும் தமிழ் அன்பரும் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர். ஏனெனில், அறிஞர் செட்டியார் அவர்கள் இளமை முதல் இன்று வரை தமிழே தம் பேச்சும் மூச்சுமாக வாழ்ந்து வருகிறார். கல்வி நிலையங்களில் தமிழின் நிலையையும் தமிழ் ஆசிரியர் நிலையையும் உயர்த்துவதில் கடந்த முப்பதாண்டுகளாக அவர் செய்து வந்துள்ள தொண்டு அளப்பருஞ் சிறப்பு உடையது,

அறிஞர் சிதம்பரநாதர் தமிழ்ப் பெரும் புலவர் ; ஆராய்ச்சி வல்லுநர் ; திறமை சால் ஆட்சியாளர் ; அரசியல் மேதை ; பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். எனினும், இத்தகு சிறப்புகளால் அவர் என் உள்ளத்தை அவ்வளவாகக் கவர்ந்தார் என்று கூற முடியாது. மாறாக, ஒரு நல்லாசிரியர் என்ற முறையிலேயே அவர் என் மனத்தில் நிலையானதோர் இடத்தைக் கவர்ந்து கொண்டார்.

1944-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் மாணவனாகச் சேர்ந்தேன். பின்னர்ப் பல ஆண்டுகள் அங்குத் தமிழும், கீழை நாட்டுக் கலையும், ஆங்கில இலக்கியமும் பயின்றேன். தமிழ்ப் பிரிவில் மாணவனாக இருந்தபோது, பேராசிரியர்கள் தெ.பொ,மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, அறிஞர் சிதம்பரநாதனார், இலக்கணக் கடல் பூவராகம் பிள்ளை, சைவ சித்தாந்தச் செம்மல் வெள்ளை வாரணனார் முதலியோரிடம் பயிலும் பெரும் பேறு எனக்குக் கிட்டியது. தமிழகத்தின் தலைசிறந்த இப்பேராசிரியர்களை என் வாழ்நாளில் ஒரு நாளும் மறக்க முடியாது. இந்நல்லாசிரியர்களுள் நடுநாயகமாகக் குறிப்பிடத் தக்கவர் அறிஞர் சிதம்பரநாதனார் ஆவார். இதற்குக் காரணம் உண்டு.

நல்லாசிரியர் தம் மாணவர்க்குக் கற்பிக்கும் முறையைக் கூறும் புலவர்கள்,

> “ உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
> விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
> கொள்வோன் கொள்வகை யறிந்தவன்
> உளங்கொளக்
> கோட்டமில் மனத்தினால் கொடுத்தல் என்ப ”

என்னும் விதிமுறைக் கேற்பக் கல்வி புகட்டுபவர்களே ஆசிரியராய்ச் சிறந்து விளங்க முடியும் என்று உணர

வைத்துள்ளனர். இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழ்பவர் அறிஞர் சிதம்பரநாதனார் எனின், அது சிறிதும் மிகையாகாது. இதற்கு ஒரே ஒரு சான்று இங்குத் தருகின்றேன்.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை அறிஞர் சிதம்பரநாதனார் எங்கட்குப் பயிற்றிக் கொண்டிருந்தார். அன்று "புறஞ்சேரி இறுத்த காதை" பயிற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

> "கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா;
> வாள்வரி வேங்கையும் மான்கணம் மறவா;
> அரவும் சூரும் இரைதேர் முதலையும்
> உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா
> செங்கோல் தென்னவர் காக்கும் நாடு"

என்ற வரிகளின் பொருளை அறிஞர் எங்கட்கு விளக்கலானார். பாண்டியர் அரசோச்சும் தென்னாட்டில் செங்கோல் முறை சிறிதும் வழுவாதிருப்பதால், அந் நாட்டில் கொடிய வன விலங்குகளும், இன்ன பிறவும் ஏனைய உயிர்கட்குத் துன்பம் செய்யா என்பது இவ்வரிகளின் சுருக்கமான பொருளாகும். ஆனால், இவ்வரிகளைக் கோவலன் உரையாகக் கொண்டு இளங்கோ அடிகள் இங்குக் கூறக் காரணம் என்ன?

மதுரையை விரைந்தடையவும், வெம்மைக்குத் தப்பவும் இரவு நேரத்தில் காட்டுவழியில் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் செல்கின்றனர். இருள் வெங்கானத்தில் யாது தீமை நேருமோ என்று கண்ணகி அஞ்சுகிறாள், இதைக் கண்ட கோவலன், "நாம் செல்வது பாண்டி நாடு. செங்கோல் நிலை பெற்றுள்ள நாடு. கொடிய விலங்குகளும் இனியவே புரியும் நாடு. ஆகவே தீமை நேராது. அஞ்சற்க" என்று அமைதி கூறுகிறான். ஆனால், அந்தோ! அடுத்து நடப்பது என்ன? எந்தப் பாண்டிய நாட்டில் வன விலங்குகளும் தீமை செய்யா என்று கூறினானோ, அதே பாண்டிய நாட்டின் தலைநகரில் கோவலன் முறையின்றிப் படுகொலை செய்யப்படுகிறான். இம்முரண் பாட்டை நினைத்துப்பார்த்தபோது, கொலை வாளுக்குத் தலைவணங்கி நின்ற கோவலன் உள்ளமும் உயிரும் எவ்வாறு துடித்திருக்கும்?

இதை ஒரே ஓர் உவமையின் மூலந்தான் விளக்க முடியும். தீக்கனாக் கண்ட கலிபூர்ணியா தனது கணவன் சூலியசு சீசரை அன்று பாராளுமன்றத்திற்குப் போக வேண்டா என்று தடுக்கிறாள். அதே நேரத்தில் அங்குப் புருட்டசும் பிறரும் வந்துசேர்கின்றனர். தன் நண்பன் புருட்டசைக் கண்ட சீசர், "இதோ! என் இன்னுயிர் நண்பன் வந்துவிட்டான்; அவன் உடனிருக்கையில் என்னை யாதொரு தீங்கும் அணுகாது" என்று கூறிப் பாராளுமன்றம் செல்கிறான். ஆயின், ஐயகோ! சிறிது நேரத்தில் புருட்டசின் கைவாள் சீசரின் இதயத்தைப் பிளக்கிறது! "புருட்டசு! நீயுமா?" என்ற சொற்களுடன் சீசர் சாய்கிறான்.

ஓரிரு நாழிகைகட்கு முன்பு தன் உயிர்த் தோழன், தீமை அணுகாது காக்கும் துணைவன் என்று தன்னால் அன்புடன் மதிக்கப்பட்ட புருட்டசின் வாள் தன்னுடைய நெஞ்சில் பாய்ந்த போது சீசரின் உள்ளமும் உயிரும் எவ்வாறு துடித்திருக்கும்? அவ்வாறுதான் கோவலனும் துடித்திருப்பான்.

அறிஞர் சிதம்பரநாதனாரின் இவ் விளக்கத்தைக் கேட்ட எனக்கு மயிர்க் கூச்செறிந்து கண்கள் பனித்துவிட்டன. இந்நல்லாசிரியர் என் மனத்தில் நீங்கா இடம் பெற்றிருப்பதில் வியப்புண்டோ?

உ



வையை மணலிலும் பல்லாண்டு வாழ்க

கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் B.Com.,
இயக்குநர், மீனாட்சி ஆலைக்குழு, மதுரை.

★

பேராசிரியர் அ. சிதம்பரநாதன் அவர்களின் மணி விழாவை மதுரை மாநகர்ப் பெருமக்கள் மாண்புடன் கொண்டாட விழைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

சங்கம் இருந்து தமிழ் வளர்த்த பெருமை மதுரைக்குரிய தனிச்சிறப்பாகும். இக்கூடல் மாநகரைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டின் பண்டைய மன்னரும் மன்னர் பின்னோரும் தமிழ் அறிஞரைப் புரப்பதைத் தம் நற்பேறாகக் கருதினர். இத்தகு பெருமையுடைய நாடும் நகரும் அறிஞர் சிதம்பரனாரின் மணிவிழாவைச் சிறப்புற எடுத்தல் இயல்பே யாகும்.

பேராசிரியர் சிதம்பரநாதன் அவர்களைப் பாராட்டும் நாம், அதன் மூலம் அவருடைய அருந்தமிழ்ப் பணிக்கு, ஊக்கமளிக்கிறோம். கடந்த முப்பத்து ஐந்து ஆண்டுகளாக அவர் ஆற்றிவரும் தாய்மொழிப் பணி நாடறிந்ததாகும்.

அரசியல் பிணக்கும், கிளர்ச்சியும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில், ஏதேனும் ஒரு சிக்கலில் பலர் தடுக்குற்று விடுகின்றனர். எனினும், அறிஞர் சிதம்பரநாதன் அவர்கள், அத்தகைய இடர்ப்பாடுகளை உய்த்துணர்ந்து விலக்கி, நீர்ச்சுழலில் சிக்காமல் தோணியைச் செலுத்துவதைப் போன்று, தமது நற்றமிழ்ப் பணியை நடுநிலை நின்று இடையறாது புரிந்து வருதல் அவர் திறமைக்குத் தக்க எடுத்துக்காட்டாகும். மொழிக் கிளர்ச்சியின்போது, உணர்ச்சிப் பெருக்கால் மாணவர் கொதித்தெழுந்தபோது, அவர்களில் பலரை சினமாற்றிச் செந்நெறிப்படுத்திய பெருமை பேராசிரியர் சிதம்பரநாதனாரைச் சேரும். மாணவர் இளமைத் துடிப்பால் நெறி கடக்க முற்படுகையில், '' கடிதோச்சி மெல்ல எறியும் '' நற்பண்பைக் கடைப்பிடித்து, அறிஞர் அவர்கள் தமது பெரும் பொறுப்பை இனிது நடத்திச் செல்லுதல் வியக்கத் தக்கதொன்றாகும்.

மொழிப் பற்று, நாட்டுப் பற்று, இறைப் பற்று ஆகிய பண்புகள் சான்று, ஆராய்ந்த கல்வித் திறம் நிறைந்து, ஆட்சித் திறமை சிறக்கத் தமிழ்த் தொண்டும் உயர் கல்விப் பணியும் புரிந்து வரும் அறிஞர் சிதம்பரநாதன் அவர்கள் வையை மணலிலும் பல்லாண்டு எல்லா நலங்களும் இனிதெய்தி வாழ ஆலவாய் அண்ணல் அருள் புரிவாராக !

சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவரும், மேல் சட்டமன்றவுறுப்பினருமாகிய

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் M.A., Ph.D., அவர்கள்

தியாகராசர் கல்லூரி முதல்வராகப் பொறுப்பேற்று மதுரை வந்திருப்பது குறித்து மகிழ்ந்து

மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றத்தார்

8—8—65 ஞாயிறு பிற்பகல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கொண்டாடிய

பாராட்டு விழாவில்

மனமகிழ்ந்து படித்து வழங்கிய

வரவேற்பு

(இயற்றியவர் **பண்டித மீ. கந்தசாமிப் புலவர்**, தமிழாசிரியர், தூயமரியன்னை உயர்பள்ளி, மதுரை.)

ஆறுசீர் விருத்தம்

சீர்பூத்த சோணாடு விரிகடலா மங்நாட்டுத் திகழு மூர்க
ளேர்பூத்த முரள்களாங் குடமூக்கங் கிடம்புரியா மியம்பு மவ்வூர்ப்
பேர்பூத்த சான்றோரில் வலம்புரியா நின்பெற்றோர்ப் பேசி னின்று
தார்பூத்த வெமதுசிதம் **பரநாத !** நினைமுத்தாச் சாற்ற லாமால்.

எழுத்தறியார் தமைநோக்கி யிலக்கணமாக் கடலென்பே மென்றைக் கும்மே
வழுத்தவிர்போர்க் களங்காணார் தமைப்புகழ்ந்து புலியென்பேம் வல்லே மேனும்
பழுத்தபுலத் துணைப்புகழுந் திறனறியேம் புகழலுறின் பலநின் பண்பாம்
முழுத்தவியற் பரம்பொருளைப் புகழினது புகழ்ச்சியென மொழிய லாமோ.

பெரியனெனத் திகழமிர்த லிங்கமுடன் பார்வதியாம் பெண்டிர் தம்மிற்
பெரியளென வருதெய்வந் தருமறிஞ ! வுலகினிடைப் பிறங்கு நூல்கள்
பெரியவெலா நுனித்துணர்ந்த செம்மால்நீ நினக்கொத்த பெட்பிற் கற்பிற்
பெரியளெனப் புகழ்பெரிய நாயகியை மணந்திந்நாட் பிறங்கு கின்றாய்.

போற்றுதிருத் துளபம்போற் கருவினிலே நுண்ணறிவு பொருந்த லாலே
யேற்றமுறும் பீஏயில் மாநிலத்திற் செந்தமிழி லேவ ருள்ளுந்
தோற்றமுற முதன்மகனுத் தேர்ந்தமையின் ட்ரங்கிளினெனுந் துரையுந் தூய்மை
யாற்றலமை போப்புமெனு மறிஞர்பெயர்ப் பொற்பதக்க மடைந்தா யம்மா.

நல்லகலந் தனிற்பதக்க மணிபெரும ! சென்னைமா நகரத் தாங்கட்
பல்லகலைக் கழகத்துத் தமிழ்பயிற்று மாசிரியப் பணிமேற் கொண்டு
வல்லமுறை மூன்ருண்டி னதுமுடித்துச் செந்தமிழ்மேன் மயக்கத் தாலெஞ்
சொல்லரிய துயர்தீர நினதுள்ளங் கலைபயிலத் துணிந்த தாலோ,

வள்ளலண்ணு மலைதருபல் கலைக்கழகத் தெம்மேயாம் வகுப்பிற் கேட்போ
ருள்ளமுற வியம்பிடுபண் டிதமணிநா வலர்நாட்டா ருணர்வு மிக்க
வெள்ளமெனும் பாரதியா ரெனுமிவர்பாற் கலைபயின்று மேவி முன்னுட்
டெள்ளுதமி ழுலகுய்ய முதல்வகுப்பின் முதல்வனெனத் தேர்ந்தா யையா.

பெற்றவடன் குடல்விளக்கம் புரிகண்ண பிரானைப்போற் பேணி நீமுன்
கற்றகலைக் கழகத்தில் விரிவுரைசெய் யாசிரியக் கடமை தாங்கி
யுற்றதமிழ்ப் பேராசான் றமிழ்த்துறைசேர் தலைவனென வுயர்ந்து மேலுந்
துற்றபிற கீழ்த்திசையின் கலைத்தலைமை தானுகத் தொடரப் பெற்ருய்.

அகழுகடல் சார்தமிழ்நாட் டறிஞர்பல ரிருந்துநின தாற்ற லாலே
திகழுமப்பல் கலைக்கழகத் துணைவேந்தாய்ச் செயற்படுத்துஞ் சிண்டி கேட்டிற்
புகழுறப்பத் தோடெட்டாண் டுறுப்பாய்மற் றதுதன்னைப் பொருந்து ஹாஸ்டல்
நிகழுமிது செயவார்ட னெனத்துணையாய் நின்போல்யார் நிலவி ஞரே.

மன்னுபுகழ் இங்கிலந்து ஸ்காத்துலந்து முதலாக வயங்கு நாட்டிற்
றுன்னுபல கலைக்கழக நடைமுறையை யாராயத் தொடர்ந்து முன்னுட்
பொன்னுமிளிர் தருபிரிட்டிஷ் கவுன்சிலழைத் திடவங்கட் போயித் தாலி
யென்னுமத துடன்பிரான்சு ஸ்விட்சர்லாந் தெனுநாடு மேகி வந்தாய்.

அயன்மருவு மிலங்கைநின தகன்மனைக்கட் புறக்கடையா மடுத்துக் கீழ்பாற்
சுயன்மருவு விழிமாதர் நிறைபர்மா சிங்கப்பூர் காணே டைய
வயன்மருவு மலயமிவை நினக்கண்டை மாமனையா மாட்சி மிக்க
செயன்மருவு மிந்தியப்பன் னகரங்க ணீவாழுந் தெருக்கண் மாதோ.

சுரும்பிமிரும் பூம்பொழில்சூ ழுருஷியநா டகமகிழத் தூது சென்று
விரும்புமுறை யிந்தியப்பண் பெடுத்துரைத்திந் தியவரசை மேன்மை செய்தாய்
கரும்புநிக ராங்கிலமுன் கட்டிநிகர் தமிழ்ச்சொற்கள் காட்டிக் காட்டி
யரும்புமுழு முயற்சியினு லகராதி தனையுருவ மாக்கி யுள்ளாய்.

துயர்தவிர மாநிலத்திற் றமிழாசான் மார்முயன்று தோற்று வித்த
வுயர்கழகத் தலைமைகொடு தமிழகத்துப் புலவர்குழுக் குள்ளே வாய்ந்த
செயல்சிறக்குங் குழுத்தலைமை மேற்கொண்டு மேன்மன்றஞ் சிறப்ப நாளு
மயர்வுகொளா துறுப்பாகி யாசிரியர் குறைதீர்க்கு மண்ணு னன்றி.

மண்ணுலகிற் செந்தமிழி லறிவதற்கே துளதென்பார் மயக்கந் தீரத்
திண்ணமுறத் திருக்குறளாம் ஸ்டெதஸ்கோப்பை யவர்நெஞ்சிற் சேர்த்துத் தேர்ந்து
வண்ணமுற வமைதொல்காப் பியமருந்தி லிரண்டொருடோஸ் வடித்துத் தந்து
புண்ணியங்கொ ளொருடாக்ட ருனைப்போல வெவருண்டிப் புவியின் மீது.

உலகியலாற் கலையறிவான் மறுப்புரையா லாராய்ச்சி யூற்றத் தானன்
கிலகுமுடற் பொன்னிறத்தா லெடுப்பான தோற்றத்தா லேறு போல
நிலவுநடை யாலாட்சித் திறமையாற் சிக்கறுக்கு நிலைமை யான்மே
லலகில்பல நல்லியல்பாற் பலாப்பழநீ யலுவல்களீ யாவீ ராமே.

செந்தமிழ்த்தா யுறைவிடமா கியமதுரை மேன்மகனுந் தியாக ராச
னந்தமர்தங் களைகணுயர் கலைத்தந்தை தொழின்மன்ன னன்கு நோக்கித்
தந்தகலைக் கல்லூரி முதல்வனெனப் பொறுப்பெல்லாந் தாங்கி நீயே
வந்தமைகேட் டதும்பருத்தோ மனத்துவகை வளரவுடல் வளர்ந்தோ மின்று.

இங்கொருசொல் லுரைக்குதும்யாம் பேராவ லாற்றிறனை யினிதி னுய்ந்து
தங்குபுகழ்த் தில்லியர சொருகால மொருதுறையைத் தகவி னல்கத்
துங்கமுற நீயுஞற்றித் துலங்குகவென் பஃதெனவே சொல்லிப் பல்லாண்
டெங்குமுள பிரானருளை நினைத்துனக்கு வரவேற்போ டியம்பு கின்றோம்.

இங்ஙனம்,

தங்களன்புள்ள,

மதுரை

8-8-65

மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றத்தார்.

ஆன்ற புகழ் வாழி!

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர், M. A., Ph. D.,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

அறிஞரெலாம் போற்றுகின்ற தகவுடையான் என்றும்
ஆர்வமிகு புலவர்பால் அன்புடையான் குன்ருச்
செறிவுகொண்டு மாணவரைத் தன்னிடத்தே ஈர்க்கும்
சிறப்பார்ந்த ஆற்றலுமே நன்குடையான் சீர்த்த
நெறியினின்றே பிறர்தமக்கோர் எடுத்துக்காட் டாகி
நேர்மையினில் திறம்பாத பண்புடையான் கொண்ட
குறிமுறையும் அதைஎய்தும் திறப்பாடும் உடையான்
கொள்கைவழி அஞ்சாத நெஞ்சுடையான் காணே.

தமிழகத்தின் நல்வாழ்வே தன்னுளத்தே கொள்வோன்
தமிழ்மொழியின் நல்லுயர்வே தன்னுயர்வாக் கொள்வோன்
தமிழர்தம் இலக்கியமும் கலைவளமும் போற்றித்
தரணியெலாம் உணரும்வகை முழங்கிமிக மகிழ்வோன்
இமிழ்கடல்சூழ் உலகத்தோர் எய்தியுள்ள நலங்கள்
எந்தமிழர் எய்திடவே நாடுகின்ற உளத்தோன்
அமைவுறுநற் பேராசான் சிதம்பரச்சீர் நாதன்
அருந்திறலோன் பெருந்தகையோன் ஆன்றபுகழ் வாழி!

★

பண்டித-வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்.

திருக்குடந்தை நகர்வணிகர் குலத்தில் தோன்றிச்
செந்தமிழும் ஆங்கிலமும் தெளிந்த செம்மல்
உருக்கமுடன் திருமுறைகள் ஓதும் அன்பர்
உலகநா டுகள்பலவும் கண்டு வந்தோர்
தருக்ககன்று யாரிடத்தும் பழகும் நண்பர்
தகைபெறவே ஆட்சிசெயும் திறமை சான்றோர்
பொருத்தமிகு டாக்டர்சிதம் பரநா தப்பேர்
புனைந்துள்ளோர் புலவர்களுக் குதவி செய்வோர்.

வள்ளல்உயர் ராஜாசர் டாக்டர் அண்ணா
மலையரசால் நிறுவப்பெற் றவர்தம் மைந்தர்
தெள்ளுதமிழ் இணைவேந்தாம் முத்தை யப்பேர்ச்
செம்மலென்றும் காத்துவரும் கலைக்கோ யிற்கண்
உள்ளதமிழ்த் தலைவராய் இடைக்கா லத்தே
உயர்துணைவேந் தாய்எம்எல் சியாய்ச் சேர்ந்து
தள்ளரிய தமிழுடன்ஆங் கிலச்சொற் கோவை
தனைநிரல்செய் குழுவினுக்குத் தலைவர் ஆனோர்.

தென்றமிழ்க் கூடல் மாநகர் விளங்கச்
செயும்பல கலைத்துறை மல்க
நன்றறிந் துதவும் கருமுத்துத் தியாக
ராசனார் நலம்பெற நிறுவும்
வென்றிசேர் கலைக்கல் லூரியின் முதல்வர்
விரிதமிழ் உரைநடை நூல்கள்
ஒன்றிய சுவையோ டெழுதிய ஆசான்
ஒட்பமும் திட்பமும் உடையோர்.

இன்னபல சிறப்புற்ற சிதம்பரநா தக்குரிசில் இனிய வாழ்வு
மன்னுமனை யறச்செல்வி பெரியநா யகிஎன்னும் மங்கை நல்லார்
என்னுமிவர் இருமுப்ப தாண்டுநிறை மணிவிழா
இவண்கொண் டாடி
வன்னமயி லோனருளால் எல்லோரும் பாராட்ட மகிழ்ச்சி
கொண்டார்.

மணிவிழாக் கொண்ட மணமக்கள் ஆவோர்
அணிசேர்நூ றாண்டு விழாவும் – துணிவாகக்
கொண்டாடப் பெற்றுக் குவலயத்தில் நீடூழி
கண்டினிது வாழ்க கனிந்து.

பன்மொழிப் புலவர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L.,
துணைவேந்தர்
மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

செந்தமிழ்க் காவல் சிதம்பர நாதனார்
எந்தமிழ்போல் வாழ்க இனிது.

மகாவித்துவான் **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை**
சென்னை

நேரிசையாசிரியப்பா

மணிவிழாக் கொள்ளும் மாண்புசால் பெரியார்
அணியார் நூல்பல தணியாக் காதலின்
இருபெரு மொழிகளின் இயற்றி வள்ளுவர்
திருநெறி விளக்குஞ் செந்தமிழ்க் குரிசில்
வளவரே யாயினும் வரன்முறை வழுவின்
உளம்பொரு தவரை ஒல்லும் வகையான்
'நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டெனல் தேர்ந்து
தகும்வகை தெருட்டுந் தகைமையர், பற்பலர்
தொகுமவை மகிழத் தோற்றப் பொலிவுடன்
சொற்பொழி வாற்றுந் தோன்றல், எதனையும்
பொற்புற முடிக்கும் புகழ்மிகு செம்மல்,
நட்டார்க் கினியர், நகைமுக நயத்தர்,
பட்டாங் கெதனையும் பகரும் பாவலர்,
'தண்டமிழ் காவலர், டாக்டர்' எனுஞ்சீர்
கொண்டொளிர் கீர்த்தியர், குணசா கரனர்
சட்ட சபைதனில் தமிழ்மொழிக் கென்றும்
முட்டுநே ராவகை முயன்றுதொண் டாற்றித்
'தமிழ்கா வலர்'எனுந் தகுதியை நிலைநிறீஇ
அமிழ்தினு மினியநந் தமிழ்க்கணி செய்பவர்,
செந்தமிழ்ச் செல்வராஞ் சிதம்பர நாதர்
பல்வளங் கொழிக்கப் பாரினிற் சிறந்து
பொலிக ! பொலிக ! பொலிக !
மலிபுகழ்ச் சொக்கன் மாணருள் பெற்றே !

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையவர்கள்

துணைத்தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்
(இருப்பு : மதுரை)

செந்தமிழ்ச் செல்வர் ஆங்கிலப் புலமை
சிறந்தவர் சிவபெரு மான்றன்
அந்தளிர்க் கமலப் புதுமலர் நிகர்க்கும்
அடியிணை பரவுமெய் யன்பர்
மைந்துசே ருளத்தர் குடந்தையின் வேளாண்
வணிகர்தம் மரபினில் வந்தோர்
முந்துறும் அமிர்த லிங்கவேள் பயந்த
முதன்மகற் கிளையமு தறிஞர்.

மன்னவர் அண்ணா மலைவள்ளல் நிறுவும்
வளர்பெறும் பல்கலைக் கழகம்
தன்னில்மா ணவராய்ப் பயின்றது முதலாத்
தலைவராய் ஆட்சிசெய் காறும்
மன்னிய பதவி பலவும்பெற் றிதன்மேல்
வகிப்பதற் கிங்கிலை இடமென்
றுன்னியே சென்னைச் சட்டமே லவையின்
உறுப்பின ராய்த்திகழ் உரவோர்.

மாநகர் மதுரை வளமுறச் செய்யும்
வணிகர்தங் கோகலைத் தந்தை
பாநய முணர்ந்து சுவைப்பயன் கொள்ளும்
பண்புடை யோர்கொடை வள்ளல்
தேனினும் இனியர் கருமுத்துத் தியாக
ராசனுர் செவ்விதின் அமைத்த
மேன்மைசேர் கலைக்கல் லூரியின் முதல்வர்
வியன்றமிழ் காவல ராவோர்.

பேர்வளர் அறிஞர் சிதம்பர நாதர்
பெட்புற மனையறம் புரக்கும்
சீர்திகழ் பெரிய நாயகி என்னும்
திருமிகும்இருவரும் நன்ருய்
ஊரவர் மகிழக் கற்றவர் செல்வர்
உறவினர் நண்பர்கள் வாழ்த்தத்
தார்புனை இருமுப் பதுநிறைந் துள்ளம்
தழைத்திடும் மணிவிழாக் கொண்டார்.

ஆறுபத் தாண்டு நிறைமணி விழாக்கொண்
டாடிய நன்மண மக்கள்
நூறுபத் தாய பிறைகண்ட பின்னர்
நுவல்பெரு விழாவுங்கொண் டாடி
ஆறுபற் றியசெஞ் சடையண்ணல் கயற்கண்
அம்மையார் அருளினுல் உலகில்
ஊறுபற் ருத நலமெலா மெய்தி
ஊழிநாள் வாழியர் உவந்தே.

பைந்தமிழ்ப் பாவலர் அ. கி. பரந்தாமனுர், M.A., சென்னை

திருவும் கலையும் நடனமிடும்
சிறப்பார் மதுரை நகரிலுறுந்
தியாக ராசர் கல்லூரி
திகழ நடத்தும் நற்றலைவர்
மருவும் சென்னை மேல்சபையில்
மக்கள் குறைகள் எடுத்துரைப்போர்
மன்னும் தமிழின் பெருமையினை
மேல்நா டுற்றுப் பரப்பியவர்
விரும்பும் பண்பின் நிறைவாளர்
வியக்கும் படிநல் லகராதி
வேலை முடித்துப் புகழ்கண்டோர்
வேக மின்றி ஆட்சிசெய்வோர்
கருதும் குடந்தைச் சிதம்பரனுர்
கலையில் வல்ல துணைவியுடன்
கடவுள் அருளால் நீடூழி
கலைத்தொண் டாற்றி வாழியவே!

பெரும்புலவர் க. வெள்ளைவாரணனார்,
தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

சென்னிவளர் மதியணிந்த சிவபெருமான் திருவடியின்
மன்னியபே ரன்புடனே வளர்சைவத் தமிழ்க்குடியில்
நன்னலஞ்சேர் தமிழ்வளர்க்கத் தோன்றிவளர் நாவலன்காண்
பன்னுபுகழ்ச் சிதம்பரநா தப்பெயர்கொள் பாவலனே.

ஆங்கிலமுஞ் செந்தமிழும் அடைவுபெறப் பயின்றுலகில்
ஓங்கியபல் கலைவளர்க்கும் உணர்வுடைய பேராசான்
தீங்குகரு தாதமனச் செம்மையினான் திருவாளன்
பாங்கினுளா ரியல்பறிந்து பழகிடுநற் பண்புடையான்.

கல்விநிறை தரும்அண்ணா மலைவளர்பல் கலைக்கழகச்
செல்விதரும் பேரறிஞன் சிதம்பரநா தன்எனவே
நல்லறிஞர் பாராட்ட நற்றமிழ்க்குப் பணிபுரிவான்
தில்லையிறை யடிமறவாத் திருவுடைய சிந்தையினான்.

தமிழகத்துச் சட்டமன்றத் தகுதிபெறும் உறுப்பினனாய்
அமிழ்துறழுஞ் செந்தமிழும் ஆசிரியப் பெருங்குலமும்
இமிழ்திரைநீர் ஞாலத்தில் ஏற்றமுறத் தரும்பணிகள்
அமைதியுடன் நிறைவுபெற ஆற்றியநற் புகழாளன்.

அருந்தமிழோ டாங்கிலத்துக் ககரநிரல் வகுத்தமைத்தான்
பெருந்தமிழன் கலைத்தந்தை தியாகரா சன்பேணத்
திருந்தியசீர் மதுரையினிற் றிகழ்கின்ற கல்லூரி
பொருந்துமுயர் தலைவனிவ னெனத்திகழும் பொலிவுடையான்.

கலைவளர்பல் கலைக்கழகத் தலைவனிவ னெனவமர்ந்து
நிலையுடைய பணிபுரியும் நேர்மையுடன் அறிவாற்றல்
நலமுடைய சிதம்பரநா தன்பால்நன் கமைந்தவென
உலகிலுளார் பாராட்டும் ஒப்பற்ற பெருங்குணத்தான்.

நற்றமிழர் தவப்பயனும் சிதம்பரநா தப்பெரியோன்
பொற்புடைய மணிவிழாப் புலவரெலாம் போற்றிசைப்பச்
சுற்றமுடன் நீடூழி வாழ்கவெனத் தூயதமிழ்
நற்றவர்கள் வாழ்த்துரைப்ப நலம்பெருக வாழியவே.

பேராசிரியர் டாக்டர் மொ. அ. துரையரங்கசாமி, M.A., Phd.,
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

நேரிசை வெண்பா

அறுபதாண் டெல்லை அருந்தமிழ்க்குத் தொண்டு
மறுவின்றிச் செய்துயர்ந்த மாண்பன் — மறுபடியும்
நண்பன் சிதம்பர நாதன் அறுபதாண்டு
பண்புடன் வாழ்க பணிக்கு.

வித்துவான்-தவத்திரு-இராமசாமி அடிகளார்,
முதல்வர்,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி
பேரூர், கோவை-10.

ஆறுசீராசிரியவிருத்தம்

மறைமலை யடிகள் அன்பு மணியெனும் திரு.வி. க.நல்
நிறைவுடைப் புலவர் பின்றை நிலைபுகழ் தமிழ்ச்சீர் தேர்ந்து
கறைபடாத் தமிழி னாக்கம் தான்சிதம் பரநா தப்பேர்
உறைபுகழ் செம்மல் வாழ்க உயர்மணி விழாவை ஏற்று.

செந்தமிழ்ப் புலவ ரேறு; திருத்தகு செஞ்சொற் செம்மல்;
நந்தமிழ் மரபு போற்றும் நாவலன்; பாவல லோரும்
சிந்தனை செய்ய நூலில் திட்பமும் நுட்பந் தானும்
தந்தனை வருக்கும் இன்பத் தமிழ்எனும் தேனை வார்ப்போன்.

நாட்டுக்கும் நமக்கும் தேவை நல்லன புரிதல்; வீணே
கேட்டுக்காம் செயல்செய் கீழோர் செருக்கறுத் திடுதல்; சங்கப்
பாட்டுக்கும் சமயச் சான்றோர் பாடற்கும் இனிதே மக்கள்
கேட்டுவப் புறவி ளக்கம் கிளத்துதல்; தொழிலாக் கொண்டோன்.

இளைஞர்தம் முளத்தில் அன்பார் இன்தமிழ் விளைத்துச் சால்பு
விளைதரு நிலனாய்க் கல்வி மேம்படச் செயல்செய் தென்றும்
இளைத்திடாச் சிதம்ப ரப்பேர் இசைதரு நாதன் அன்பால்
வளைத்தனை வருமே போற்ற மலர்முகத் தினிதே சொல்வோன்.

ஏற்றிடு மணிவி ழாவில் இளமைசேர் வளமை யோங்கி
நேற்றன்று நாளை மேலா நிகழ்கலை யாக்கந் தந்தே
போற்றிடு பண்பால் அன்பு பொலிதரு துணைவி யோடு
நாற்றிசை போற்றச் செவ்வேள் நல்லருள் பெற்று வாழி.

மணிவிழாக் காணும் மன்னர்

அ. ஜெகதீசன், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், வ. உ. சிதம்பரனுர் கல்லூரி, தூத்துக்குடி-3.

குறிஞ்சிப்பூ! வாடாத கோட்டுப்பூ! எதிர்பார்த்த
கொண்டாட்டப் பொன்விடிப்பு!
கூடிவரும் கனிவைப்பு! குறிக்கோளின் நிறைகாப்பு!
கொள்கையஞ் செயல்திறத்தை
அறிந்துவரும் புகழ்ச்சேர்ப்பு! முறையான தொண்டினுல்
அறுபதாண் டளவும்அன்பில்
அருளார்ந்த பண்புடன் உருவான அத்திப்பூ!
அன்னைநற் றமிழ்கொடுத்த
திறந்திரண் டெழுந்துநேர் அறந்தாங்கி நின்றதோர்
தெய்வீகப் பயனிருப்பு!
திருவள்ளு வர்குறள் செய்ந்நன்றி முறைத்தீர்ப்பு!
தேடிவரும் பெருமையெல்லாம்
செறிந்ததோர் சிறப்புநாள் தீராத சிரிப்புவான்
செந்தமிழ்க் காவல்போற்றும்
சிதம்பர நாதனின் மணிவிழாத் திருச்செய்தி
தித்திப்பு! கலைப்படைப்பு!

நீடுதோன் றினியராய் நெஞ்சில்நிறை வாரென்னும்
நெடுநின்ற உருவும்மானம்
நிலைத்ததோ எனுமாறு நிமிர்ந்தநேர் நடையும்மேல்
நினைத்திடும் கலைகளெல்லாம்
கூடுசேர்ந் திருத்தற்குக் குறியீடு நெற்றியும்,
கொள்கையில் பகைமைகொண்டோர்
கூட்டோடு சுருண்டிடுவர் என்றுகுறிப் பிடும்சுருள்
கொண்டொதுங்கு முடியும்நெஞ்சில்
மூடுவோர் கருத்தையும் முன்னறியும் கண்களும்,
முறைகாக்க வந்தமர்ந்த
மூக்குக்கண் ணுடியும், முந்திடும் முறுவலும்,
மூச்செனும் தாய்த்தமிழ்க்குப்
பாடுநேர் கின்றதெனில் பதைத்தெழு புருவமும்,
பாட்டுமொழி பொழியும்நாவும்
பதிந்ததிரு மேனியில் சதிராடும் பொலிவினைப்
பார்த்துயிர் வாழலாமே!

அண்ணுமலைக்கழகப் பொன்னம்பலத்தினில்
ஆடிய தில்லைநாதன்!
அனைத்துலக மொழிக்கெலாம் ஆசிரிய னேஎன்ன
அகராதி தந்தவள்ளல்!
கண்ணுன செந்தமிழைக் கடல்கடந் தும்சென்று
கால்கொளச் செய்தஅண்ணல்!
கலை,கல்வி பண்பாட்டின் நிலையான தூதுவன்!
கண்கண்ட தலைவன்முன்னே
விண்ணேடும் வந்து,நடு விலகுதல் வேண்டினும்
விதிமாறிச் சாய்ந்திடாத
விளைந்தமதித் தென்னவன்! கலைத்தொழில் முன்னவன்!
வேளைபார்த் தென்றும்யாரும்
எண்ணுமுன் தமிழுக்கு முன்னின்று தொண்டாற்றும்
இதயமாம் தியாகராசர்
எழிற்கலைக் கல்லூரிக் கொருதனி முதல்வனே!
என்னையா ளுடையஐயன்!

பல்கலைக் கழகங்கள் பலகண்ட பெருவேந்தன்!
பதிவாகப் பொறுப்புநேரின்
பருவமழை போல்வந்து பணியாற்றும் மாண்பினன்!
பைந்தமிழ்ச் சிலம்புணர்ந்து
சொல்லியல் முத்துமழை சொரிகின்ற பாண்டியன்!
சொந்தமாய் மற்றவர்க்குச்
சோர்வின்றி ஆதரவு நேர்நின்று தருகின்ற
சோழன்! ஓர் கடமைவீரன்!
இல்லற மாண்பினில் வள்ளுவர் வாய்மொழி
இயைந்திசைத் தமிழ்முகிழ்க்கும்
இனியசொல் தந்தெழில் ஓவியக் கலையறிந்(து)
எத்துறையும் தொண்டியற்றும்
கல்வியின் பெரியநா யகிஎன்று பெயர்கண்ட
கண்ணகியின் இதயநாதன்
காலமெல் லாம்விழாக் காணவே நற்றமிழ்க்
கவிதைபோல் வாழ்க! வாழ்க!

நெருப்பென்ன நின்ற நெடுமால்!

வல்லை-பாலசுப்பிரமணியம், B. A.,
தமிழக அரசுத் தலைமைத் தமிழ்மொழி பெயர்ப்பாளர்
நூற் பதிவாளர் (ஓய்வு)
சென்னைப் பல்கலைக்கழக
ஆங்கிலம்-தமிழ் சொற்களஞ்சியத் துணை ஆசிரியர் (ஓய்வு)
சென்னை மாணவர் மன்றப் பொருளாளர்.

விருப்பு வெறுப்பொன் றில்லாமல்
 விழுமிய நூலின் திறன் ஆய்வான் ;

கருத்தைக் கவரும் பேச்சாளன் ;
 கலங்கா நெஞ்சத் தொருமுனைவன்* ;

தருக்கி னோடு செந்தமிழைத்
 தாக்கு வோர்கள் தம்வயிற்றில்

நெருப்பைக் கொட்டும் சீற்றத்தான் ;
 நேரி லாச்சிதம் பரநாதன்.

(* முனைவன் — டாக்டர்)

பெரியநாயகியோடு வாழ்க !

வ. பா. தாமரைக்கண்ணி,
சென்னை மாணவர் மன்றத்தின்
முன்னாள் தலைவியார்,
இந்நாள் செயற்குழு உறுப்பினர்.

திங்கள் அன்ன முகத்தழகும்,
தித்திக் கும்இன் சொல்லழகும்,

பொங்கு சிரிப்பின் பேரழகும்,
பொன்னின் சோதி உருவழகும்

தங்கி நிற்கும் திருவாளன்
தலைவ னும்சிதம் பரநாதன்

எங்கள் பெரிய நாயகியோ
டென்றும் வாழி ! வாழியவே ! !

திருமுறைக் கலைஞர்
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
தமிழகப் புலவர் குழு, திருச்சிராப்பள்ளி

நேரிசையாசிரியப்பா

பொன்னி வளந்திகழ் புதுப்புனல் நாட்டுச்
சென்னி புரந்த சீர்சால் சோழ
மண்டல மதனில் மாண்புடன் விளங்கும்
கொண்டல் அளாவும் குடந்தை நகர்தனில்
செந்தண்மை பூண்ட செவ்விய குடியில்
அந்தமில் புகழான் அமிர்த லிங்கச்
செட்டியார் செய்த செழுந்தவப் பயனுய்
மட்டிலாக் குணவதி மாதுபார் வதியின்
அருந்தவப் புதல்வனுய் அவதரித் திட்ட
திருந்திய நல்லெழில் தினகரன் அனையோய்!
சிதம்பர நாதச் செட்டியார் என்ன
நிதம்பல சான்ருேர் நின்பெயர் கூறச்
செந்தமிழ் பயின்ற சீர்த்தி அதனுல்
'செந்தமிழ் காவலர்' என்னச் சிறந்தோய்!
'முன்பனிக் காலம்' முகிழ்த்த காலையும்
தன்பணி என்றும் 'தமிழோசை' என்றே
அயரா துழைக்கும் அருந்தமிழ்ப் புலவோய்!
அறிவின் தெளிவும் ஆற்றலும் கல்விச்
செறிவும் சொல்லின் செம்மையும் ஓங்கிய
திட்பமும் நேர்மையும் தெளிந்தசொல் வன்மையும்
உட்பகை போக்கும் உறுதியும் கொண்டோய்!
மண்ணேர் புகழுமண் ணுமலை வள்ளல்
ஆக்கிய பல்கலைக் கழகம் அணிபெற
ஊக்கிய தமிழ்த்துறைத் தலைமை உற்றும்
துணைவேந் தாகத் துகளிலாத் தொண்டு
பன்னுள் புரிந்தும் பசுந்தமிழ் வளர்த்தோய்!
சட்ட மன்றினில் இட்டமாய் அமர்ந்தும்
தமிழ்ப்புல வோர்க்குத் தலைவ ணுகியும்
தணிவிலாப் புகழால் தமிழ்த்தொண் டாற்றியும்
'மணிவிழா'க் கொண்ட மாட்சியின் மிக்கோய்!
ஊழிதோ றூழி உவப்புடன்
ஆழிசூ ழுலகில் வாழிநீ பெரிதே.

பி. ஜி. கருத்திருமன், B.SC., M.L.A.
எதிர்க்கட்சித் தலைவர்,
தமிழ்நாட்டுச் சட்ட மன்றம்.

கல்லாத மக்கள்வாழ் உலகந் தன்னில்
கற்றவரும் மிகச்சிலரே; குற்றம் நீக்கிச்,
சொல்லாத கருத்தெல்லாம் பதியப் பேசும்
துறைபோன கல்வியாளர்; கேள்வி ஞானம்
வல்லதாக வழங்கிடுவார்; வாய்மை நேர்மை
வாழ்க்கையிலே கடைப்பிடிக்கும் குறிக்கோள் [பூண்டார்
எல்லாமாய்த் தமிழறிந்தார் பழுத்த கல்வி
எடுத்துரைக்கும் நுண்ணறிவுத் தெளிவு மிக்கார்.

பொருள்சேர்த்தல் மிகக்கடினம்; பெற்ற தெல்லாம்
பூரணமாய்ச் சேமித்தல் முற்றும் தொல்லை;
அருளுடனே அதைவழங்கல் அத்தி பூத்தல்;
அறவாழ்வு வாழ்ந்திடுவார் அருமை நண்பர்;
மருள்நீக்கும் மனவளமும் மக்கள் வாழ்வை
வளம்படுத்தும் நிர்வாக ஆட்சி மிக்கார்;
உருள்ஆட்சி மேல்சபையில் உயர்ந்தா ராக
உயிர்சிறக்கப் பயிர்சிறக்கக் கருத்துச் சொல்வார்.

செட்டிநாட்டுச் செல்வகலைக் கூடந் தன்னில்
செம்மையாய்ப் பணியாற்றி வேந்த ராகப்
பட்டமளி புகழ்பட்டார்; சிதம்ப ரத்தில்
பக்திமிகு சிதம்பரனைப் பாரோர் தேர்வர்;
எட்டுபுகழ் மதுரையிலே முதல்வ ரானார்
இன்றமிழைப் பெருக்கிடுவார்; இளமை தொட்டே
ஒட்டியஎம் பண்பாளர் தொடர்பு வாழ
உவகையுடன் மணிவிழாவில் வாழ்த்து கின்றேன்.

பேராசிரியர் C. யோகசுந்தரம், M. A., L. T.,
தமிழ்த்துறைத் தலைவர்,
ஊரீசு கல்லூரி, காட்பாடி.

எண்சீராசிரிய விருத்தம்

செந்தமிழில் புலமைமிகு செல்வம் ஒன்றே
 சிறப்புடைய வாழ்வுதரும் என்றே கண்டோன்
அந்தமிழாம் கடல்மூழ்கி ஆங்கி லச்சொல்
 அருந்தமிழால் அகராதி ஆக்கித் தந்தோன்
சந்தமுறுந் தில்லைநகர்க் கூத்தன் தாளைத்
 தகவுடனே தொழுகின்ற சிந்தை யுள்ளான்
வந்தபெருஞ் சைவகுலத் திலக மாவான்
 மகிழுசிதம் பரநாதன் வாழ்க நன்றே !

தமிழகத்தில் விளங்குபெரும் புலவர்க் கெல்லாம்
 தனிப்பெருமை மிகுந்திடுநற் றலைவ னுவான்
அமிழ்தமெனும் தமிழகத்தின் சட்ட மன்ற
 உறுப்பாகி அரும்பணிகள் பலவும் செய்வான்
கமழ்கின்ற கலைமணமே விளங்கு கின்ற
 கருத்துடைய நூல்பலவும் யாத்துத் தந்தான்
தமிழ்த்தலைவன் கல்லூரித் தலைமை சான்றுன்
 சாற்றுசிதம் பரநாதன் வாழ்க நன்றே !

ஆங்கிலமும் அருந்தமிழும் அனைத்துங் கற்றே
 அளியாரும் சிந்தையினில் ஒளியும் பெற்றுப்
பாங்குடனே வாக்கினிலே தெளிவுங் கொண்டு
 பரிவுடனே அவனியற்றும் நூல்கள் கண்டால்
ஈங்கெவர்தாம் நிதம்புகழ்ந்து பேச எண்ணுர் ?
 எழிலாரும் தமிழ்ச்சுவையை நுகர எண்ணுர் ?
ஓங்குசிதம் பரநாத னென்னும் மேலோன்
 உயர்வுடனே பல்லாண்டு வாழ்க நன்றே !

எங்கெல்லாம் தமிழ்ப்புலவர் இடரே உற்று
ஏற்றதொரு நலிவெய்தி யுள்ளா ரென்றால்
அங்கெல்லாம் விரைந்தேகி அவற்றைப் போக்கும்
அருங்குணத்தோன் மருந்தனையான் அண்ண லாவான்
பொங்கியசீர் மணிவிழாஅக் காணு மெங்கள்
புண்ணியமே நற்பேருக் கருது கின்றோம்
மங்கையொரு பங்கனருள் பெற்றே நாளும்
வளஞ்சிறக்கப் புகழ்மணக்க வாழ்க நன்றே!

ஒன்றல்ல பத்தல்ல நூறு மல்ல
உயர்கின்ற ஆயிரத்திற் கப்பாற் பட்ட
துன்றுபல எண்ணுடைய மாண வர்க்கே
தூய்மைசெறி அறிவூட்டி வாழச் செய்தான்
இன்றுமணி விழாவதனைக் காண்ப தெங்கள்
இருகண்கள் பெற்றபெரும் பேறே யாகும்
மன்றமதில் நடமிடுவோன் அருளி னாலே
வளந்திகழப் பல்லாண்டு வாழ்க நன்றே!

ஆரார்தாம் இவன்புகழைப் பேசா தாரே
ஆரார்தாம் கவியழகைப் புகழா தாரே
ஆரார்தாம் திறமதனைப் பகரா தாரே
ஆரார்தாம் நுண்ணறிவை நுகரா தாரே
ஆரார்தாம் சொற்பொழிவைச் சுவையா தாரே
ஆரார்தாம் கட்டுரையைப் போற்றா தாரே
ஆரார்தாம் தோற்றத்தால் உருகா தாரே
ஆன்றசிதம் பரநாதன் வாழ்க நன்றே!

எல்லாரும் புகழ்கின்ற செல்வத் தோடே
ஏற்றபல வளமாரும் வாழ்வும் பெற்றுச்
சொல்லாரும் கவிவளமும் கருத்தும் நல்ல
துலங்கிடுசீர்க் கலைவளமும் பொலிய ஓங்கி
மல்லாரும் வாழ்க்கைக்கோர் துணையாய் நின்ற
மனைவியுடன் மணிவிழாஅக் கண்டு நாளும்
வல்லநடம் புரியுமரன் அருளி னாலே
மகிழுசிதம் பரநாதன் வாழ்க! வாழ்க!!

மூதறிவின் செல்வர்

திருவாட்டி தே. தியாகராசன், M. A.,
தமிழ்ப் பேராசிரியர்
இந்திய மொழித்துறைத் தலைவர்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-2

எண்சீராசிரிய விருத்தம்

தித்திக்கும் தீந்தமிழின் தேனமுதை அள்ளித்
தெவிட்டாது சுவைத்திடவே தெளிவாகக் கண்டார்
முத்தமிழைப் போற்றிமிக முழக்கமிட்டுப் பாடி
மூதறிவின் செல்வரென முன்னோங்கி நின்றார்
எத்திக்கும் புகழ்மணக்க இருந்தமிழின் ஆற்றல்
எடுத்தியம்பி வெளிநாட்டார் இதயத்தை ஈர்த்தார்
தத்தியோடும் சிற்றோடைத் தண்சிரிப்புக் கொண்டார்
தரமான உயர்வாளர் தானிமிர்ந்து நின்றார் !

செயலாற்றுஞ் செம்மலெனச் சிந்தனையின் சிற்பி
சீர்மிகுநற் பண்பாளர் சிறப்புடையார் நல்லார் ;
நயமாகப் பணிசெய்து நானிலத்தார் உள்ளம்
நாடிடவே நடந்திடுவார் நன்மைபல செய்வார் ;
பயம்வேண்டா விடந்தன்னைப் பாரோர்க்குக் காட்டிப்
பரிந்துளமே வேண்டுங்கால் பாரித்தே ஈவார்
அயலாரும் அண்டிடிலோ அன்பாகப் பேசி
ஆமுதவி அளித்திடுவார் அடைந்தோரும் பல்லோர்.

அம்மையார் கலையுள்ளம் ஆர்வமுடன் பேணி
அவர்க்கான நற்றுணையாய் அமைந்தாரே கண்டோம்
செம்மையாய் அகரமுதல் செய்ததுவும் உண்டே
சீர்தூக்கி எண்ணுங்கால் செந்தமிழர் ஏற்றம்
தம்மையே எண்ணிடுவார் தளராத ஊக்கம்
தனித்தியங்கும் உளஉரமும் தக்கனவே நாடிச்
செம்மாந்து வாழ்ந்திடவே செய்திறமும் பெற்றார்
செழித்தோங்க எழில்நலன்கள் சீர்மையாய்ச் சேர்க.

வித்துவான் பூசை. ஆ. நமச்சிவாய முதலியார்
செங்கற்பட்டு

ஆறுசீராசிரிய விருத்தம்

உலகொளிர் மலைகள் தம்மில் உயர்மக மேரு வென்ன
விலைமதிப் பில்லா ஒன்பான் மணியிற்செம் மணியே யென்ன
அலகில்பேர் ஒளிகள் தம்மில் அவிர்கதிர்ப் பரிதி யென்னத்
திலகம தாக வந்த சிதம்பர நாத! வாழி.

பல்கலை யறிவும் மேலாம் ஒழுக்கமும் பண்பும் பெற்றீர்
சொல்வளம் சிறக்கப் பெற்றீர் சுத்தமா மனமும் பெற்றீர்
எல்லையில் தமிழ்மொ ழிக்கே எழிற்பணி மிகவும் செய்தீர்
நல்லமாச் சேவை யெல்லாம் நற்றமி ழர்க்காச் செய்தீர்.

செப்பருந் தமிழ்க்குத் தாயாம் மதுரையிற் சிறப்பு மிக்க
ஒப்பிலாத் தியாக ராசர் உயர்கலைக் கல்லூ ரிக்குத்
திப்பியத் தலைவ ராகிச் சீர்எம்.எல். சி.யு மாகி
வைப்பெனத் தமிழர்க் குற்ற வாய்மையீர்! வாழி! வாழி!!

தண்டமிழ்க் கலைகள் கற்றுத் தாவில்நா வளமும் பெற்றுப்
பண்டரு பாடல் தேர்ந்த பாவலர் முதலோர் போற்ற
எண்டரு கொண்டல் போல இணையில்சொல் மாரி பெய்யும்
வண்டமிழ்ப் புலவ ரேறே! வாழ்கவிக் குவல யத்தில்.

முப்பதிற் றிரட்டி யாண்டு முழுநிறை வெய்து கின்ற
ஒப்பிலாக் கருணை வள்ளால்! உணர்ந்தவர் போற்றுங் கோவே!
அப்பணி சடையோன் பாகத் தம்மையார் அருளி ஞலே
இப்புவி வியக்க மேலாய் இன்னும்பல் லாண்டு வாழி.

காவலனே! - மொழிப் பாவலனே!!

கவிஞர் அரு. சோமசுந்தரன், M.A., B.T.,
தலைவர், இராமநாதபுர மாவட்டத் தமிழாசிரியர் கழகம்.

★

கல்வித் துறையினில் தேர்ந்தவ னேதமிழ்க்
காவல னே! மொழிப் பாவலனே!
செல்வி விழைந்திடும் செந்தமி ழால்பணி
செய்தவ னே! பகை கொய்தவனே!
ஒல்லும் வகையெலாம் ஒண்டமிழ் காத்திட
ஓடினை யே! புகழ் சூடினையே!
வெல்லும் வகையினில் தமிழினத் தைநீ
வென்றனை யே! புகழ் கொண்டனையே!

மண்ணில் ஒருபிடி நீஎடுத் தால்அது
மலையா கும்! கலைச் சிலையாகும்!
தண்ணீர் ஒருதுளி நீஎடுத் தால்அது
தமிழ்பே சும்! மொழி மணம்வீசும்!
கண்ணின் கடையொளிப் பார்வையி லேதமிழ்
காட்டுகி றாய்! பகை ஓட்டுகிறாய்!
உண்ணின் றுளிருமுன் தமிழுணர் வேஇவண்
ஊற்றெடுத் தால்தமிழ்க் காற்றடிக்கும்!

முன்னாட் புலமை கொண்டவ னேதமிழ்
மூதறி ஞபெரும் வாதறிஞ!
இந்நாட் புதுமை கண்டவ னேதமிழ்
ஏடெடுத் தோய்! பழங் காடழித்தோய்!
பன்னூல் தெளிவுறக் கற்றவ னேசிதம்
பரநா த!எம் குருநாத!
நன்னூல் பலபல படைத்திடு க! தமிழ்
நாடுய ரும்! மொழி ஏடுயரும்!

கவிதை நிறைந்திடும் கனிதமிழ் மொழியினைக்
காத்தத னால்புகழ் பூத்ததுவே!
புவியில் மேகம் பொழிவது போலநீ
போற்றினை யேதமிழ் சாற்றினையே!
கவியில் உனைநான் வாழ்த்துகி றேன்நன்றிக்
கைகுவித் தேன்தமிழ் மெய்சிலிர்த்தேன்!
புவியில் தமிழர் ஞாயிறு போல்நீ
பொலிந்திடு க! வளம் மலிந்திடுக!

வித்துவான் கோ. வே. பெருமாள், M.A., B.T.,
பெ. கனகதானு அம்மா
களக்காடு
நெல்லை மாவட்டம்

இன்றுள்ள பெருந்தலைவர் எவரும் போற்றும்
ஈடற்ற செந்தமிழின் காவல் தந்தை ;
நன்றுள்ளும் **அறிஞர்சிதம் பரநா தப்பேர்**
நற்றமிழர் வாழ்வுக்கே நல்ல தொண்டர் ;
என்றுமுள பைந்தமிழின் ஏற்றங் காணும்
இனியபேர் ஆசிரியர் ; கல்விச் செம்மல் ;
கன்றுள்ளும் ஆவனைய கடமை வீரர்
காணுமணி விழாவுற்றே வாழி நன்றே.

வெண்பா

செந்தமிழ் காவலரே ! தேர்ந்தநூல் வல்லுநரே !
நந்தமிழ்நா டென்றும் நலனுறவே — வந்தீர்
சிதம்பர நாதரே சீர்பெற்று நாளும்
இதமுறவே வாழ்க இனிது.

தி. பொ. நாராயணசாமி பாரதி

உத்தமபாளையம்

வெண்பா

செந்தமிழ்த் தாயீன்ற செம்மலே செந்தமிழர்
சொந்தத் தலைவனே! தூயதமிழ்க் — கந்தார்
சிதம்பர நாதனே! சீரும் சிறப்பும்
நிதம்பெறுக நீணிலத்து நீ.

அஞ்சாமை நீதி அறமிகுந்த சான்ருண்மை
நெஞ்சார நேசித்தல் நேர்ந்தவர்க்கு — நெஞ்சாலும்
தூய நினைத்தல் சொலல்செய்தல் என்பவையே
ஆய சிதம்பரநா தன்.

கோவைத் தமிழ்ப்புலவர் கூடியுள மாநாட்டில்
பாவை விளக்கிப் பணிபுரிவோர் — தேவைக்குச்
சம்பளத்தைக் கூட்டுகென்று சர்க்காரைக் கேட்டிட்ட
நம்பி சிதம்பரநா தன்.

சைவமும் தீந்தமிழும் தாரணியில் ஓங்கிடவே
மொய்க்கின்ற மூடப் பழக்கத்தைச் — சையனவே
தீர்க்கும் அறிஞன் சிதம்பரநா தன்செவ்வேள்
நோக்கினுல் வாழ்கபன் னூறு.

மணிவிழா என்ற மணவிழாக் கொண்ட
துணிவார் சிதம்பர நாத! — மணிமணியாய்க்
கொண்டாடி வாழக் குணம்பெரிய நாயகியால்
உண்டாடி வாழ்க உவந்து.

சித்த மருத்துவர், புலவர் **அ. அண்ணாமலை**

தமிழாசிரியர்

தென்னிந்தியத் திருச்சபைச் சமுதாய ஆதார ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, ஈரோடு.

உலகம் உவப்ப உயர்ந்தோர் ஏத்தும்
நலம்பல நிலவி நானிலம் போற்றும்
பொன்னி யாற்றால் பொன்னேர் சாலியை
மன்னிய மக்கட்கு மகிழ்ந்தே யளிக்கும்
சோழநா டதனில் தோன்றிய தமிழ !
ஆழம் நிறைந்த அருந்தமிழ்ச் செல்வ !
பைந்தமிழ் ஆங்கிலம் பாங்குறப் பயின்று,
தைத்திரு நாளெனத் தழைக்கும் தலைவ !
பேரா சிரியப் பெரும்பணி யாற்றி,
ஆரவார மின்றி அருந்துணை வேந்தாய்ப்
பாரோர் புகழப் பாங்காய்த் திகழ்ந்தாய் !
தண்டமிழ் ஆசிரியர் தலைமை தாங்கிக்,
கண்டோர் களிக்கக் கவலை தீர்த்தாய் !
மேனாடு பலவே மேன்மையாய்ச் சென்று,
தேனொடு தீந்தமிழ் தெளிவா யளித்தாய் !
ஆசிரியப் பணிதனை ஆசறச் செய்து,
நாட்டுப் பணியில் நாட்டங் கொண்டு,
மேட்டியாய் மேலவை உறுப்பாய்த் திகழ்ந்தாய் !
நூல்கள் யாத்து நுண்ணிய அறிவினை
ஆல்போல் தழைக்க ஆவன செய்தாய் !
காளையர் பயிலும் கல்லூரித் தலைவ !
வேளை தவரு விழுமிய பண்பே !
நக்கீரர் எனவே நாநலம் பெற்றாய் !
அக்கம் பக்கம் அகிலம் யாவும்
தேன்தமிழ் பரப்பித் தென்னகம் சிறக்க,
மான்விழி மங்கை பங்கனை மருவிப்
பான்மொழித் தேவியொடு பன்னாள் வாழியர் !

வித்துவான் வி. ப. கா. சுந்தரம், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை-2

(16 எழுத்துப் பாடல்)

சொல்லுக் கழ(கு)அருள்; சோலைக் கழகு கனிதரலாம்;
வில்லுக் கழகு குறிதவ றுதெய்தல்; நற்கொடையே
செல்வர்க் கழகு; செழுங்கொடை ராயர்கல் லூரியெனும்
இல்லுக் கழகு சிதம்பர நாதர்நற் செவ்வியரே.

விருத்தம்

தென்னகத்தில் சீரிய திருக்கோயில் சிதம்பரம்;
    தெளிவுறக் கண்டவர்க்கு இகம்பரம்
தென்னகத்தில் செய்யுளின் யாப்பறிவில் துறைபோய
    தெள்ளிய ஆய்(வு)அறிஞர் சிதம்பரனர்
தன்னகத்தில் தமிழ்ப்பற்றுத் தழைத்தோங்கத் தண்ணளியால்
    தளராது தொண்டாற்றும் தகுசான்ரேர்
என்னவிதம் சொன்னலும் இவர்புகழ் விஞ்சிநிற்கும்
    எளியோனல் இயம்புவது அரிதம்மா.

அகந்தை எனும்கிழங்கை அகத்தினில் அகற்றியவர்
    அன்புநெறி ஆர்ந்தினிது பழகுபவர்
உகந்த சொற்பெருக்கால் உயர்நெறியை
    உளத்தினில் ஊற்றெடுக்க ஓதுபவர்
பகர்ந்த சொற்கலையைப் பல்காலும் பயின்றவரும்
    பாராட்ட ஆய்வுரை பகர்வர்
அகன்ற பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத்
    தமிழக ராதியின் அகரமிவர்.

செம்மனச் செம்மல்

'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன், M.A., தியாகராசர் கல்லூரி, மதுரை.

செம்மனத்துச் செம்மலிவர் எந்த நாளும்
சிரித்துமகிழ் செல்வர்இவர்; இவர்பால் கற்றுத்
தம்மினத்தின் நலம்பெருக உழைத்து நாளும்
தமிழகத்தை ஆள்கின்ற அமைச்சர் பல்லோர்!
தம்மறுப தாண்டுமணி விழாவை இன்று
''தமிழகநல் அரசு''வரும் நாளில் கண்ட
எம்முடைய பேராசான் ஆட்சி வல்ல
எழில்தலைவர் சிதம்பரனுர் வாழ்க! வாழ்க!!

கணக்காயர் பாரதியார் தம்பால் கற்றுக்
கனிதமிழின் மேன்மை நலம் காக்கும் தோன்றல்!
இணங்காத பேர்களையும் அன்பினுலே
இணக்குகிற இயல்புடையார்! ஆள வல்லார்!
குணத்தாலே குன்றனையார்! சிரிப்புக் காட்டிக்
குற்றத்தைக் களைந்தெறியத் தயங்கார்! ''என்றும்
அணைத்தேதான் இளைஞர்களை வளர்த்தல்'' என்னும்
அறவுணர்வுச் செயலாளர்! கடமை வீரர்!!

ஆங்கிலத்தைக் கற்றதுவும் தமிழின் மேன்மை
அறிவதற்கே; அனைத்துலக நாடு கட்குப்
பாங்குடனே சென்றதுவும் தமிழ்ப்பண் பாட்டைப்
பரப்புதற்கே; மேனுட்டார் உடையில் தோற்றம்
தாங்கிடினும் தமிழுள்ளம் சிறக்கும் அங்கே!
தமிழ்வளர்க்கும் முதல்வரிவர் வாழ்க என்போம்!
ஈங்கிவரால் தமிழ்த்தாயும் எழிலைப் பெற்ருள்
எழில்தமிழால் இவர்வாழ்வும் தழைத்தல் காணீர்!

திருவளரும் தென்னுட்டின் புகழ்மிக் கோங்கச்
செந்தமிழ்க்கோர் காவலராய்த் திகழும் செம்மல்!
உருவுயர நலமுயரும் தோன்றல்! பண்பால்
உளமுயர நடுநிலைமை போற்றும் சீரார்!!
பெருமைமிகு சிதம்பரனுர், தூய அன்பைப்
பெறும்பெரிய நாயகியார் இருவர் தாமும்
அருமைமிகு மீனுட்சி உடனமர்ந்த
அண்ணலருள் பெற்றென்றும் வாழ்க! வாழ்க!!

மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வரும்
சென்னைச் சட்ட மேல்மன்ற வுறுப்பினருமான

பேராசிரியர் – செந்தமிழ்க்காவலர்

டாக்டர் **அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள்,** M.A..Ph.D..

மணிவிழாவிற் பங்குகொண்ட பெருமக்களுக்கு
மனங்கனிந்து சொன்ன

நன்றியுரை

பெருமக்களே, தாய்மார்களே, இந்த மணிவிழா இனிது நிறைவெய்துகின்ற நிலையிலிருக்கின்றது. இதற்கிடையில் இன்றைய விழாவிற் பங்குகொண்ட உங்கள் யாவர்க்கும் நன்றி கூறுவதற்கு முன்வந்துள்ளோம். விழாக்களில் நன்றி கூறுவது அன்றும் இன்றும் மரபாக உள்ளது. இதுபோலவே நன்றி கூறும்போது எழுந்து செல்லுவதும் சிலவிடங்களில் மரபாகவுள்ளது. இங்குள்ள நீங்கள் யாவரும் கற்றவர்கள். பல விழாக்களிற் பங்குகொண்டு அவற்றைச் சிறப்பித்தவர்கள் நீங்கள். எனவே உங்களுக்கிடையில் நன்றி கூறுவதில் சிறப்புண்டு. ஆதலின் நன்றிகூற முற்படுகின்றோம்.

இன்றைய உலகியற்படி உங்கள் அனைவர்க்கும் இதயங்கனிந்து நன்றி கூறுகிறோம். பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவர் ஆயிரமாயிரம் அறங்கள் கூறியவர், நன்றி சொல்லக் கூறவில்லை. ''எல்லாக் கருத்துகளுக்கும் உறைவிடமான திருக்குறளில் நன்றி கூறலுக்கு இடமில்லையா ?'' என எண்ணுவீர்கள். ''எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லையாம் '' என்று புலவர்கள் பாராட்டிய நூலில் நன்றி கூறலுக்கு இடமில்லாமலா போனது என நினைப்பது இயல்பு தானே. எல்லாஞ் சொன்ன திருவள்ளுவர் நன்றி பற்றிச் சொல்லாமல் இருப்பாரா ? பார்ப்போம் அது பற்றி.

திருக்குறளில் 'செய்ந்நன்றியறிதல்' என்பதொரு தலைப்புள்ளது. அது 'செய்ந்நன்றி கூறுதல்' என்று சொல்லப்படவில்லை. அறிதலுக்கும் கூறுதலுக்கும்

வேறுபாடுண்டு. அறிதல் மனத்தின் தொழில், கூறுதல் வாயின் தொழில், மனமும் வாயும் ஒரே உடம்பில் அமைந்திருந்தாலும் சிலவிடங்களில் இரண்டும் இணங்கியும் சிலவிடங்களில் அவை இணங்காமலும் இருத்தல் கூடும். இது பற்றியே ''உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்றார் வள்ளலார். பழமொழியும் உப்பிட்டவரை உள்ளவரையும் நினைக்க வேண்டுமென்றுதான் கூறுகின்றது. திருவள்ளுவர் கருத்தும் இது.

இக்கால வழக்கப்படி உங்கள் யாவர்க்கும் நன்றி சொல்லுகிறோம். அக்கால வழக்கப்படி நன்றி யறிகிறோம். ஆடவரும் மகளிருமாகத் திரண்டு வாழ்த்துக் கூறுவதில் நல்ல ஆற்றல் இருத்தலை நம் முன்னோர்கள் அறிந்தார்கள். பயிர்வகை களுக்கு உரம்போல வாழ்த்துரைகள் உயிர் வாழ்வுக்குப் பயன்படுவதுண்டு. ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து அடுத்தடுத்து அக்குழந்தைக்கு விழாக்கள் நிகழும். குழந்தை பிறந்த பதினாரும்நாள் வீடுகூடுதல். பத்தாம்மாதம் சோறு ஊட்டுதல், பன்னிரண்டாம் மாதம் முடியெடுத்தல், பின் காது குத்துதல், பள்ளிகடு வைத்தல், திருமணம் செய்வித்தல், அறுபதாண்டு நிறைவு என நிகழ்ச்சிகள் பல நிகழும்.

இந்நிகழ்ச்சிகளில் உறவினர், பெருமக்கள் பங்குகொள்வதும், உண்டு மகிழ்வதும், நல்வாழ்த்துக் கூறுவதும், ஒரு நிகழ்ச்சியிற் கூறும் வாழ்த்து அடுத்த நிகழ்ச்சிவரை உதவுவதும் கண்கூடு. இவற்றிற்கிடையில் ஆண்டுக்காண்டு பிறந்த நாள்விழாக் கொண்டாடப்பெறுவதுமுண்டு. இவற்றிற் சிலவற்றைக் கண் மூடிப் பழக்கமெனக் கருதியும், செல்வக் குறைபாட்டை நினைத்தும் இந்நாளிற் கைவிட்டுள்ளோம். இவற்றைக் கொண்டாடும் வீட்டுக் குழந்தைகள், இவற்றாலோ வேறு எவற்றாலோ செழித்திருத்தல் காணுகின்றோம். இவ்விழாக்களில் இறைவழிபாடு முதலிடம் பெறுதலும் அது துணைபுரிவதும் இயல்பு.

இந்நாளைய புலவர்களில் புலத்துறை முற்றிய புலவர், நமது டாக்டர் செட்டியாராகிய இவர்கள். 'புலனழுக கற்ற அந்த ணாளர்' என்று மாறோகத்து நப்பசலையார் என்னும் அம்மையார் கபிலரைப் புகழ்ந்தார். அப்புகழுரை டாக்டர் அ. சி. செட்டியார் அவர்களுக்கும் பொருந்தும். இவர்கள் புலமை இப்போதைய தமிழகத்துக்கு மட்டுமில்லை; இந்திய நாட்டுக்கும் இன்றியமையாதது. இவர்களை வாழ்விக்க வேண்டும் நூற்றிருபதாண்டு. ஔவையார் வாழவேண்டுமென்று நினைத்த அதியமான், அவரை வாழ்வித்தான் அன்று. அவன் எண்ணத்தை நிறை வேற்றியது நெல்லிப்பழம். அஃதில்லாத இந்நாளில் வாழ்த்துரையும், பாராட்டுரை யுந்தானே நமக்குதவி. ஆண்டவனைப் பார்த்தும் பொலிக, பொலிக, பொலிக, என்பதும் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு சொல்லுவதும் அவனை வாழ்வித்தற்கன்றோ!

ஆங்கிலத்திலும் தமிழிலும் ஓங்கிய அறிவுபெற்ற நமது டாக்டர் செட்டியார் அவர்கள், தம் பேராசிரியரான நாவலர்-கணக்காயர்-டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் போலவே நூலியற்றியும், உரையெழுதியும், பாட்டுகள் பாடியும், பாடங்கற்பித்தும், நூலாராய்ந்தும், தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும்,

மறுப்புகள் கூறியும் தமிழ் நலங்காத்து வருதல் நாடறிந்த தொன்று. இதுகாறும் இவர்கள் புரிந்த தொண்டினைப் பாராட்டுதற்கும், இது தொடர்ந்து நடைபெறு வதற்குமாகவே இவ்விழாவெடுத்தோம். இவ்விழா இங்ஙனம் சிறப்பாக நிகழ் வதற்கு வரவேற்புக் குழுவினரான இந்நகரப் பெருமக்கள் மனமுவந்து பொருளுதவி புரிந்தனர்.

அதன்மேல் இங்கு அமர்ந்துள்ள சான்றவர்களை வேண்டிக் கொண்டோம். அவர்களும் மருது வருகைபுரிந்து தத்தங்கடமையை யாற்றி விழாவைச் சிறப் பித்துள்ளனர். இராஜா சர் மு. அ. முத்தையா செட்டியாரவர்கள் தலைமைதாங்கி யும், கலைத்தந்தையார் கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்களும், கலை யன்னையார் திருமதி. இராதா தியாகராசனவர்களும் முறையே டாக்டர் அ. சி. செட்டியாரவர்களுக்கும் திருமதி. பெரியநாயகியம்மா அவர்களுக்கும் பொன் னுடை - பட்டாடைகள் வழங்கியும், சிவனெறித் திருமடங்கள் அன்பளிப்புகள் நல்கியும் சிறப்பித்தனர். அமைச்சர்களான மேதகு. இரா. நெடுஞ்செழியனவர் களும், மேதகு. K. A. மதியழகனவர்களும் முறையே மலர் வெளியிட்டும், கேடயம் கொடுத்தும் பெருமை செய்தனர். திருவாளர்களான கி. ஆ. பெ. விசுவநாதமவர் களும், ம. பொ. சிவஞானமவர்களும், க. அன்பழகனவர்களும், பி. டி. இராசனவர் களும் பாராட்டியும் வாழ்த்தியும் மேன்மைப்படுத்தினர், இங்குக் கூறிய யாவர்க்கும் நன்றி சொல்கிறோம்.

தியாகராசர் கலைக்கல்லூரி மாணவர்கள் யாவரும் திரண்டுவந்து விழாவைச் சிறப்பித்தனர். மேலும் தங்கள் முதல்வரான டாக்டர் அ. சி. அவர்கள் பெயரால் ஆண்டுதோறும் சிறந்த பரிசு வழங்குவதற்குப் போதுமான பணமும் தொகுத்துள் ளனர். பெருமக்களும், பெருமாட்டியர்களுமாகத் தாங்கள் பெரும்பான்மையாக வந்திருக்கின்றீர்கள். இவ்விழா, இனிது நடைபெறுவதற்கு இத்தியாகராசர் கல்லூரி யரங்கினைக் கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்கள் இடமாகக் கொடுத்தனர். தியாகராசர் நன்முறைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மேடை யொப்பனை செய்துதவினர். தொடக்கத்தில் மங்கல இசை இசைத்தும், இறை வணக்கம் பாடியும், சிலர் விழாவுக்கு அழகு ஊட்டியுள்ளனர். செய்தியாளர்கள் நாங்கள் தந்த செய்திகள் வெளிவரத் துணைசெய்தனர். இங்குக் கூறிய பலவகை யுதவிகளை யெண்ணி யெண்ணி யிறுமாப்புறுகிறோம். இணையற்ற முறையில் நன்றியும் சொல்லுகிறோம். மலருக்கு உறுதுணைபுரிந்த பண்டித மீ. கந்தசாமிப் புலவரவர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி.

இங்ஙனம்,
தங்களன்புள்ள,

மதுரை.
7—9—1967

ஆவி. க. தியாகராசச் செட்டியார்
டாக்டர் லலிதா காமேசுவரன்
வரவேற்புக்குழுத் தலைவர்கள்

பாங்க் ஆப் மதுரை லிட்

மதுரை

இயக்குநர் குழு

திரு. கருமுத்து-தியாகராசன் -தலைவர்
திரு. உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணாமலை செட்டியார்
திரு. ந. சொ. அரு. அருணாசலன் செட்டியார்
திரு. பி. கு. நா. கும. வயிரவன் செட்டியார்
திரு. K திருமலைசாமி ஐயர்
திரு. I. A. சிதம்பரம் பிள்ளை
திரு. கா. அரு. பழ. பழநியப்ப செட்டியார்
திரு. சி. நெ. வீர. நா. சுப்பிரமணியன் செட்டியார்

சேமிப்புக் கணக்கு $4\frac{1}{2}$%

தினசரி இருப்பின்பேரில் வருடம் ஒன்றுக்கு வட்டி $4\frac{1}{2}$%.
கணக்கிலிருந்து வாரம் ஒருமுறை திரும்பப்பெறும் அதிகபட்சத் தொகை ரூ. 5000/-

தவணை டிபாசிட் 8%

ரூ. 100/-ம் அதற்கு மேற்பட்ட தொகையும் ஏற்றுக்கொள்ளப்படும்.
டிபாசிட் செய்யும் காலத்திற்கேற்ப வட்டி $5\frac{1}{2}$% முதல் 8% வரை அளிக்கப்படுகின்றன.

ரெக்கரிங் டிபாசிட் $8\frac{1}{2}$%

டிபாசிட்டுகள் 12, 30, 45, 60, 80 மாதங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அதிகபட்சம் $8\frac{1}{2}$% வட்டி வரை கிடைக்கிறது.

S. அழகுசுந்தரம்
உதவிக்காரியதரிசி

T. K. ராமசுப்பிரமணியம்
காரியதரிசி

சாத்தப்பா சுப்பிரமணியன்
பொதுநல உறவு அலுவலர்

SAROJA MILLS LIMITED

Registered Office: Singanallur Post, Coimbatore-5

Tel. Address: "SAROJA" Coimbatore Phone: 22357

Branch:

THI[illegible]ARAJAR MILLS

P. [illegible]

MA[illegible]

Factory: Ka[illegible]ur, Madurai District

Tel. Address: "THIAGARMIL" Madurai Phone: 8234

TOTAL SPI[illegible] 42,080

Manufacturing:

20s, 40s, 60s, 80s, 100s & 120s count single & double yarn in hanks and on cones, carded and combed — Mercerised.

Managing Agents:

THIAGARAJA CHETTY & SONS PRIVATE LTD.,

MADURAI

Tel. Address: "RUKMILL" Madurai

Telephone:
Regd. Office: 3211 (5 Lines)
Factory: 2375

RUKMINI MILLS LIMITED

Registered Office: SILAIMAN (Post) Madurai Dist

Factory: **SILAIMAN** Ramanathapuram Dist.

TOTAL SPINDLES 22,000

OUR 50s, 60s, 80s & 100s FINE COUNT YARN BEARING

RUKMINI WEDDING

MARK IS EXTENSIVELY USED FOR EXQUISITE AND SUPER HANDLOOM CLOTHS

Managing Agents:

Karumuttu Private Limited, Madurai

Printed at Lalit[illegible]a Printers Private Ltd., Madurai—1.